54 கணேசமூர்த்தி, திரு. ஏ. ..	மொடக்குறிச்சி.
55 கணேசன், திரு. எல். ..	ஒரத்தநாடு.
56 கணேசன், திரு. க. சொ. ..	ஜெயங்கொண்டம்.
57 கணேசன், திரு. சா. ..	தியாகராய நகர்.
58 கணேசன், திரு. வே. ..	மங்களூர் (செ.வ.).
59 கந்தசாமி, திரு. கே. ..	கிணத்துக்கடவு.
60 கந்தசாமி, திரு. கே. பி. ..	திருச்செந்தூர்.
61 கரீம், திரு. எம். கே. ..	கூடலூர்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதியின் பெயர்.
(1)	(2)
''க''—தொடர்ச்சி	
62 கருணாநிதி, டாக்டர் மு. ..	துறைமுகம்.
63 கருப்பசாமி, திரு. எஸ்.எஸ்.	சாத்தூர்.
64 கருப்பையா மூப்பனார், திரு. ஜி.	பாபனாசம்.
65 கன்னையன், திரு. க. ..	தொட்டியம்.
66 கஜபதி, திரு. டி. ஆர். ..	ஆற்காடு.
67 காஞ்சனா, டாக்டர் க. ..	கிருஷ்ணகிரி.
68 காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி, திரு. ..	முதுகுளத்தூர்.
69 காளியப்பன், திரு. பி. ..	ஒட்டன்சத்திரம்.
70 கிருஷ்ணமூர்த்தி, டாக்டர் து.	சிதம்பரம்.
71 கிருஷ்ணன், திரு. சி. ..	ஓமலூர்.
72 குணசேகரன், திரு. எஸ். ..	தலைவாசல் (செ.வ.).
73 குமரி அனந்தன், திரு. ..	சாத்தான்குளம்.
74 குருநாதன், திரு. சு. ..	பாளையங்கோட்டை.
75 குருமூர்த்தி, திரு. ஜி. ஜி. ..	பவானி.
76 கோதண்டம், திரு. ஏ. ..	ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
77 கோபாலகிருஷ்ணன், திரு. வெ.	மேட்டுப்பாளையம்.
78 கோவிந்தசாமி, திரு. சி. ..	திருப்பூர்.
79 கோவிந்தசாமி, திரு. வி. சி. ..	காவேரிப்பட்டினம்.
80 கோவிந்தராஜன், திரு. சி. ..	நெல்லிக்குப்பம்.
81 கோவிந்தன், திரு. வெ. ..	பேரணாம்பட்டு (செ.வ.).
''ச''	
82 சண்முகம், திரு. சி. ..	ஆலந்தூர்.
83 சந்திரசேகர், திரு. வி. பி. ..	பொள்ளாச்சி.
84 சந்திரசேகரன், டாக்டர் க. ..	ஆலங்குடி.
85 சம்சுதீன் என்கிற கதிரவன், திரு.	கடையநல்லூர்.
86 சம்பத், திரு. ஏ. ஜி. ..	முகையூர்.
87 சற்குணம், திருமதி எஸ்.பி. ..	இராதாகிருஷ்ணன் நகர்.
88 சாத்தையா என்கிற தமிழ்க்குடிமகன், டாக்டர் மு. ..	இளையான்குடி.
89 சாதிக்பாட்சா, திரு. எஸ்.ஜே.	உடுமலைப்பேட்டை.
90 சாந்தகுமாரி, டாக்டர் த. ..	தாராபுரம் (செ.வ.).
91 சாமிநாதன், திரு. ஆர்.	திருமங்கலம்.
92 சிங்காரம், திரு. ஆர். ..	பேராவூரணி.
93 சிவசுப்பிரமணியன், திரு. சா.	ஆண்டிமடம்.
94 சிவலிங்கம், திரு. எஸ். ஆர். ..	பனைமரத்துப்பட்டி.
95 சிவலோகம், திரு. எஸ். ..	புவனகிரி.
96 சின்னசாமி, திரு. கே. ..	சேந்தமங்கலம் (ஆ.வா.)

தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும்.		தொகுதியின் பெயர்.
(1)		(2)
"ச"—தொடர்ச்சி		
97	சின்னசாமி, திரு. ரா. ..	தர்மபுரி.
98	சின்னசாமி, திரு. வி. கே. ..	பவானிசாகர்.
99	சீரங்கன், திரு. எம். ..	மேட்டூர்.
100	சீனிவாசன், திரு. பெ. ..	சிவகாசி.
101	சுந்தர், திரு. கே. ..	உத்திரமேரூர்.
102	சுந்தரதாஸ், திரு. மா. ..	விளவன்கோடு.
103	சுந்தரம், திரு. க. ..	பொன்னேரி (செ.வ.).
104	சுந்தரம், திரு. கே. ஆர். ..	குடியாத்தம்.
105	சுந்தரம், திரு. ப. ..	திருப்பத்தூர்.
106	சுந்தரராஜ், டாக்டர் எஸ். ..	பரமக்குடி (செ.வ.).
107	சுப்பிரமணிய பிள்ளை, திரு. கே.	கன்னியாகுமரி.
108	சுப்பிரமணியம், திரு. தூ.க.	சத்தியமங்கலம்.
109	சுப்பிரமணியன், திரு. அ.லெ.	திருநெல்வேலி.
110	சுப்பிரமணியன், திரு. வே. நா.	பெருந்துறை.
111	சுப்பு, திரு. ஏ. ..	ராசிபுரம்.
112	சுப்புலட்சுமி செகதீசன், திருமதி	ஈரோடு.
113	சுப்பையா, திரு. வ. ..	திருமயம்.
114	செங்குட்டுவன், திரு. ஏ. ..	மயிலாடுதுறை.
115	செங்கை சிவம், திரு. ..	பெரம்பூர் (செ.வ.).
116	செங்கோட்டையன், திரு. கே. ஏ. ..	கோபிசெட்டிப்பாளையம்.
117	சேட்டு, திரு. எம். ..	செங்கம் (செ.வ.).
118	சொக்கர், திரு. ரா. ..	விருதுநகர்.
119	சௌந்திரபாண்டியன், திரு. ந.	சமயநல்லூர் (செ.வ.).
"ட"		
120	டேனியல்ராஜ், திரு. எஸ். ..	ஸ்ரீவைகுண்டம்.
"த"		
121	தங்கபாண்டியன், திரு. வே. ..	அருப்புக்கோட்டை.
122	தங்கம், திரு. அ. ..	ஸ்ரீவில்லிபுத்தூர்.
123	தங்கராஜன், திரு. எஸ். ஏ. ..	திண்டுக்கல்.
124	தங்கராஜு, திரு. ஏ. ..	காட்டுமன்னார்கோயில் (செ.வ.).
125	தங்கவேல், திரு. எம். ..	முசிறி.
126	தங்கவேல், திரு. என். ..	குன்னூர் (செ.வ.).
127	தங்கவேலு, திரு. ச. ..	சங்கரநாயனார்கோவில் (செ.வ.).

தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதியின் பெயர்.
(1)	(2)
"த"—தொடர்ச்சி	
128 தம்புசாமி, திரு. வி. ..	திருவாரூர் (செ.வ.).
129 தமிழ்மணி, திரு. வீ. ..	செங்கல்பட்டு.
130 தயாளன், திரு. ஏ. சி. ..	ஆரணி.
131 தனபாலன், திரு. கே.ஆர்.ஜி.	சேலம்-1.
132 தனராஜ், திரு. வி. ..	வந்தவாசி (செ.வ.)
133 திருநாவுக்கரசு, திரு. எஸ். ..	அறந்தாங்கி.
134 திருமூர்த்தி, டாக்டர் து. ..	திருப்போரூர் (செ.வ.).
135 திருவேங்கடம், திரு. பெ.சு. ..	கலசப்பாக்கம்.
136 துரை சந்திரசேகரன், திரு. ..	திருவையாறு.
137 துரைசாமி, திரு. பி. ..	நாமக்கல் (செ.வ.).
138 துரைபாண்டி, திரு. பெ. ..	மானாமதுரை (செ.வ.).
139 துரைமுருகன், திரு. ..	காட்பாடி.
140 துரை ராமசாமி, திரு. ..	வெள்ளக்கோயில்.
141 தென்னரசு, திரு. எஸ். எஸ்.	திருப்பத்தூர்.
142 தேவராஜ், திரு. வி. எம். ..	வேலூர்.
"ந"	
143 நஞ்சப்பன், திரு. ந. ..	பெண்ணாகரம்.
144 நடராசன், திரு. ஆ. ..	பேரூர்.
145 நடராசன், திரு. பொ. ..	திருத்தணி.
146 நடேச உடையார், திரு. எகால் மு. ..	ரிஷிவந்தியம்.
147 நடேசன், திரு. ஆர். ..	திருவட்டாறு.
148 நந்தகோபால கிருட்டிணன், டாக்டர் கோ.	பண்ருட்டி.
149 நாராயணன், திரு. ராம. ..	காரைக்குடி.
150 நூர்முகமது, திரு. செ. ..	பத்மநாபபுரம்.
151 நேரு, திரு. கே. என். ..	லால்குடி.
"ப"	
152 பஞ்சாட்சரம், திரு. ஆர். ..	மேல்மலையனூர்.
153 பழனிச்சாமி, திரு. டி. கே. ..	திருவொற்றியூர்.
154 பழனிச்சாமி, திரு. ஜி. ..	திருத்துறைப்பூண்டி (செ.வ.).
155 பழனிசாமி, திரு. க. ..	எடப்பாடி.
156 பழனிவேல், திரு. என். ..	பழனி (செ.வ.).
157 பன்னீர்செல்வம், திரு. மா. ..	சீர்காழி (செ.வ.).
158 பாண்டியன், திரு. பி. எச். ..	சேரன்மாதேவி.
159 பாப்பா உமாநாத், திருமதி ..	திருவரம்பூர்.
160 பாப்பா சுந்தரம், திரு. அ. ..	குளித்தலை.
161 பால்ராஜ், திரு. எஸ். ..	மதுரை-மத்தியத் தொகுதி

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும், (1)	தொகுதியின் பெயர். (2)
"ப"—தொடர்ச்சி	
162 பாலசுப்பிரமணியன், திரு. அ. வே. ..	திருநாவலூர்
163 பாலசுப்பிரமணியம், திரு. எஸ். ஆர். ..	பொங்கலூர்
164 பாலையா, திரு. ஆ. ..	கொளச்சல்.
165 பிச்சாண்டி, திரு. கே. ..	திருவண்ணாமலை
166 பிச்சைமுத்து, திரு. ரெ. ..	பெரம்பலூர் (செ.வ.)
167 பீட்டர் ஆல்போன்ஸ்,திரு. சா.	தென்காசி.
168 புகழேந்தி, திரு. இ. ..	கடலூர்
169 பூவராகன், திரு. கோ. ..	விருத்தாசலம்
170 பெரியசாமி, திரு. என். ..	தூத்துக்குடி
171 பெரியசாமி, திரு. ஐ. ..	ஆத்தூர்
172 பெரியசாமி, திரு. வே. ..	அந்தியூர் (செ.வ.)
173 பெரியண்ணன், திரு. அ. ..	புதுக்கோட்டை
174 பெருமாள், திரு. செ. ..	ஏற்காடு (ஆ.வா.)
175 பொன்முடி, திரு. டி. ..	தண்டராம்பட்டு
176 பொன்முடி என்கிற தெய்வசிகாமணி, டாக்டர் க.	விழுப்புரம்
177 பொன். முத்துராமலிங்கம் திரு.	மதுரை (மேற்கு)
178 பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ்.	நிலக்கோட்டை (செ.வ.)
179 பொன்னுசாமி, பேராசிரியர் க.	மருங்காபுரி
180 பொன்னுபிள்ளை, திரு. ஜி. ..	தேனி
"ம"	
181 மகேந்திரன், திரு. ஆர். ..	நாட்ராம்பள்ளி
182 மணி, திரு. ஆச்சியூர். எம். ..	நாங்குநேரி
183 மணி, திரு. கே. ஏ. ..	கபிலர்மலை
184 மணி, திரு. கோ. சி. ..	கும்பகோணம்
185 மணிமாறன், திரு. மா. ..	நன்னிலம் (செ.வ.)
186 மதிவாணன், திரு. இரா. ..	ராயபுரம்
187 மலர்மன்னன், திரு. அ. ..	திருச்சிராப்பள்ளி-1.
188 மனோகரன், திரு. நாஞ்சில் கி.	திருவல்லிக்கேணி.
189 மனோகரன், திரு. ப. ..	சிவகங்கை
190 மாசிலாமணி, டாக்டர் சி. ரா.	திண்டிவனம்
191 மாசிலாமணி, திரு. தி. ரா. ..	பூந்தமல்லி
192 மாதப்பன், திரு. கொ. ..	பாலக்கோடு
193 மாரப்பன், திரு. பி. ..	காங்கேயம்
194 மாரிமுத்து, திரு. அ. ..	வானூர் (செ.வ.)
195 முகமது சித்திக், திரு. எம். ..	பூம்புகார்
196 முத்துசாமி, திரு. ப. ..	வேடசந்தூர்
197 முத்தையன், திரு. எம். ..	சங்கராபுரம்
198 முத்தையா, திரு. எம். ..	ஓட்டப்பிடாரம் (செ.வ).

	தொடர் எண்ணும் உறுப்பினர் களின் பெயரும். (1)	தொகுதியின் பெயர். (2)
	"ம"—தொடர்ச்சி	
199	முருகேசன், திரு. பொ.	காஞ்சீபுரம்
200	முல்லைவேந்தன், திரு. வ.	மொரப்பூர்
201	முனிரத்தினம், திரு. ஆ. மு.	சோளிங்கர்
202	முனிரத்தினம், திரு. எஸ்.ஆர்.	திருவள்ளூர்
203	மூக்கன், திரு. ஆர்.	உப்பிலியாபுரம் (ஆ.வா.)
204	மூக்கையா, திரு. எல்.	பெரியகுளம்
205	மோகன், திரு. இரா.	சிங்காநல்லூர்
206	மோசஸ், திரு. எம்.	நாகர்கோவில்
	"ய"	
207	யசோதா செல்லப்பா, திருமதி	வலங்கைமான் (செ.வ.)
	"ர"	
208	ரமணி, திரு. கே.	கோவை (கிழக்கு).
209	ரமணி நல்லதம்பி, திருமதி	ராதாபுரம்
210	ரவி அருணன், திரு.	அம்பாசமுத்திரம்
211	ராமச்சந்திர ரெட்டி, திரு. ந.	ஓசூர்
212	ராமச்சந்திரன், திரு. கே.	மன்னார்குடி
213	ராமச்சந்திரன், திரு. சி.	திருப்பரங்குன்றம்
214	ராமசாமி, திரு. மொஞ்சனூர் ப.	அரவக்குறிச்சி.
215	ராமசுப்பு, திரு. எஸ். எஸ்.	ஆலங்குளம்
216	ராஜு, திரு. எச். எம்.	உதகமண்டலம்
217	ராஜேந்திரன் திரு., எம்.எஸ்.கே.	இராமநாதபுரம்.
	"ல"	
218	லட்சுமி, திருமதி பி.	வால்பாறை (செ.வ.)
	"வ"	
219	வரதராசன், திரு. ஆர்.	சங்கரி (செ.வ.)
220	வரதராசன், திரு. உ. ரா.	வில்லிவாக்கம்
221	வல்லரசு, திரு. பி. என்.	உசிலம்பட்டி
222	விஜயராகவன், திரு. பொன்...	கிள்ளியூர்
223	விஜயேந்திரையா, திரு. டி. சி.	தளி
224	வீராசாமி, திரு. ஆற்காடு நா.	புரசைவாக்கம்
225	வீரையன், திரு. கோ.	நாகப்பட்டினம்
226	வெங்கடாசலம், திரு. பெ.	வீரபாண்டி
227	வெங்கடேஸ்வர தீட்சிதர், திரு. ஒய்.	ஸ்ரீரங்கம்
228	வெள்ளிங்கிரி, திரு. யூ. கே.	தொண்டாமுத்தூர்
229	வேணு, திரு. கி.	கும்மிடிப்பூண்டி
230	வைத்தியலிங்கம், திரு. மீ. அ.	தாம்பரம்

தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதியின் பெயர்.
(1)	(2)
" ஸ "	
231 ஸ்டாலின், திரு. மு. க. ..	ஆயிரம் விளக்கு
" ஜ "	
232 ஜெயலலிதா, செல்வி ஜெ.	போடிநாயக்கனூர்
" ஹ "	
233 ஹமீது இப்ராகிம், திரு. அ. மு.	கடலாடி
" ஸ்ரீ "	
234 ஸ்ரீதர், திரு. ஆர். எஸ். ..	சைதாப்பேட்டை
235 ஆஸ்கார் சி. நிக்லி, திரு. ..	நியமன உறுப்பினர்.

பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்.

திரு. கு. அழகர்சாமி,
தலைமை வழக்கறிஞர்.

சட்டமன்ற பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

30—3—1989

பிழைத் திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
(1)	(2)	(3)	(4)
உள்ளடக்கம்	இனம் 1	1—21	107—127
	இனம் 2 (அ)	21—23	128—129
	2 (ஆ)	23—25	129—131
	2 (இ)	25—26	131—133
	2 (ஈ)	26—27	132—133
		29—31	135—137
	2 (உ)	46—47	152—153
	2 (ஊ)	47	153
	2 (எ)	47—48	153—154
	2 (ஏ)	52	158
	இனம் 3	36—37	139—143
	இனம் 4	17, 31—34, 37—44	133—134, 137—139, 143—150
	இனம் 5	28—29	134—135
	இனம் 6	44—46	150—152
	இனம் 7 (அ)	48	154
	7 (ஆ)	51	158
	7 (இ)	61	167
	இனம் 8	49—51	155—157
	இனம் 9	52	158
	இனம் 10	52—113	158—219
திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்		52—61	158—167
திரு. மா. பன்னீர்செல்வம்		61—65	167—171

D2 53-238—1

பக்கம். (1)	வரி. (2)	பிழை. (3)	திருத்தம். (4)
திரு. எஸ். டி. உகம்சந்த்		65—77	171—183
திரு. ஜி. ஜி. குருமூர்த்தி		78—84	184—190
திரு. அன்பில் பொய்யா மொழி		84—91	190—197
திரு. வி. தம்புசாமி		92—98	198—204
டாக்டர் சி. ரா. மாசிலாமணி		98—103	204—209
திரு. வி. கே. சின்னசாமி		104—112	210—219
	இனம் 11	113—114	219—220
108	கீழிருந்து 6	சொல்வதைள	சொல்வதைப்
	கீழிருந்து 4	கருத்தைப்	கருத்தைத்
111	6	சாதிக்பாசா	சாதிக்பாட்சா
120	கீழிருந்து 17	Transmltter	Transmitter
125	8	டெலிவிஷஸில்	டெலிவிஷனில்
126	கீழிருந்து 21	ாண்புமிகு	மாண்புமிகு
128 உச்சத் தலைப்பு		வினாக்கள்—விடைகள்	நீக்கவும்
151	14	exeept	except
158 உச்சத் தலைப்பு		(டாக்டர் மு. கருணாநிதி)	நீக்கவும்
	கீழிருந்து 15	உம்ாநாத்	உமாநாத்
161	கீழிருந்து 16	திட்டத்தி	திட்டத்தில்
	கீழிருந்து 17–16	போ—வோம்	போடுவோம்
166	20	வீடுகள்	நீக்கவும்
167	கீழிருந்து 10	பத்தை	தை
171	2	படுகை	படுக்கை
174	கீழிருந்து 4	றட்டுவதாக	கூட்டுவதாக
	கீழிருந்து 3	ன்எட்சியில் கடுமையானது	வறட்சியின் கொடுமையானது

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
(1)	(2)	(3)	(4)
	கீழிருந்து 2	ன்வறுதான்	என்றுதான்
	கடைசி வரி	கூஎபதை	என்பதை
175	4	அட்டுமனை	வீட்டு மனைப்
	கடைசி வரி	தெரிவித்துக்கெ ள்கிறேன்	தெரிவித்துக் கொள்கிறேன்.
202	பக்க எண்	ஈ02	202
203	கீழிருந்து 17	கெ ள்கிறேன்	கொள்கிறேன்.
	கீழிருந்து 4	பே வதற்கும்	போவதற்கும்
206	கீழிருந்து 15	கெ ண்டு	கொண்டு
209	கீழிருந்து 16	கிடப்யிலே	கிடப்பிலே

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பிழை திருத்தம்.

தொகுதி 6, எண் 3, நாள் 31–3–1989.

பக்கம். (1)	வரி. (2)	பிழை. (3)	திருத்தம். (4)
உள்ளடக்கம்			
	1.	வினாக்கள்—விடைகள்	
221	கீழிருந்து 3	தொழில் நுட்பப	தொழில் நுட்ப
222	16	டணி தொடங்கி	பணி தொடங்கி
223	18	சே. ரமணி	கே. ரமணி
225	16	தாங்களும் அறிவோம்	நாங்களும் அறிவோப்
	26	நஷ்ட ஈடு	நஷ்ட ஈடு
226	கீழிருந்து 2	அந்தச் சலை	அந்தச் சாலை
227	22	லக்கூட	லும் கூட
230	கீழிருந்து 3	எழிச்சியை	எழுச்சியை
231	1	மாண்புகுமிகு	மாண்புமிகு
236	24	என்ற	என்று
250	கீழிருந்து 9	பரப்ரப்பாகச்	பரபரப்பாகச்
	கடைசி வரி	செப்தி	செய்தி
252	கீழிருந்து 8	விடுவி	விடுவிக்கப்
253	9	citezen	citizen
	32	wi h	with
	33	Na ionalism	Nationalism
	40	போன்த	போன்ற
	41	என்பறை	என்பதை
254	கீழிருந்து 4	வனில்	வேனில்
258	22	எடூக்க	எடுக்க
259	கீழிருந்து 10	ஆர்ப் ஆர்டா	ஆப் ஆர்டர்
264	தேதி வரி	1089 மார்ச் 31	1989 மார்ச் 31

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
(1)	(2)	(3)	(4)
266	கீழிருந்து 6	பேரவைத் தலைவர்	மாண்புமிகு பேரவைத்தலைவர்
277	27	உங்களுக்கு செ	உங்களுக்கு செல்
286	6	முன்சுட்டி	முன்கூட்டி
289	12	இர மச்சந்திரன்	இராமச்சந்திரன்
291	8	தமிழ த்திலே	தமிழகத்திலே
292	2	வை தோம்	வைத்தோம்
293	கீழிருந்து 2	எல்லாம	எல்லாம்
317	5	Bhanvan	Bhavan
	19	Commumication	Communication
322	12	Limi ed	Limited
338	கீழிருந்து 16	கவும்	மிகவும்

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1989, மார்ச் 29, புதன்கிழமை,

பங்குனி 16, விபவ—திருவள்ளுவர் ஆண்டு 2020.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் மு. சாத்தையா என்கிற தமிழ்க் குடிமகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
மற்றைய எல்லாம் பிற.''

நாம் மேற்கொள்ளும் ஒரு செயலில் திட்பம் என்பது ஒருவனுடைய மன உறுதியே ஆகும். அந்த உறுதி தவிர மற்றவையெல்லாம் வேறானவை.

1. இரங்கல் குறிப்பு.

முன்னாள் உறுப்பினர் மறைவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. பி. ஜி. மாணிக்கம் அவர்கள் 8—3—1989ஆம் நாளன்று மறைந்ததை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி, ஜி. மாணிக்கம் அவர்கள் 1952 ஆம் ஆண்டிலிருந்து 1957ஆம் ஆண்டு வரையில் நம்பியூர் ஒதுக்கப்பட்ட தொகுதியிலிருந்தும், மற்றும் 1957 ஆம் ஆண்டிலிருந்து 1962 ஆம் ஆண்டு வரையில் பெரியார் மாவட்டம் பவானி ஒதுக்கப்பட்ட தொகுதியிலிருந்தும், இரண்டு முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, நல்ல முறையில் பணியாற்றி உள்ளார். அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இயற்கை எய்தியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒரு நிமிடம் மௌனமாக எழுந்து நிற்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் ஒரு நிமிடம் மௌனமாக எழுந்து நின்றனர்.)

2. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

கூட்டுறவு ஸ்தாபனங்களுக்குத் தேர்தல்.

9—(*வினா எண். 35) திரு. பெ. சு. திருவேங்கடம், திரு. ஆர். ஈஸ்வரன் மற்றும் திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு ஸ்தாபனங்களுக்குத் தேர்தல் நடத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 13-4-1988 முதல் நடைமுறைக்குக் கொண்டுவரப் பட்டுள்ள, 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்திற்கு, தமிழ்நாட்டில் வலுவான கூட்டுறவு இயக்கம் அமையும் வகையில் சில முக்கியமான திருத்தங்களைக் கொண்டு வருவது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது. தேர்தலுக்கு முன் இத் திருத்தங்களை மேற்கொள்வது அவசியம் என்று தோன்றுங்கால் சட்டத்தை திருத்தியவுடன், பல்வேறு வகைக் கூட்டுறவுச் சங்கங் களுக்கும் வெகு விரைவில் தேர்தல் நடத்தப்படும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கூட்டுறவு ஸ்தாபனங்கள் பல்வேறு நிலைகளில் தேர்தல் நடத்தப்படாமல் பல்லாண்டுக் காலமாக இருந்து வருகின்றன. இந்த அரசு உடனடியாக தேர்தல் நடத்து வதாக ஏற்கெனவே அறிவித்து இருக்கிறது. இப்போது சட்டத் திருத்தங்கள் எல்லாம் வரவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். விரைவாக இந்தச் சட்டத் திருத் தங்களைக் கொண்டு வந்து எப்போது தேர்தல் நடத்த அரசுக்கு உத்தேசம் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, தேவையான சட்டத் திருத்தங்களை இந்தக் கூட்டத் தொடரிலேயே கொண்டு வந்து இந்த மன்றத்திலே சட்டத் திருத்தங்கள் நிறைவேறியதற்குப் பிறகு உடனடியாக தேர்தலை நடத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

1989 மார்ச் 29]

திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்டகாலமாக கூட்டுறவுச் சங்கங்களில் புதிய உறுப்பினர்கள் சேர்க்கப்படாமல் இருக்கிறது. எனவே, தேர்தல் நடத்துவதற்கு முன்பு புதிய உறுப்பினர்களைச் சேர்த்து தேர்தல் நடத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, சட்டத் திருத்தங்கள் நிறைவேற்றப்பட்ட உடன் புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கான அவகாசம் நிச்சியமாகக் கொடுக்கப்படும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டத்திருத்தம் முடிந்து, தேர்தல் நடத்தப் படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்கிறார்கள். ஏற்கெனவே, நான் ஒருமுறை இங்கே சொல்லுகின்றபோது கூட, சட்டத்திற்கு விரோதமாக ஏற்கனவே 10 (ஏ) (1) என்ற பெயரால் பல பேர்களை, தனி அதிகாரிகள் என்று நியமித்து, அவர்கள் தான் இன்றையதினம் கூட்டுறவு அரிசிக் கடைகளில் ஏராளமான ஊழல் செய்வதற்குக் காரணமாக இருக்கிறார்கள். அவர்களை உடனடியாக நீக்கி—தேர்தல் வரையிலே—ஏற்கெனவே துறையிலே இருக்கின்ற அதிகாரிகளை நியமிக்க அரசு முன்வருமா என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, இது பற்றிய புகார்கள் ஆளுநருடைய ஆட்சியில் அரசுக்கு வந்திருக்கிறது. அதன் மீது அரசாங்கம் பரிசிலனை செய்து கொண்டு இருக்கிறது.

திரு. வீ. தமிழ்மணி : பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்தில் தனி அதிகாரிகள் மூலம் கூட்டுறவுச் சங்கங்கள் இயக்கப்பட்டதால், அதிலே ஊழல்கள் அதிகம் நடைபெற்று, அந்தச் சங்கங்கள் இழுத்து மூடப்பட்டு இருக்கின்றன. அந்தச் சங்கங்களை உடனடியாக நடைபெறச் செய்வதற்கு—நாமினேசன் அடிப்படையிலே உறுப்பினர்களை நியமித்து, அந்தச் சங்கங்களை உடனடியாகச் செயல்படுத்துவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, எங்கெங்கே தவறுகள் நடைபெற்று இருக்கின்றனவோ அதைப்பற்றியெல்லாம் அரசாங்கம் பரிசீலித்து வருகிறது. ஆனால் எந்தக் கூட்டுறவுச் சங்கத்திற்கும் இந்த அரசாங்கம் இப்போது நாமினேசன் செய்வதாக உத்தேசம் இல்லை.

திரு. ஆர். ஈஸ்வரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களில் 100 விவசாயிகள் கடன் வாங்கியிருந்தால், 50 பேர்கள் கடனைக் கட்டியிருக்கிறார்கள்.

50 பேர்கள் கட்ட முடியாத சூழ்நிலை இருக்கிறது. அவர்களுக்கு இந்த அரசு கடனை ரத்து செய்வோம் என்று அறிவித்து இருக்கிறது. அப்படி ரத்து செய்தால்தான் அவர்கள் வாக்களிக்க முடியும். இல்லை என்றால், வாக்களிக்க முடியாத சூழ்நிலை ஏற்படும். ஆகவே முந்தைய அரசு இருந்தபோது 10 ஆண்டுகள் கூட்டுறவுச் சங்கங்களில் தலைவராக இருந்தவர்கள், தேர்தலில் நிற்கமுடியாத ஒரு நிலைமை அறிவிக்கப்பட்டு இருந்தது. அதை இந்த அரசு பின்பற்றுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே நிதிநிலை அறிக்கையை வைத்த நேரத்தில் 39 கோடி ரூபாய் அளவிற்கு விவசாயிகளுக்குக் கடன் ரத்து செய்யப்பட்டு இருக்கிறது. ஏறக்குறைய 9 லட்சத்திற்கு மேற்பட்டவர்கள் இதனாலே பலன் அடைந்திருக்கிறார்கள். அதையும் மீறி தேர்தலில் நிற்க முடியாமல் யாராவது இருப்பார்களானால் அவர்களைப் பற்றி எல்லாம் சட்டத் திருத்தம் செய்கின்ற நேரத்தில் அரசாங்கம் பரிசீலிக்கும்.

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களுக்கு நீண்டகாலமாக தேர்தல் நடத்தாமல், ஜனநாயக முறையான நடவடிக்கை இல்லாமல் இருக்கின்றன. அதற்கு ஒரு முடிவு ஏற்படுகிறது என்று அரசு அறிவித்து இருப்பது மகிழ்ச்சிக்குரியது. ஆனால் இந்தச் சங்கங்களில் சில சங்கங்கள் 200 அல்லது 300 மெம்பர்களை அங்கத்தினர்களாக, சில ஆட்கள் பின்னாலேயிருந்து, பினாமிகளாக வைத்து, புது மெம்பர்களைச் சேர்ப்பதற்கு தடையாக இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்த அரசு தேர்தல் வருவதற்கு முன், எங்கெங்கு உறுப்பினர்கள் புதிதாக சேர்க்க வேண்டியதிருக்கிறதோ அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதற்கு முன்வருமா, உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி ; தலைவர் அவர்களே, சட்டத் திருத்தம் நிறைவேற்றப்பட்டவுடன், புதிய உறுப்பினர்கள் சேருவதற்கான அவகாசத்தை தேவையான அளவிற்குக் கொடுத்து அதற்குப் பிறகுதான் தேர்தல் நடத்தப்படும்

திரு. எச். எம். ராஜு : தலைவர் அவர்களே, பாக்கிப் பணம் இருக்கும் விவசாயிகளிடமிருந்தோ அல்லது உறுப்பினர்களிடமிருந்தோ அவர்கள் தேர்தலுக்கு முன்பாக அந்தப் பணத்தைச் செலுத்தியவுடன், அவர்களுக்கு வாக்களிக்கும் உரிமை வழங்கப்படுமா, இல்லையா என்பதை தொகுதி மக்களின் சார்பாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, விவசாயிகளில் யார் கடன் வாங்கியிருக்கிறார்களோ அந்தக் கடனை அவர்கள் திருப்பிச் செலுத்திவிட்டால் நிச்சயமாக அவர்களுக்கு வாக்குரிமை உண்டு.

1989 மார்ச் 29]

திரு. உ. ரா. வரதராசன் : தலைவர் அவர்களே, ஆளுநர் ஆட்சிக் காலத்தில் பல சங்கங்களின் பினாமியாக, மோசடியாக உறுப்பினர்கள் பதிவு செய்யப்பட்டதை அரசு அறியுமா, அப்படி பினாமியாக, மோசடியாக சேர்க்கப்பட்ட உறுப்பினர் களை நீக்கி, முறைகேடுகளைக் களைந்து, தேர்தல் நடத்த அரசு முன்வருமா, மேலும் சட்டத் திருத்தத்தோடு கூட, சட்டத்தின் கீழே பிறப்பிக்கப்பட்டிருக்கக்கூடிய விதிகள் திருத்தப் படுமா என்பதை அமைச்சரிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, உறுப்பினர்கள் யாரும் பினாமிகளாக சேர்க்கப்பட வில்லை. ஆனால் தேர்தல் வைக்கப்பட்ட நேரத்தில், அந்தத் தேர்தல் 1—8—1988 அன்று நடந்துகொண்டிருக்கிற நேரத்தி லேயே, அந்தத் தேர்தலை நிறுத்தும்படிதான் ஆணை பிறப்பிக் கப்பட்டு இருக்கிறது. 1,166 சொசைட்டிகளிலே உறுப்பினர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார்கள். அதைப் போலவே 1,651 சொசைட்டிகளில் சில டைரக்டர்கள் போட்டி யின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார்கள். இவர்களைப் பற்றி என்ன செய்யலாம் என்று அரசு பரிசீலித்து வருகிறது.

திருமதி பாப்பா உமாநாத் : தலைவர் அவர்களே, பல ஆண்டுக் காலமாக அந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் தேர்தல் நடைபெறாததால், ஏராளமான ஊழல் நடைபெற்றுக்கொண்டு இருப்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்கள். ஆகவே அந்த முறையில் பெரும் ஊழல் ஏதாவது அரசின் கவனத்திற் குக் கொண்டுவரப்பட்டிருக்கிறதா என்பதை அமைச்சர் அவர் கள் அறிவிக்க முடியுமா என்று கேட்க விரும்புகிறேன்.

(முற்பகல் 9–10)

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே , ஆளுநருடைய ஆட்சியிலே இப்படிப்பட்ட புகார்கள் அரசுக்கு வந்திருக்கின்றன. அதை 'விஜிலன்ஸ் கமிஷனர்' விசாரித்துக்கொண்டிருக்கிற காரணத்தினால் இந்த அவை யிலே அதைப்பற்றிய விவரங்களை அறிவிப்பது முறையல்ல என்று கருதுகிறேன்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல ஆண்டுகளாகத் தேர்தல் நடக்காத காரணத் தினால், செயலாளர் என்ற பெயரில் ஒருவர் இருக்கிறார். அவர்கள் எல்லாம் இப்போது தலைவருக்கு மேலாக விளங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை மாற்ற வேண்டுமென்று ரிஜிஸ்டிராரிடம் சொன்னால், எங்களுக்கு அதிகாரம் இல்லை என்று சொல்கிறார்கள். அத்தகைய நிலையில் 10 ஆண்டு களுக்கு மேலே ஒரே இடத்திலே செயலாளர் வேலை செய்து, பிரசிடெண்டே பினாமியாக வைக்கிற செயலாளர்களை மாற்று வதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா ?

[1989 மார்ச் 29

அதேபோன்று பல சொசைட்டிகளை டார்மெண்ட்டாக வேண்டுமென்றே வைத்திருக்கிறார்கள். அந்த சொசைட்டிகள் டார்மெண்ட் சொசைட்டிகளாக இல்லாமல் 'பங்ஷன்' பண்ணுவதற்காக அரசு ஏதாவது ஆணை பிறப்பிக்குமா? அதே போன்று அந்த சொசைட்டிகளிலும் புதியதாக மெம்பர்களை சேர்ப்பதற்கும் அரசு ஆணை பிறப்பிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கு எல்லா சொசைட்டிகளுக்கும் அவகாசம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், தேர்தல் விரைவிலே நடத்தப்படவேண்டுமென்று இந்த அரசு கருதுகின்ற காரணத்தினால், இந்த சொசைட்டி களுடைய செயலாளர்களை இப்போது மாற்றுவதாக இல்லை.

திரு. டி. பொன்முடி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு நாணயச் சங்கங்களிலே 15 ஆண்டுகளாக பணிபுரிகின்றவர்களிலே, கிளார்க்குகளாக இருந்தவர்களை, அவர் களுக்கு எஸ்.ஓ. என்று பெயரிட்டு முந்தைய அரசு பொறுப்பு தந்திருக்கிறது. நான் கூட்டுறவு நாணயச் சங்கத் திலே பணி புரிந்தவன் என்ற காரணத்தினால் சொல்கிறேன். 15 ஆண்டுகளாக பணிபுரிந்த காரியதரிசிகள்—— ஓராண்டு, ஈராண்டுகள் அவர்களுக்குக் கீழே கிளார்க்குகளாக பணி செய்த வர்களை எஸ். ஓ. என்று பெயரிட்டு அழைப்பதால், தமிழகம் முழுவதும் இருக்கிற கூட்டுறவுச் சங்கங்களுடைய செய லாளர்கள்—மன வேதனை அடைகிறார்கள். அதை மாற்றி அமைக்கின்ற உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, தேர்தல் நடைபெற்றவுடன், தானாகவே அவர்கள் அந்தப் பொறுப்புக்களிலிருந்து வேறு பொறுப்புக்களுக்கு மாற்றப் படுவார்கள். எனவே, மிகக் குறுகிய காலத்தில் தேர்தல் நடக்க இருக்கின்ற காரணத்தினால், இப்போது அதைப் பற்றி அரசு பரிசீலிக்க விரும்பவில்லை.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாக்கி உள்ளவர்கள் ஒட்டளிக்க முடியாது என்று கூட்டுறவுச் சங்கங்களினுடைய விதி இருக்குமானால், சிறு சிறு தொகைகளிலே அவர்கள் பாக்கி இருக்கின்ற தொகை யிலே கூட சில ஏற்பாடுகளைச் செய்து கொள்ள முடியும் என்றும், அப்படித் திட்டமிட்டு சிலர் செய்து கொள்வதற்குரிய ஆற்றல் படைத்தவர்களாக அந்தச் சங்கங்களிலே இருப்பார்கள் என்றும், அதன் மூலம் வாக்கு அளிக்க விரும்புகின்றவர்களுடைய வாக்கு உரிமை பாதிக்கப்படும் என்றும் சொல்கிறார்கள். எனவே, பாக்கியை வசூலிப்பதற்கு வேறு வழிவகைகளை ஆராய்ந்து

1989 மார்ச் 29]

கொண்டு, அவர்கள் வாக்களிக்கலாம் என்கின்ற உரிமையை அரசாங்கம் கொடுக்குமா? அடுத்து 'ஸ்மால் பார்மர்ஸ், மார்ஜினல் பார்மர்சிற்கு' பல்வகையான சலுகைகளை கொடுத்ததைப் போலவே, மற்ற விவசாயிகளுக்கும், வட்டியை யும், அபராத வட்டியையும், தள்ளுபடி செய்துவிட்டு, அந்த நாளைக்குள்ளே நீங்கள் பணத்தைக் கட்டி விட்டால், நீங்களும் அந்த உரிமையைப் பெறுவீர்கள் என்று அரசாங்கம் அறிவிக்குமா?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டேன். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே நிதிநிலை அறிக்கை வைத்தபோது ரூ. 39 கோடிக்கும் அதிகமாக சிறு விவசாயிகளுக்கு அசல், வட்டி, பீனல் இன்டரஸ்ட் இவைகளை தள்ளுபடி செய்து அறிவித்திருக்கிறார்கள். அதைப்போலவே முந்தைய அரசு ஏற்கெனவே அவர்களுடைய கடன்களிலிருந்து ரூ. 69 கோடி கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுக்க வேண்டி யிருந்தது. அதையும் இந்த அரசாங்கம் பொறுப்பு ஏற்றுக் கொண்டு, ரூ. 100 கோடிக்கும் அதிகமாக சலுகைகளை அறிவித்திருக்கிறது. அதன்மூலம் 9 இலட்சத்திற்கும் மேற் பட்ட விவசாயிகள் ஓட்டு உரிமை பெறுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் சிறு விவசாயிகள் அல்லாதவர்களைப் பற்றி சொன்னார்கள். இப்போது அரசாங்கத்தின் நிதிநிலைமையில் எந்த அளவிற்குப் பற்றாக்குறை இருக்கிறது என்பதை மாண்பு மிகு உறுப்பினர்கள் அறிவார்கள். எனவே, மற்ற விவசாயி களுக்கு இந்தச் சலுகையை இப்போது விஸ்தரிப்பதற்கு இயலாது.

திரு. இரா. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்திலே கூட்டுறவுத் தேர்தல் நடைபெறும் என்று பலமுறை அறிவித்து, இறுதிக் கட்டத்திலே அது ஒத்திவைக்கப்பட்டு, மீண்டும் அறிவித்து, மறு முறையும் ஒத்திவைக்கப்பட்டு, அந்த நடைமுறையின் காரணமாக, அந்தச் செயலின் காரணமாக, எந்த அளவிற்கு இழப்பு ஏற்பட்டது? அந்தத் தகவல் இந்த அரசிடம் உண்டா? அந்த இழப்புத் தொகை எவ்வளவு என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர்களே, அப்படித் தேர்தல் அறிவிக்கப்பட்டு, தமிழகம் எங்கும் தேர்தல் பணிகள் தொடங்கி, நிறுத்தப்பட்ட காரணத் தால், சுமார் ரூ. 2 கோடி அளவிற்கு அரசுக்கு இழப்பு ஏற்பட் டிருக்கிறது.

திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர் சங்கம், குத்தகைதாரர் கூட்டுறவு விவசாயச் சங்கம் போன்ற சங்கங்களில், அந்தச் சங்கத்திற்கு உட்பட்டு

மீனளத் தொழிலையே செய்யாதவர்கள், குத்தகை விவசாயி களாக இல்லாதவர்கள் எல்லாம் பினாமியாக சங்கங்களில் உறுப்பினர்களாக சேர்த்து வைத்த—உறுப்பினர்கள் வேண்டும் என்ற காரணத்தினாலே அப்படிச் சேர்த்து வைத்திருக்கிறார் கள்—அப்படிப்பட்ட புகார்கள் ஏதாவது வந்தால், அந்தச் சங்கத்தைக் கலைத்து விட்டு, நேரிடையாக தனி அதிகாரி களை நியமிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்ட புகார்களை மாண்பு மிகு உறுப்பினர் அவர்கள் எழுதி அனுப்புவார்களேயானால், அப்படிப்பட்ட நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் பதிலிலே ரூபாய் 39 கோடி தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது என்றும், பாக்கி உள்ள நடுத்தர, மற்ற விவசாயிகளுக்கு எல்லாம் இப்போது ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அறிவித்திருக் கிறார்கள். அதை ஒரு பக்கம் வரவேற்றாலும் கூட, 4, 5 ஆண்டு களாக மழை இல்லாத காரணத்தினாலே, வறண்ட பகுதிகளில் இருக்கக்கூடிய அந்த மக்கள், அந்தக் கடன் பணத்தைக் கட்ட முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு இந்த வட்டி, அபராத வட்டியைத் தள்ளுபடி செய்து, அசலைக் கட்டுவதற்கும் சிறிது காலத்தை நீட்டித்துக் கொடுப்பதற்கான வழி வகைகளைச் செய்ய முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, நாட்டிலே பஞ்சம் வந்தால் அதற்கென்று நடைமுறை இருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் எந்தெந்த மாவட்டங் களிலே அப்படிப் பஞ்சம் இருக்கிறது என்று அறிவித்து அ்ணாவாரி சர்டிபிகேட் வழங்குவார்களேயானால், அப்படிப்பட்ட மாவட் டங்களிலே—அப்போதுகூட கூட்டுறவுக் கடனைத் தள்ளுபடி செய்ய முடியாது, ஏனென்றால், பல சிக்கல்கள் இருக்கின்றன. அப்படிப்பட்ட அறிவிப்பு மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்திலே யிருந்து வந்தால், வேண்டுமானால், குறுகிய காலக் கடனை நீண்டகாலக் கடனாக மாற்றலாம்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குக் கிராமப் பகுதிகளிலே பரவலாக இருக்கிற கிராம விவசாய கூட்டுறவு நாணயச் சங்கங்களில் தொடர்ந்து பல ஆண்டுக்காலமாக, 10, 15 ஆண்டுகளாக சரியாக கடனைக் கட்ட முடியாமல்—பல்வேறு காரணங்களால் கட்ட முடியாமல்—பல்வேறு போராட்டங்கள் நடத்தி, ஒத்தி வைக்கப்பட்டு, இடைப்பட்ட காலத்திலே வட்டியைத் தள்ளுபடி செய்து, குறிப்பிட்ட காலத்திற்குள் கட்டினால் முழுமையாக

வட்டி தள்ளுபடி செய்யப்படும் என்று சொன்ன அந்த அறிவிப்புக்குப் பிறகும்கூட, கட்ட முடியாமல் சில பேர் இருக்கிறார்கள். அது மட்டும் அல்லாமல் சமீபத்திலே கூட்டுறவுத் தேர்தல் அறிக்கை விட்ட காலத்தில், புதியதாக அந்த ஸ்தாபனத்தைக் கைப்பற்ற வேண்டும் என்பதற்காக, சிலர் பல்வேறு ஆட்களை, உறுப்பினர்களாகச் சேர்த்திருக்கிறார்கள். ஆகவே நியாயமாக இருக்கிற மெம்பர்களுக்கு ஓட்டுரிமை இல்லாமல் போய், புதிதாக சேர்ந்திருக்கிறவர்களுக்கு ஓட்டுரிமை சேர்ந்து விடும் இப்போது தேர்தல் வைத்தால். ஆகவே இந்தக் கடன் சம்பந்தமாக சரியாக நிவாரணம் அளித்து அத்தனைபேரும் வாக்களிக்கக் கூடிய முறையிலே தேர்தலை நடத்த அரசு முன் வருமா? அத்தோடு சட்டத்திலே திருத்தங்கள் செய்யப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எந்த நிலையிலே திருத்தங்களைக் கொண்டு வர அரசு உத்தேசித்து இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போன்று எல்லா விவசாயிகளுக்கும் இருக்கக்கூடிய கடனையும் வட்டியையும் தள்ளுபடி செய்வதற்கு அரசாங்கத்திடம் எந்த விதமான குறிப்பும் இல்லை.

அடுத்து, சட்டத் திருத்தங்களைப் பற்றிக் கேட்டார்கள். ஒரு நபர் எத்தனை கூட்டுறவுச் சங்கங்களில் நிர்வாகக் குழு உறுப்பினராக இருக்கலாம் என்பதைப் பற்றியும், ஒரு நபர் ஒரு சங்கத்திற்கு மேல் தலைவராக இருக்கக்கூடாது. ஒரு சங்கத்தில் தொடர்ந்து இரண்டு முறைக்கு மேல் தலைவராக நீடிக்கக்கூடாது. தலைவர் அல்லது துணைத் தலைவர் பதவிக்கு போட்டியிடுபவர்கள் சங்கங்களின் பிரதிநிதியாக இருக்கக்கூடாது என்பது போன்ற பல தடைகள் இருக்கின்ற காரணத்தால் அதைப்பற்றியெல்லாம் அரசாங்கம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

திரு. சி. கோவிந்தராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூரில் உள்ள கூட்டுறவு அச்சகப் பணியாளர்கள் சில கோரிக்கைகளை எழுப்பி அங்குள்ள தனி அதிகாரிகளோடு பேசி ஒரு உடன்பாட்டிற்கு வந்திருக்கிறார்கள். ஆனால் மேலே உள்ள ரெஜிஸ்திரார் அவர்களின் அனுமதி கிடைக்காத காரணத்தால் இன்றுவரை வேலை நிறுத்தம் நடைபெற்று வருவதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அது குறித்து ஒரு சுமுகமான உடன்பாடு ஏற்படச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர்களே, என்னுடைய கவனத்திற்கு இதுவரையில் கொண்டுவரப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அது பற்றி தனியாக வந்து கலந்து பேசுவார்களேயானால் விரைவில் அது பற்றி முடிவு எடுக்க முயற்சிக்கலாம்.

[1989 மார்ச் 29

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரிய சட்டத் திருத்தங்கள் செய்து, உரிய உறுப்பினர்களைச் சேர்த்து கூட்டுறவு அமைப்புகளுக்குத் தேர்தல் நடக்கும் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். சட்டத் திருத்தங்கள் செய்யும் போது கடன் வாங்குவதையும் கொடுப்பதையும் ஓட்டுரிமைப் பிரச்சினையோடு இணைக்காமல், உறுப்பினர்கள், உறுப்பினர் என்ற முறையிலே ஓட்டு அளிக்கக்கூடிய உரிமை தொடரும் என்ற முறையிலே சட்டத் திருத்தம் செய்ய அரசு முன் வருமா? அதேபோல புதிய உறுப்பினர்கள் சேர்க்கப் படும்போது சிலர் பினாமிகளாக அதிகமான உறுப்பினர்களை சேர்த்துவிடாமல் இருப்பதற்குரிய எச்சரிக்கையோடு இருக்க அரசு முன்வருமா? முன்னாலே தேர்தல் நடப்பதாக அறிவிக்கப்பட்டு வேட்பு மனுக்கள் எல்லாம் வாங்கப்பட்டு சிலர் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கிறார்களே அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் நிலை என்னவாகும் என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9—20)

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுடைய நிலைமையைப் பற்றிக் கேட்டார்கள். அது அரசாங்கத்தினுடைய பரிசீலனையில் இருக்கிறது. ஏனென்றால் ஒரு சட்டத்தின் கீழ் ஒரு பிரிவினர் தேர்ந்தெடுக்கப்பட்டு புதிய சட்டத்தின் கீழ் இன்னொரு பிரிவினர் தேர்ந்தெடுக்கப்படுவது முறையாக இருக்காது. எனவே, இதைப்பற்றி என்ன செய்யலாம் என்று ஆலோசித்துக் கொண்டு இருக்கிறோம்.

அடுத்து உறுப்பினர்கள் சேர்ப்பதைப் பற்றிச் சொன்னார்கள். கடன் இருப்பவர்களைப்பற்றி கவனிக்க வேண்டும் என்றும் சொன்னார்கள். விதி முறைகளிலே பொதுவாக எந்தத் தேர்தலாக இருந்தாலும் குவாலிஃபிகேஷன்ஸ் என்று ஒன்றை வைக்கின்றோம். அதன்படி கடன் இருந்தால் அவர் நிச்சயமாக வாக்குரிமை பெறமாட்டார்.

திரு. ஆர். சிங்காரம் : பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கத் தேர்தல் நடக்கின்றபோது நீண்ட பல வருடங்களாக 1980 முதல் 1984 வரையில் புயலாலும், மழையாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட விவசாயிகள் தங்களுடைய பயிர்களை, நெற்களைக் கொண்டுவர முடியாமல் பாதிக்கப்பட்டு, கஷ்டப்பட்டு வேதனைப்பட்ட விவசாயிகளுக்குத்தான் கடன் நிவாரணம் கோருகின்றோமே தவிர அமைச்சர் அவர்கள், தற்போது அணாவாரி சர்ட்டிபிகேட் வாங்கிக் கொடுத்தால் அதை ரத்துச் செய்யலாம் என்றெல்லாம் சொன்னார்கள்.

1989 மார்ச் 29]

உறுப்பினர் அவர்கள் அந்தப் பழைய கடன்களை, நீண்ட காலக் கடன்களை, மத்திய காலக் கடன்களை, குறுகிய காலக் கடன்களை பற்றித்தான் கேட்டார்களே தவிர, தற்போது வருகின்ற சூழ்நிலையைப் பற்றி அவர் கேட்கவில்லை என்பதை அமைச்சர் அவர்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுடைய வினாவைத் தான் கேட்கிறார்கள் ; விளக்க உரையை அல்ல.

திரு. ஆர். சிங்காரம் : ஆகவே, அப்படிப்பட்டவர்களுக்கு வட்டி, அபராத வட்டி, பெரிய விவசாயிகளுக்குத் தள்ளுபடி செய்து விட்டு, சிறிய விவசாயிகளுக்கு முழுமையாக தள்ளுபடி செய்துவிட்டு தேர்தல் நடத்துவதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையில் சிறு விவசாயிகளைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தோம். இப்போது ஆட்சிக்கு வந்த உடனேயே முதல் நிதிநிலை அறிக்கையிலேயே சிறு விவசாயிகளுடைய கடன்கள், அபராத வட்டி, வட்டி இவையெல்லாம் 39 கோடி ரூபாய் அளவிற்கு ரத்துச் செய்யப்பட்டிருக்கிறது. பெரிய விவசாயிகளைப் பற்றியெல்லாம் அரசாங்கம் பரிசீலிப்பதாக இல்லை.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபா நாயகர் அவர்களே, விவசாயிகளிலே, சிறு விவசாயி, பெரு விவசாயி என்று சொல்கிறார்கள். சீலிங் வந்த பிறகு 15 ஏக்கருக்கு மேலே ஒருத்தருக்கும் கிடையாது. சிறியதாக ஆக்கிவிட்டார்கள். கலைஞர் அவர்கள்தான் கடைசியாக 1969-லே 15 ஏக்கர் என்று கொண்டு வந்தார். 15 ஏக்கருக்கு அப்புறம் சிறு விவசாயி, பெரிய விவசாயி என்று பாரபட்சம் பார்க்கக் கூடாது. பெரிய விவசாயிகள் பெர்சன்ட்டேஜ் ஒன்று இரண்டு என்று கம்மியாகத்தான் இருக்கும். அவர்களுக்கு ஓட்டுரிமை கொடுப்பது பற்றி ஆட்சேபணை இல்லை. ஓட்டுரிமைதான் கொடுக்கப்போகிறோம், வேறு உரிமை ஒன்றும் கொடுக்கப் போவதில்லை. எனவே, அம்மாதிரி உரிமை கொடுப்பதற்குச் சர்க்கார் கவனிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, சில பேர் இந்த ஓட்டுரிமை பெறுவதற்கென்றே கடனைச் செலுத்திவிடுகிறார்கள். எனவே, சொஸைட்டியினுடைய நன்மையைக் கருதி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை வரவேற்பார்கள் என்று கருதுகிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : சபாநாயகர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களிலே பணம் வசூல் பண்ணுவதற்காகத்தான் தேர்தல் நடக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, அரசாங்கம் அப்படி நினைக்கவில்லை. தீட்சிதர் போன்ற மாண்புமிகு உறுப்பினர்கள் பல பேர்கள் தங்களுடைய கௌரவத்திற்காக, ஒட்டளிக்க வேண்டும் என்பதற்காக செலுத்தி விடுவார்கள் என்ற நல்ல நம்பிக்கையில்தான் அதைச் சொன்னேன்.

திரு. பி. என். வல்லரசு : பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளில் செயலாளர்கள் இருக்கிறார்கள். அந்தச் செயலாளர்கள் நிரந்தரப் பணியாளர்களாக இருக்கிறார்கள். அவர்களை மாவட்டத்திற்கு மாவட்டம் மாற்ற முடியாது என்ற நிலையில் அந்த நிரந்தர மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியிலே பணியாற்றுகின்ற அந்தச் செயலாளர்களுடைய டாமினேஷன் அதிகமாக இருக்கிறது. ஆதிக்கம் செலுத்துகிறார்கள். எனவே, பல்வேறு வகைகளில் பொதுமக்களுக்குத் தீமையை விளைவிப்பதால் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளின் பணியாளர்களை மாவட்டத்திற்கு மாவட்டம் மாற்றுகின்ற உத்தேசம், அதைச் சட்டத் திருத்தத்தில் கொண்டுவருகின்ற உத்தேசம் அரசுக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, தவறு செய்வார்களானால் அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கத்திற்கு அதிகாரம் இருக்கிறது. மாற்றுவது என்பது ஒரு தண்டனை அல்ல, ஒரு ஊரிலிருந்து இன்னொரு ஊருக்கு மாற்றிவிடுகின்ற காரணத்தாலேயே அவர் தண்டனையிலிருந்து தப்பி விடுவதாக நாம் நினைத்துக்கொள்ளக் கூடாது. எனவே, குற்றம் செய்தவர்கள் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும். மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல செயலாளர்கள் அளவிலே இருக்கக் கூடியவர்களை மாவட்டம் விட்டு மாவட்டம் மாற்றக் கூடிய செயற் குறிப்பு எதுவும் இல்லை.

திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, சென்ற ஆட்சியின்போது கூட்டுறவு நாணயச் சங்கங்களினுடைய நிர்வாகக் குழு கலைக்கப்பட்டபோது, அந்த இடங்களில் கூட்டுறவு நாணயச் சங்கங்களை நிருவகிப்பதற்கு ஸ்பெஷல் ஆபீசர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். தகுதியின் அடிப்படையில் இல்லாதவர்கள் நியமிக்கப்பட்டிருப்பதை இந்த அரசு மறு பரிசீலனை செய்ய—அத்தகைய, தவறாக நியமிக்கப்பட்டவர்களுடைய வேலை வாய்ப்பினை மறுபரிசீலனை செய்ய—முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

1989 மார்ச் 29]

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டேன். விரைவிலே தேர்தல் நடக்கவிருக்கிறது. தேர்தல் நடந்தவுடனேயே அவர்கள் தானாக அந்த இடங்களிலேயிருந்து வேறு பணிகளுக்கு நியமிக்கப்படுவார்கள். தவறான முறையிலே தகுதியற்றவர்கள் யாராவது நியமிக்கப்பட்டிருந்தால் அவர்களைப் பற்றி அரசாங்கம் பரிசீலிக்கும்.

திரு. எம். கே. கரீம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே பேசுகிறேன். முதலிலே இரண்டு வார்த்தை நன்றி சொல்லித் தொடங்கலாம் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதெல்லாம் பொது விவாதத்திலே பேசலாம்.

திரு. எம். கே. கரீம் : நீலகிரியிலே 50,000 ஏக்கர் பூராவும் வறட்சியால் பாதிக்கப்பட்டு, சிறு விவசாயிகள் அந்த கடனைக் கட்ட முடியாமல் இருக்கின்றார்கள். அதை அரசு தள்ளுபடி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : ஏற்கெனவே அறிவித்த அறிவிப்பைத் தவிர புதிதாக அரசாங்கம் எதையும் தள்ளுபடி செய்வதாக இல்லை.

திரு. ப. முத்துசாமி : தலைவர் அவர்களே, ஏற்கெனவே சட்டதிருத்தத்தின்படி, இரண்டு தடவை சொசைட்டியிலே தலைவராக இருந்தவர்களுக்கு உரிமை மறுக்கப்பட்டிருக்கிறது. அதனால் பல பேர் நல்ல அனுபவம் மிக்கவர்கள், திறமையாகச் செயல்படும் தலைவர்களுக்கு உரிமை மறுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அதுபற்றிப் பரிசீலித்து எத்தனை முறை வேண்டுமானாலும் முறையாக சொசைட்டியிலே தலைவராக வர, அரசு மறுபடியும் பரிசீலித்து, திருத்தம் கொண்டு வருமா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, சட்டத்திருத்தம் வருகின்ற நேரத்தில் மாண்புமிகு உறுப்பினருடைய ஆலோசனை பரிசீலிக்கப்படும்.

திரு. எஸ். எஸ். தென்னரசு : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வல்லரசு கேட்ட கேள்வி மிக முக்கியமான கேள்வி. கூட்டுறவு செக்ரட்டரிகள் அரசாங்க ஊழியரா, இல்லையா என்பதைத் திட்டவட்டமாக நம்முடைய உணவுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன், செயலாளர்கள் அரசாங்க ஊழியர்கள்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

அல்ல என்று அவர்கள் சொல்லிக்கொண்டிருப்பதால், அவர்கள் மீது, எந்தச் செயலாளர் மீதும் இதுவரைக்கும், அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது இல்லை. அவர்களை மாற்றுவதற்கு அரசாங்கம் சட்டத்திருத்தம் செய்ய முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, ஒவ்வொரு வங்கியிலேயும் போட்டிருக்கின்ற ஸ்பெஷல் ஆபீஸர்கள்தான் அரசாங்க ஊழியர்கள். அங்கே இருக்கக்கூடிய செயலாளர்கள் அந்தந்த வங்கிகளினுடைய ஊழியர்கள். எனவே, அந்த வங்கியிலே அவர்கள் தவறு செய்கிறார்கள் என்று ஏதாவது புகார் அரசிற்கு வருமானால், நிச்சயமாக நடவடிக்கை எடுக்க அதிகாரம் உண்டு. யாரும் நடவடிக்கையிலிருந்து தப்பிப்பதற்கு சட்டத்திலே எந்தவித இடமும் இல்லை, எனவே யாரும் அதைப்பற்றி அஞ்சத் தேவையில்லை.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் விரைவிலே தேர்தல் நடத்துவதற்கு, சட்டத்திருத்தங்கள் கொண்டுவர இருப்பதனாலே காலதாமதம் ஆகிறது என்று சொன்னார்கள். அவர்கள் சொன்ன கருத்திலிருந்து, சொன்ன விடையிலிருந்து பார்க்கின்ற போது சட்டத்திருத்தங்கள் என்பது அவ்வளவு பெரிய விஷயமாகத் தெரியவில்லை. இருந்தாலும், விரைவில், என்று சொல்வதற்கு ஏதாவது காலக்கெடு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வருவதற்கு முன்னாலேயே அதைப்பற்றி பதில் சொல்லியிருந்தேன். இந்தக் கூட்டத்தொடரிலேயே சட்டத் திருத்தம் கொண்டுவரவிருக்கின்றோம் என்று. இந்தக் கூட்டத்தொடரிலேயே சட்டத் திருத்தம் கொண்டு வந்து இந்த அவை நிறைவேற்றிக் கொடுக்குமானால் உடனடியாக தேர்தல் நடத்தப்படும் என்று சொல்லியிருக்கின்றேனே தவிர தேர்தலை ஒத்திப்போட இந்த அரசாங்கம் விரும்பவில்லை.

திரு. எஸ். ஏ. தங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்கள் நிரந்தரம் செய்யப்படுவதற்கான ஆலோசனை அரசிடம் உண்டா? அவர்களுக்குக் குறைந்தபட்சம் அரசு கடைநிலை ஊழியர்களின் ஊதியம் உத்திரவாதப் படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : அப்படிப்பட்ட உத்தேசம் அரசாங்கத்திடம் இல்லை. ஏனென்றால் ஒவ்வொரு சொசைட்டியினுடைய வருமானத்தைப் பொறுத்துத்தான்

1989 மார்ச் 29]

அங்கே ஊதியம் நிர்ணயிக்கப்படுகிறது. எனவே, அரசாங்கம் எல்லோருக்கும் ஒரே மாதிரியான ஊதியம் கொடுப்பது என்ற முடிவு எடுக்குமானால், குறைந்தது ஆண்டொன்றிற்கு 40, 50 கோடி ரூபாய் அரசிற்கு இழப்பு ஏற்படும்.

(முற்பகல் 9–30)

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் கோவை மாவட்டத்தை வறட்சிப் பகுதியாக அறிவிக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறோம். அந்த தீர்மானத்தைக் கருத்தில் கொண்டு கோவை மாவட்டத்தை வறட்சிப் பகுதியாகக் கருதுவதோடு அங்கே இருக்கிற விவசாயிகளுக்குக் கூட்டுறவுக் கடன்களிலிருந்து முழுமையாக நிவாரணம் அளிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் அரசுக்குத் தெரியாது. அதைப்பற்றி மாவட்ட ஆட்சித் தலைவர் இதுவரையிலே அரசுக்கு எந்தவிதமான அறிக்கையையும் அளிக்கவில்லை. அப்படியே அளித்தாலும் கூட கூட்டுறவுக் கடன்களை ரத்துச் செய்ய முடியாது. ஏன் என்றால் ஏற்கெனவே நிறைய கடன்களை ரத்துச் செய்து இருக்கிறோம். வேண்டுமானால் குறுகிய காலக் கடன்களை நீண்டகாலக் கடன்களாக மாற்றுவதற்கு அரசு பரிசீலிக்கும்.

திரு. எம், அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவுத் துறைகளில் பல ஆண்டுகளாகத் தேர்தல்கள் நடைபெறாமல் நேரடியாக பங்குதாரர்கள் நிர்வாகத்தில் அவர்கள் செம்மையாகப் பங்குகொள்ளாமல் இருந்து வருவது தெரியும். எனவே, அதிகாரிகளால் இப்போது கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அந்த அதிகாரிகள் இந்த concept of accountability, answerability என்பதை எப்படி அவர்கள் செயல்முறைப்படுத்துகிறார்கள்? அவை எல்லாம் செம்மையாகவும் தூய்மையாகவும், விரைவாகவும் செயல்படுவதைக் குறித்து அரசுக்கு ஏதாவது அப்போதைக்கு அப்போது குறிப்புகள் அல்லது அறிக்கைகள் மூலமாக வருகிறதா? பங்குதாரர்களுக்குக் கொடுக்க வேண்டிய ஈவுத் தொகைகள் எல்லாம் முறையாகக் கொடுக்கப்படுகின்றனவா ? பல கூட்டுறவுத் துறைகளிலே சங்கங்களில் இன்றைக்குப் பங்குதாரர்கள்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது வினாவா ; வினாக்களா ?

திரு. எம் அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்புடைய Connected, incidental, supplementary questions. ஆகவே, அது குறித்து அரசு என்ன சொல்ல விரும்புகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதோ தமிழ்நாட்டில் இருக்கக் கூடிய எல்லா கூட்டுறவுச் சங்கங்களிலும் ஸ்பெசல் ஆபீசர்கள் இருப்பதாக நினைப்பது தவறு. மொத்தம் 25,042 கூட்டுறவுச் சங்கங்கள் தமிழ்நாட்டில் இயங்குகின்றன. அதிலே 4,660 கூட்டுறவுச் சங்கங்களில்தான் ஸ்பெசல் ஆபீசர்கள் இருக்கிறார் கள். மீதி உள்ள சங்கங்களில் 1976 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் முதல் நாள் யார் யார் நிர்வாகத்தில் இருந்தார்களோ அவர்கள் தான் தொடர்ந்து இருந்துகொண்டு வருகிறார்கள்.

சத்துணவு ஊழியர்கள் ஊதியம்,

10—(*வினா எண், 5) திரு. என். பழனிவேல் : மாண்பு மிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சத்துணவு ஊழியர்களுக்கு அரசு ஊழியர்கள் போல் ஊதியம் நிர்ணயம் செய்யப்படுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): சத்துணவுப் பணியாளர்கள் மதிப்பூதியம் பெறும் பகுதிநேரப் பணியாளர் களாவார்கள். அவர்களை நிரந்தரப் பகுதி நேரப் பணியாளர் களாக்குவது பற்றிய செயற்குறிப்பு அரசின் ஆய்விலுள்ளது, மேலும் இந்தப் பணியாளர்களுக்கு அரசு ஊழியர்களைப்போல ஊதியம் அளிக்கப்பட்டால் அரசுக்குப் பெருத்த நிதிச் செலவு ஆகும். மேலும் இந்தப் பணியாளர்கள் சங்கங்கள் ஊதிய உயர்வு வேண்டி ஐந்தாவது தமிழ்நாடு ஊதியக் குழுவுக்கு அவர்கள் வாங்கும் ஊதியத்தை அதிகரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது. எனவே ஊதியக் குழுவின் பரிந்துரை வந்த பிறகுதான் இவர்களின் ஊதியம் மறு நிர்ணயம் செய்வது பற்றி முடிவு எடுக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திரு. என், பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு ஊழியர்கள் பாதி நேர ஊழியர்கள் என்று இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் பாதி நேரம் என்பதே காலைஅல்ல 9 மணிக்குச் சென்று

திரு. எம் அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்புடைய Connected, incidental, supplementary questions. ஆகவே, அது குறித்து அரசு என்ன சொல்ல விரும்புகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதோ தமிழ்நாட்டில் இருக்கக் கூடிய எல்லா கூட்டுறவுச் சங்கங்களிலும் ஸ்பெசல் ஆபீசர்கள் இருப்பதாக நினைப்பது தவறு. மொத்தம் 25,042 கூட்டுறவுச் சங்கங்கள் தமிழ்நாட்டில் இயங்குகின்றன. அதிலே 4,660 கூட்டுறவுச் சங்கங்களில்தான் ஸ்பெசல் ஆபீசர்கள் இருக்கிறார் கள். மீதி உள்ள சங்கங்களில் 1976 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் முதல் நாள் யார் யார் நிர்வாகத்தில் இருந்தார்களோ அவர்கள் தான் தொடர்ந்து இருந்துகொண்டு வருகிறார்கள்.

சத்துணவு ஊழியர்கள் ஊதியம்,

10—(*வினா எண், 5) திரு. என். பழனிவேல் : மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சத்துணவு ஊழியர்களுக்கு அரசு ஊழியர்கள் போல் ஊதியம் நிர்ணயம் செய்யப்படுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): சத்துணவுப் பணியாளர்கள் மதிப்பூதியம் பெறும் பகுதிநேரப் பணியாளர் களாவார்கள். அவர்களை நிரந்தரப் பகுதி நேரப் பணியாளர் களாக்குவது பற்றிய செயற்குறிப்பு அரசின் ஆய்விலுள்ளது, மேலும் இந்தப் பணியாளர்களுக்கு அரசு ஊழியர்களைப்போல ஊதியம் அளிக்கப்பட்டால் அரசுக்குப் பெருத்த நிதிச் செலவு ஆகும். மேலும் இந்தப் பணியாளர்கள் சங்கங்கள் ஊதிய உயர்வு வேண்டி ஐந்தாவது தமிழ்நாடு ஊதியக் குழுவுக்கு அவர்கள் வாங்கும் ஊதியத்தை அதிகரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது. எனவே ஊதியக் குழுவின் பரிந்துரை வந்த பிறகுதான் இவர்களின் ஊதியம் மறு நிர்ணயம் செய்வது பற்றி முடிவு எடுக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திரு. என், பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு ஊழியர்கள் பாதி நேர ஊழியர்கள் என்று இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் பாதி நேரம் என்பதே காலைஅல்ல 9 மணிக்குச் சென்று

1989 மார்ச் 29]

விடுகிறார்கள். அவர்கள் மாலை 3 மணி அல்லது 4 மணி வரை அங்கே இருக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, பாதி நேர ஊழியர்கள் இவர்கள் என்று எந்தக் கணக்கில் சொல்கிறார்கள் என்பதோடு அவர்களுக்கு இன்றைக்குக் கொடுக்கக்கூடிய சம்பளம் 150 ரூபாய், 175 ரூபாய். அதிலே கூட அவர்கள், வேறு பலருக்கு நிதி கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆகவே அரசு உடனடியாக அவர்களை முழு நேர ஊழியர்களாக ஏற்று அறிவிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ எல்லா சத்துணவுக் கூடங்களிலும் 2 லட்சத்திற்கும் மேற்பட்ட பணியாளர்கள் இந்தப் பணிகளில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் பாதி நேர ஊழியர்கள் அல்ல, பகுதி நேர, பார்ட் டைம் ஊழியர்கள் என்று கருதப்படுபவர்கள். காலை 10 மணி முதல் மதியம் 2 மணி வரைதான் அவர்களுக்கு வேலை நேரம் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. எனவே, தொடர்ந்து அவர்களை அரசு ஊழியர்களாக நாம் நியமிக்க வேண்டியிருக்குமானால் அவர்கள் அந்தப் பள்ளியில் பணியாற்றுவதற்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டும். அப்படிப் பணியாற்றவேண்டும் என்றால் அவர்களுக்கு அதற்கான தகுதி இருக்கவேண்டும். எனவே இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டுதான் அவர்களைப் பகுதி நேர ஊழியர்களாக நியமித்து எவ்வளவு நேரம் அவர்கள் பணியாற்றுகிறார்களோ அதற்கு ஏற்ப ஊதியம் நிர்ணயம் செய்யப் பெற்றிருக்கிறது.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் காலையிலிருந்து மதியம் 2 மணி வரைதான் பணியில் அமர்த்தப்படுகிறார்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இது ஒரு முக்கியமான கேள்வி. $2\frac{1}{2}$ லட்சம் ஊழியர்கள் சம்பந்தப்பட்ட கேள்வி. அவர்கள் தகுதி அடிப்படையிலேதான் இந்தச் சத்துணவுத்திட்டம் வந்த காலத்திலே அமர்த்தப்பட்டார்கள். ஆகவே அவர்களை அரசு ஊழியர்களாக ஆக்குவது மிகமிக முக்கியம் என்பதோடு இதை அரசு பரிவோடு கவனிக்காவிட்டால் ஊழல்கள் நடப்பதற்குச் சந்தர்ப்பம் இருக்கிறது, நடந்து கொண்டிருக்கிறது, அது வேறு விஷயம். அதைப் பேசுவதற்கு இப்போது நேரம் இல்லை. அத்தோடு ஐந்தாவது ஊதியக் கமிஷனுடைய பரிந்துரை வந்ததற்குப் பின்னால் பரிசீலிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்களுக்கென்று பல்வேறு அமைப்புகள் இருக்கின்றன. அவர்கள் சங்கம் வைத்திருக்கிறார்கள். அந்தச் சங்கத்தினரோடு அமைச்சர் அவர்கள் பேசி அதற்கு ஒரு நல்ல முடிவை ஏற்படுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகுதி அடிப்படையில் எடுக்கப்பட்டவர்கள்—இரண்டு வயது முதல் 5 வயது முடிய இருக்கிற

[1989 மார்ச் 29

குழந்தைகளுக்கான குழந்தைகள் காப்பகத்திலேதான் தகுதி அடிப்படையிலே அவர்களெல்லாம் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அவர்களால்தான் குழந்தைகளுக்குப் பாடங்களைச் சொல்லித் தரவும், திருக்குறளை கற்றுத் தரவுமான தகுதி இருக்கிறதென்பதை நிர்ணயம் செய்து குழந்தைகள் காப்பகத்திலே இருக்கின்றவர்களுக்குத்தான் அப்படிப்பட்ட பணி ஒதுக்கப்பட்டிருக்கிறது. சாதாரண பள்ளிகளில், இருக்கிற சத்துணவுக் கூடங்களில் தகுதி அடிப்படையிலே யாரும் நிர்ணயம் செய்யப்படுவதில்லை. இன்றைக்குப் பல்வேறு அமைப்புகள் அரசை அணுகி தங்களுடைய குறைகளை, கோரிக்கைகளை முன் வைத்து இருக்கிறார்கள். ஐந்தாவது ஊதியக் குழு தன்னுடைய பரிந்துரையை சமர்ப்பித்ததற்குப் பின்னால் அவர்களுக்கான ஊதிய உயர்வு எவ்வளவு வழங்க முடியும் என்பதை, அரசு நிதி நிலையைப் பொறுத்து நிர்ணயம் செய்ய முடியும் என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு. ரவி அருணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடும்பக் கட்டுப்பாடு, சிறு சேமிப்பு போன்ற பணிகளில் சத்துணவு ஊழியர்களை ஈடுபடுத்துவதால் அவர்களுடைய பணியை சரிவர செய்ய முடியவில்லை என்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட குறைபாடு அரசின் கவனத்திற்குக்கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதைப் பற்றிய பரிசீலனை அரசின் செயற்குறிப்பிலே உள்ளது.

திரு. பெ. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுக் கூடங்கள் செயல்படுகின்ற முறைகளைச் சென்று பார்க்க, அதிலிருக்கின்ற குறைகளை அரசுக்கு எடுத்து வைக்க சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உரிமை உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை அந்த உரிமை வழங்கப்படவில்லை. சத்துணவுக் கூடங்களை எப்படி கண்காணிப்பது, அந்தப் பொறுப்பை யாரிடம் ஒப்படைப்பது என்பதைப்பற்றிய பரிசீலனை அரசின் கவனத்தில் இருந்து கொண்டிருக்கிறது. அந்தப் பரிசீலனை முடிந்ததற்குப் பிறகு அறிவிப்புகள் வெளியிடப்படும்.

திரு. கே. அண்ணாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு அமைப்பாளர்களின் நியமனத்திற்குரிய கல்வித் தகுதி என்ன ? தற்போது அவர்களை நியமனம் செய்கிற அதிகாரம் யாருக்கு வழங்கப்பட்டிருக்கிறது என அறிய விரும்புகிறேன்.

1989 மார்ச் 29]

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு அமைப்பாளர்களுக்குரிய கல்வித் தகுதி எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு எழுதப்பட்டிருக்க வேண்டும். எந்தப் பகுதியில் சத்துணவுப் பணியாளர் பணி தேவைப்படுகிறதோ அந்தப் பகுதியிலுள்ள உள்ளாட்சி மன்றத் தலைவர் இரண்டு மூன்று பெயரைப் பரிந்துரை செய்து அந்தப் பட்டியல் மாவட்ட ஆட்சித் தலைவருடைய நேர்முக உதவியாளருக்கு இந்தப் பணிக்கென்றே அமர்த்தப்பட்டிருக்கிற (Noon meal) பி. ஏ. என்று சொல்லப்படுகின்றவரிடம் அனுப்பப்பட்டு அந்தப் பட்டியலிலுள்ள பெயரை சத்துணவு பி. ஏ, அவர்கள் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு அந்த உத்தரவுகளைப் பிறப்பிக்கிறார்கள்.

திரு. ஆ. பாலையா : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, சத்துணவுக் கூடத்திலே வேலை பார்க்கின்ற அமைப்பாளர்கள் தவறு செய்தால் அவர்களை இடமாற்றம் செய்வதற்குரிய சட்டத் திருத்தங்கள் கொண்டு வரப்படுமா? இல்லை, இப்போதிருக்கிற முறையில் அவர்கள் தவறு செய்தால்—சஸ்பென்சன் செய்வதும் அல்லது டிஸ்மிஸ் செய்யப்படுகின்ற முறையை மாற்றி அவர்களை டிஸ்மிஸ் செய்வது அல்லது சஸ்பென்சன் செய்வதற்கு இடம் கொடுக்காமல் அவர்கள் தவறு செய்தால்—இடம் மாற்றம் கொடுக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறு செய்கின்ற சத்துணவு அமைப்பாளர்கள் மீது இப்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நடவடிக்கை அவர்களை தற்காலிக வேலை நீக்கம் செய்வது அல்லது வேலை நீக்கம் செய்வதுதான். இடம் மாறுதல் செய்வது என்பது மிகுந்த சிக்கலை உருவாக்கக் கூடிய ஒன்று. 5 கிலோ மீட்டர் சுற்றுவட்டாரத்திற்குள்ளேயிருந்து சத்துணவு அமைப்பாளர்கள் சத்துணவு மையங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அவர்களுக்குத் தருகின்ற ஊதியமோ நீங்கள் எல்லோரும் குறைவு என்று சொல்கிறீர்கள். எனவே, 15, 20 கிலோ மீட்டருக்கு அப்பால் ஒரு மையத்திற்கு அவர்களை மாறுதல் செய்தால் அவர்கள் போக்குவரத்திற்கான செலவுத் தொகை மற்றும் அவர்கள் உரிய காலத்திலே போய்ச் சேருவது தாமதமாகும் என்பனவற்றைக் கருதித்தான் அவர்களுக்கு மாறுதல் என்ற அந்தத் தண்டனையை அளிக்காமல் அவர்களை மாற்றக் கூடாது என்று சொல்லி தற்காலிகப் பணிநீக்கம் அல்லது அவர்கள் செய்த முறைகேடுகள் அதிகமாக இருக்குமேயானால் பணிநீக்கம் என்ற அளவிலே இப்போது தண்டனை வழங்கப்படுகிறது.

[1989 மார்ச் 29

(முற்பகல் 9–40)

திரு. மீ. அ. வைத்தியலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருந்த அரசு சத்துணவுப் பணியாளர்களை மாறுதல் செய்யக்கூடாது என்றும், அவர்கள் 5 கிலோ மீட்டர் தொலைவுக்குள்தான் குடியிருக்க வேண்டுமென்றும் அறிவித்திருக்கிறது. ஆனால் நியமிக்கப்பட்ட சத்துணவு ஊழியர்கள் ஏற்கெனவே 25 கிலோ மீட்டர் தூரத்திலிருந்துதான் வருகிறார்கள். ஆகவே, தவறு செய்கின்றவர்களை இடமாற்றம் செய்ய அரசுக்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி ஏதாவது குறிப்பிடக் கூடிய அளவுக்கு இதில் குறைபாடு இருந்தால், அதுபற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் நிச்சயமாக அந்தக் குறைபாடு நிவர்த்தி செய்யப்படும்.

திருமதி பாப்பா உமாநாத் : தலைவரவர்களே, சத்துணவுப் பணியாளர்களில் 95 சதவீதத்திற்குமேல் பெண்களாக இருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக இளம் பெண்களாக இருக்கிறார்கள். அவர்களே குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்கு ஆள் கொண்டுவர இன்றைக்கும் அனுப்பப்படுகின்ற நிலைமை இருக்கிறது. அதனால் அவர்கள் வாங்கக்கூடிய சம்பளத்தை 'புரோக்கர்'களுக்குக் கொடுத்து ஆள் பிடித்துவரும் சூழ்நிலை இருக்கிறது. இந்த நிலைமையைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவரவர்களே, ஏற்கெனவே இதுபற்றி விடை அளித்திருக்கிறேன். இந்தக் குறைபாடு அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இதுபற்றி கவனித்து தக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவித்திருக்கிறார்கள்.

திரு. எல். மூக்கையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு மையங்களில் நடைபெறுகின்ற ஊழல்களையும் குறைபாடுகளையும் அந்த அமைப்பாளர்களிடம் சுட்டிக் காட்டி, இப்படிப்பட்ட குறைபாடுகள் நடக்காமல் திருத்திக் கொள்ளுங்கள் என்று தெரிவிக்கும்போது, நாங்கள் மாதம் மூன்று ''கேஸ்'' கள் குடும்பக் கட்டுப்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டியிருக்கிறது ; அரசு கொடுக்கின்ற உதவிப் பணத்திற்குமேல் நாங்கள் கூடுதலாக ஒரு கேசுக்கு 100 ரூபாய் கொடுத்துதான் அழைத்துவர வேண்டியிருக்கிறது ; ஆகவே, இப்படிப்பட்ட தவறு செய்தாக வேண்டியிருக்கிறது, வேறு வழியில்லை ; குடும்பக் கட்டுப்பாட்டிற்கு மாதம் மூன்று கேஸ்கள் கொண்டுவரவில்லை என்றால் ஆணையாளர் எங்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கிறார், ஆகவே தவறு செய்ய வேண்டிய நிலைமை

ஏற்படுகிறது என்று சொல்கிறார்கள். ஆகவே, குடும்பக் கட்டுப் பாட்டிற்கு கட்டாயமாக ஆள் கொண்டுவர வேண்டுமென்ற நிலைமை நீக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குறைபாடு அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றது. இந்தக் குறை பாட்டைப் போக்குவதுபற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பரிவோடு பரிசீலிப்பதாக அறிவித்திருக்கிறார்கள்.

திருமதி எஸ். பி. சற்குணம் : தலைவரவர்களே, என்னு டைய தொகுதியில் 8 ஆவது வட்டத்தில் திருவொற்றியூர் நெடுஞ் சாலையில் இருக்கின்ற மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி வளாகத் திற்குள் ஒரே இடத்தில் ஆறு சத்துணவு மையங்கள் இருக்கின்றன. அங்கே பணியாற்றுகின்ற ஊழியர்கள் பல்வேறு பகுதிகளிலிருந்து, நீண்ட தூரத்திலிருந்து குழந்தைகளை அழைத்து வரவேண்டிய சிரமம் இருக்கிறது. எனவே, அந்தந்தப் பகுதியில் இருக்கின்ற குழந்தைகள் பயன்பெறும் வகையில் அந்தந்தப் பகுதியிலேயே சத்துணவு மையங்களை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகள் நல மையம் அமைக்கப்பட்டபோது ஆங்காங்கே இட நெருக்கடி காரணமாக கிடைத்த இடத்தில் 2, 3 மையங்களை ஒன்றாக வைத்து, சுற்று வட்டாரங்களில் இருக்கிற குழந்தைகள் அங்கே வரக்கூடிய சூழ் நிலை உருவாக்கப்பட்டிருந்தது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பிய பிரச்சினையைப் போல இன்னும் பல பகுதிகளிலிருந்து பிரச்சினைகள் அரசின் கவனத்திற்கு வந்திருக்கின்றன. மாநக ராட்சியில் இருக்கின்ற இப்படிப்பட்ட குழந்தைகள் நல மையங் களை தனித்தனியாகப் பிரித்து, அந்தந்தப் பகுதியிலேயே அமைக்க முடியுமா என்று மாநகராட்சி ஆணையாளரைக் கேட்டி ருக்கிறோம். இதிலே இருக்கின்ற சங்கடங்கள் என்னவென்றால் இட நெருக்கடி, அடுத்து நிதி நெருக்கடி. இந்த இரண்டையும் கருத்தில் கொண்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனை பரிசீலிக்கப்படும்.

திரு. கோ. பூவராகவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு மையத்தில் பணியாற்றுகின்ற அத்தனை ஊழியர்களும் அரசாங்க ஊழியர்களைப்போல பணியாற்றுகிறார் கள். மற்ற அரசாங்க ஊழியர்கள் வாரத்தில் ஐந்து நாட்கள்தான் வேலை செய்கிறார்கள். ஆனால் சத்துணவு மையத்தில் பணி யாற்றுகின்றவர்கள் கூடுதலாக இரண்டு நாட்கள், அதாவது சனி, ஞாயிறு ஆகிய விடுமுறை நாட்களிலும் பணியாற்றுகிறார்கள்.

ஆகவே, அவர்களுக்கு இரண்டு நாட்களும் விடுமுறை அளிக்க வேண்டும் அல்லது அதிகமாக வேலை செய்வதால் அதிக ஊதியம் அளிக்க வேண்டும் என்று கேட்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுப் பணியாளர்கள் அமைப்பின் சார்பாக இதைப்போன்ற கோரிக்கைகள் வந்து கொண்டிருக்கின்றன. இது குழந்தைகளுக்கு உணவு வழங்குகிற திட்டம் என்பதன் காரணமாக, ஏற்கெனவே அவர்கள் பணியில் அமர்த்தப்படுகிறபோதே விடுமுறை இல்லாமல் தொடர்ந்து பணியாற்றவேண்டும் என்ற ஒரு விதியின் அடிப்படையில்தான் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். ஒரு நாள் ஓய்வு வழங்க வேண்டுமென்று அவர்கள் விடுத்திருக்கின்ற கோரிக்கையை அரசு பரிசீலிப்பதாக ஏற்றுக்கொண்டிருக்கிறது என்பதை நான் அறிவித்துக் கொள்கிறேன்.

திரு. காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சத்துணவு அமைப்பாளர்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய உதவியாளர்கள் நியமிப்பார்கள் என்றார்கள். இப்போதைய புது அரசாங்க அறிவிப்பின்படி ஊராட்சி ஒன்றியத்திற்கு அந்தப் பொறுப்பை ஒப்படைப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. எனவே, இனிமேல் நியமிக்கப்படுகிற சத்துணவு அமைப்பாளர்கள் ஊராட்சி ஒன்றியத்தால் நியமிக்கப்படுவார்களா அல்லது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் உதவியாளர்களால் நியமிக்கப்படுவார்களா என்பதை அரசு விளக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் இதுபற்றிய அரசு ஆணை வெளியிடப்படவில்லை. இதைப்பற்றிய பரிசீலனை இன்னும் அரசின் கவனத்தில் இருந்து கொண்டிருக்கிறது. பரிசீலனை முடிந்ததற்குப் பிறகு, இன்றைக்குச் செயல்பட்டுக் கொண்டிருக்கிற இந்த அமைப்பை பல்வேறு இலாக்காக்களின் மூலமாக கண்காணிக்கப்பட்டுக் கொண்டிருக்கிற இவைகளை எல்லாம் ஒருமுகப்படுத்தி, ஒழுங்குபடுத்தி ஒரு துறையின் மூலமாக செம்மையாகச் செயல்படுத்துவதற்கான புதிய அரசாணை வெளியிடப்படும் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவை சபாநாயகர் அவர்களே, சத்துணவு அமைப்பாளர்கள், திருக்குறள் ஆசிரியர்கள் இந்தப் பணிகளைச் செய்துகொண்டிருப்பவர்களாகக் கருதப்படுகிறார்கள். அவர்கள் காலை 9-00 மணி முதல் 3-00 மணி வரையில் அங்கே பணி செய்கிறார்கள். அவர்களைப் பகுதி நேர

1989 மார்ச் 29]

நிரந்தர ஊழியர்கள் என்று அரசு அறிவித்திருப்பினும், தேர்தல் நேரத்தில் இப்போது ஆளும் கட்சியாக இருக்கின்ற கட்சி அவர்களை அரசு ஊழியர்கள் என்று அறிவிப்போம் என்று தான் சொன்னது, எனவே, அவர்களை முழு நேர நிரந்தர ஊழியர்களாக அறிவித்து அரசு ஊழியர்களுக்குக் கொடுக்கின்ற அனைத்து சலுகைகளையும் அவர்களுக்குக் கொடுக்க அரசு திட்டமிடுமா ?

இரண்டாவதாக திருக்குறள் போன்றவற்றை அவர்கள் கற்றுக் கொடுக்கிற பள்ளியோடு தொடர்புடையவர்களாக இருக்கின்ற காரணத்தால் முழுமையாக அவர்களைக் கல்வி இலாக்காவிலிருந்து எடுத்து ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒப்படைப்பது பற்றி மீண்டும் பரிசீலனை செய்து, இரண்டு துறைகளுக்கும் அதாவது ஊராட்சி ஒன்றியத்திற்கும் அதிலே ஒரு கண்காணிப்பு உரிமை கொடுத்து முன்போலவே அவர்களுக்கு கல்வி இலாக்காவோடு தொடர்பு ஏற்படுவதற்குரிய வாய்ப்பை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிரு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சத்துணவுத் திட்டம் இரண்டு கட்டமாகச் செயல்படுகிறது. இரண்டு வயதுக்கு மேற்பட்ட ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளை உள்ளடக்கிய குழந்தைகள் நல மையம் என்ற அடிப்படையிலும், ஒன்றாம் வகுப்பிலிருந்து 10 ஆம் வகுப்பு வரை படிக்கிற ஆரம்பப்பள்ளி, நடுத்தரப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி ஆகியவற்றில் பயிலுகிற மாணவர்கள் பயன்பெறுகின்ற வகையிலும் இப்படி இவை இரண்டு கட்டமாகச் செயல் படுகிறது. இந்த மையத்திலே பணியாற்றுகிற குழந்தைகள் நல அமைப்பாளர்களுக்கு, சத்துணவு அமைப்பாளர்களைக் காட்டிலும் ஊதியம் சற்று கூடுதலாகத்தான் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இவர்களை உள்ளாட்சி மன்றத்தின் கீழ் கொண்டு வருவதா, வேண்டாமா என்ற ஒரு பரிசீலனை அரசின் செயற்குறிப்பில் உள்ளது.

(முற்பகல் 9-50)

மைய, மாநில அரசுகள் பங்கு வீதம் போட்டு மேற்கொண்ட திட்டங்கள்.

11—(*வினா எண் 86) திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977 முதல் 1988 வரை மைய அரசும் மாநில அரசும் பங்கு வீதம் போட்டு மேற்கொண்ட திட்டங்கள் யாவை ?

(ஆ) அவற்றில் மாநில அரசு பங்குவீதம் செலுத்தாததால் நிறைவேறாத திட்டங்கள் எவையேனும் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

1989 மார்ச் 29]

நிரந்தர ஊழியர்கள் என்று அரசு அறிவித்திருப்பினும், தேர்தல் நேரத்தில் இப்போது ஆளும் கட்சியாக இருக்கின்ற கட்சி அவர்களை அரசு ஊழியர்கள் என்று அறிவிப்போம் என்று தான் சொன்னது, எனவே, அவர்களை முழு நேர நிரந்தர ஊழியர்களாக அறிவித்து அரசு ஊழியர்களுக்குக் கொடுக்கின்ற அனைத்து சலுகைகளையும் அவர்களுக்குக் கொடுக்க அரசு திட்டமிடுமா ?

இரண்டாவதாக திருக்குறள் போன்றவற்றை அவர்கள் கற்றுக் கொடுக்கிற பள்ளியோடு தொடர்புடையவர்களாக இருக்கின்ற காரணத்தால் முழுமையாக அவர்களைக் கல்வி இலாக்காவிலிருந்து எடுத்து ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒப்படைப்பது பற்றி மீண்டும் பரிசீலனை செய்து, இரண்டு துறைகளுக்கும் அதாவது ஊராட்சி ஒன்றியத்திற்கும் அதிலே ஒரு கண்காணிப்பு உரிமை கொடுத்து முன்போலவே அவர்களுக்கு கல்வி இலாக்காவோடு தொடர்பு ஏற்படுவதற்குரிய வாய்ப்பை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிரு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சத்துணவுத் திட்டம் இரண்டு கட்டமாகச் செயல்படுகிறது. இரண்டு வயதுக்கு மேற்பட்ட ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளை உள்ளடக்கிய குழந்தைகள் நல மையம் என்ற அடிப்படையிலும், ஒன்றாம் வகுப்பிலிருந்து 10 ஆம் வகுப்பு வரை படிக்கிற ஆரம்பப்பள்ளி, நடுத்தரப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி ஆகியவற்றில் பயிலுகிற மாணவர்கள் பயன்பெறுகின்ற வகையிலும் இப்படி இவை இரண்டு கட்டமாகச் செயல் படுகிறது. இந்த மையத்திலே பணியாற்றுகிற குழந்தைகள் நல அமைப்பாளர்களுக்கு, சத்துணவு அமைப்பாளர்களைக் காட்டிலும் ஊதியம் சற்று கூடுதலாகத்தான் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இவர்களை உள்ளாட்சி மன்றத்தின் கீழ் கொண்டு வருவதா, வேண்டாமா என்ற ஒரு பரிசீலனை அரசின் செயற்குறிப்பில் உள்ளது.

(முற்பகல் 9-50)

மைய, மாநில அரசுகள் பங்கு வீதம் போட்டு மேற் கொண்ட திட்டங்கள்.

11—(*வினா எண் 86) திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977 முதல் 1988 வரை மைய அரசும் மாநில அரசும் பங்கு வீதம் போட்டு மேற்கொண்ட திட்டங்கள் யாவை ?

(ஆ) அவற்றில் மாநில அரசு பங்குவீதம் செலுத்தாததால் நிறைவேறாத திட்டங்கள் எவையேனும் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

[1989 மார்ச் 29

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : விடை : (அ) 1977 முதல் 1988 வரை மைய அரசும் மாநில அரசும் பங்கு வீதம் போட்டு மேற்கொண்ட திட்டங்களின் விவரம் கீழே தரப்பட்டுள்ளது :

(1) மாவட்டத் தொழில் மையங்களை நிறுவுதல்.

(2) சிறு தொழில்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கான தர நிர்ணயச் சான்றிதழ் வாங்குவதற்கு மானியம் வழங்கும் திட்டம்.

(3) தொழில் கூட்டுறவு கயிறு சங்கங்களுக்கு உதவி செய்யும் திட்டம்.

(4) மாவட்டத் தொழில் மையங்களுக்குத் தேவையான கட்டிடங்கள், அலுவலக உபகரணங்கள் வாங்கத் தேவையான நிதி உதவி செய்தல்.

(5) மாவட்டத் தொழில் மையங்கள் மூலமாக சிறு தொழில் முனைவோருக்கு நிதி நிறுவனங்கள் மூலம் கடன் பெற ஏதுவாக விளிம்புத் தொகை (Margin Money) நிதியுதவித் திட்டம்.

(6) நலிவுற்ற சிறு தொழில் மையங்களை மீண்டும் இயங்கச் செய்வதற்கான விளிம்புத் தொகை நிதியுதவித் திட்டம் (Margin Money Assistance)

(ஆ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, நம்முடைய மாநிலத்தினுடைய பங்கு வீதம், இது வரை அறிவிக்கப்பட்ட அனைத்து திட்டங்களிலும் மைய அரசினுடைய பங்கு வீதம் எவ்வளவு ? மாநில அரசு செலுத்திய பங்கு வீதம் எவ்வளவு? இந்த இரண்டும் முறையாகச் செலவு செய்யப்படுகிறதா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசும், மத்திய அரசும் 50, 50 என்ற சதவீதத்தின் அடிப்படையில் பங்கு வீதம் வழங்கப்பட்டு முறையாக செலவு செய்யப்பட்டுள்ளது.

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், கொல்லங்கோடு கிராமத்தை, மாதிரி கயிறு கிராமமாக எடுத்துக்கொண்டு, மத்திய அரசும், மாநில அரசும் முதலீடு முடக்கி அங்கே கயிறு தொழிலை மேம்படுத்த திட்டங்கள் போடப்பட்டு அவை எந்த நிலையிலே நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

1989 மார்ச் 29]

மாண்புமிமி திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்ட ஒரு தொழில் பற்றிய விளக்கத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். இங்கே கூட்டுறவு, கயிறு தொழிற்சாலைகளுக்கு மத்திய அரசும், மாநில அரசும் நிதி வழங்குகிற அந்த விகிதம் மட்டும்தான் தரப்பட்டிருக்கிறது. எனவே சம்பந்தப்பட்ட அந்த வினாவிற்கு விடை பெற தனிக் கேள்வியாக போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டங்களுக்காக சராசரி ஆண்டு ஒன்றுக்கு அல்லது கடந்த 1988-89 ஆம் ஆண்டுக்கு மைய அரசிடமிருந்து கிடைத்திருக்கக்கூடிய தொகை எவ்வளவு என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1987-88க்கு வழங்கப்பட்ட நிதி உதவி திட்டவாரியாக தரப்பட்டிருக்கிறது. எனவே, ஒட்டு மொத்தமாக மத்திய மாநில அரசினுடைய பங்கைப் பற்றி தெரிய விரும்பினால், உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வியாகப் போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டங்களிலே ஐ.ஆர்.டி.பி. திட்டத்தின் கீழ் மத்திய அரசு மான்யம், மாநில அரசு மான்யம் எவ்வளவு ? ஆர். எல்.இ.ஜி.பி. திட்டத்தின் கீழ் மாநில அரசு மான்யம் எவ்வளவு, மத்திய அரசின் மான்யம் எவ்வளவு ? என்.ஆர்.இ.பி. திட்டத்தின் கீழ் மத்திய அரசு மான்யம், மாநில அரசு மான்யம் எவ்வளவு என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதற்காக தனிக் கேள்வி எழுப்பவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மீ. அ. வைத்தியலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் மூலமாக இதுபோன்ற நிதிகள் மூலம் ஏழைகளுக்கு சுயவேலைவாய்ப்பு திட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டாலும், அவர்கள் வங்கிகளை அணுகுகிறபோது அவர்களுக்குத் தொகை வழங்கப்படுவதில்லை. அதற்காக தனி நடவடிக்கை எடுக்கும் குறிப்பு அரசினுடைய கவனத்தில் இருகிறதா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு தொழில் தொடங்க விருப்பம் உடையவர்கள் அங்கங்கே இருக்கக்கூடிய மாவட்டத் தொழி

மையங்களை அணுகி தாங்கள் தொடங்க இருக்கின்ற தொழில் பற்றிய விவரங்களைத் தந்து அதற்கான விளக்கங்களையும் தந்து, அவர்கள் வந்து அந்த இடத்தைப் பரிசீலனை செய்து, அதற்கான வாய்ப்பு உண்டா என்பதை ஆராய்ந்து, அவர்கள் தருகின்ற அந்தத் தகுதி சான்றுகள் பெற்றதற்குப் பின்னால் அந்தந்த மாவட்டத் தொழில் மையங்கள் மூலமாக வங்கிகளுக்கு பரிந்துரை செய்யப்பட்டு போதிய அளவுக்கு நிதி உதவி தரப் பட்டிருக்கிறது. எங்காவது நிதி உதவி கிடைக்காத நிலைமை ஏற்படுமானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை அரசி னுடைய கவனத்திற்கோ அல்லது அந்தந்த மாவட்டத்திலே இருக்கக்கூடிய மாவட்டத் தொழில் மையங்களுடைய கவனத் திற்கோ எடுத்துச் செல்லவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கோ. வீரையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் வழங்கக்கூடிய இந்தச் சிறு தொழில்கள் தொடங்க, அந்த நிலையங்களிலிருந்து கடனைப் பெறுபவர்கள் கடனைத் திருப்பி முறையாகச் செலுத் தாமல் விட்டுவிடுவார்கள் என்பதற்காக மானியத்தை மட்டும் வழங்கிவிட்டு கணக்கிலே போக்குவரத்து செய்துவிட்டு அந்தச் சிறுதொழில்கள் செய்பவர்களுக்கு உரிய தொகை போய்ச் சேராமல் இருக்கிறது. அதனால் அவர்கள் பயன் அடையாமல் இருக்கக்கூடிய நிலை இருப்பதை அரசு அறியுமா? அது குறித்து என்ன முயற்சி எடுத்திருக்கிறார்கள் என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்ற குற்றச்சாட்டுகள் இதுவரை அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. எங்காவது இப்படிப்பட்ட தவறுகள் நடைபெற்றிருந்தால் அதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டி.ஐ.ஐ.சி.யிலிருந்து லோன் ரெகமண்ட் செய்தால் வங்கியிலே கொடுக்காமல் இருக்கிறார்கள். வங்கியிலே கேட் டால் அதற்கு ஒரு சட்டம் இல்லை என்று சொல்கிறார்களே, உண்மையா? அவர்கள் அப்படிச் சொல்கின்றார்கள் என்றால் ஒரு சட்டம் கொண்டு வந்து டி.ஐ.ஐ.சி. ரெகமண்ட் செய்தால் அதைக் கண்டிப்பாக வங்கி கொடுக்க வேண்டும் என்று ஒரு சட்டம் கொண்டு வர அரசு முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டத் தொழில் மையங்களால் பரிந்துரை செய்யப்பட்டு சிறுதொழில்களுக்குக்

1989 மார்ச் 29]

கடன் உதவி மறுக்கப்பட்டதாக இதுவரை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. அப்படி ஏதாவது மறுக்கப்படுமானால், சம்பந்தப்பட்ட வங்கிகளுக்கு மாவட்டத் தொழில் மையங்கள் மூலமாக மீண்டும் பரிந்துரை செய்து அந்தக் கடன் உதவிகளைப் பெறுவதற்கு இந்த அரசு முயற்சி செய்யும்.

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டங்கள் நிறைவேற, மத்திய மாநில அரசுகள் கடந்த 10 ஆண்டுகளில் வழங்கிய மானியங்கள் எவ்வளவு ? ஏதாவது மானியம் டைவர்ட் செய்யப்பட்டுள்ளதா ? அப்படி செய்யப்பட்டிருந்தால் எத்தனை சதவிகிதம் ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்ற திட்டங்களுக்கு, மாவட்டத் தொழில் மையங்களுக்கு ஆகும் செலவுத் தொகையை மத்திய மாநில அரசுகள் 50:50 என்கிற விகிதத்தில் அல்லது ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 4 லட்சம் ரூபாய், இதில் எது குறைவோ அது மாநில அரசால் வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்திற்கு ஒவ்வோர் ஆண்டும் ஒதுக்கப்படும் தொகை 1980 ஆம் ஆண்டிலிருந்து, தொடர்ந்து கூடுதலாகிக் கொண்டு வருகிறது. மேலும், இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை எங்கேயும் எதுவும் மாறுதல் செய்யப்படவில்லை. டைவர்ட் செய்யப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நூல் தட்டுப்பாட்டை நீக்க கூட்டுறவு ஆலைகள்.

12—(*வினா எண். 114) திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நூல் தட்டுப்பாட்டை நீக்க நெசவாளர் சங்கங்களே கூட்டுறவு முறையில் ஆலைகளை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : தலைவர் அவர்களே, நூல் தட்டுப்பாட்டை நீக்க நெசவாளர் சங்கங்களே கூட்டுறவு முறையில் ஆலைகளை ஏற்படுத்த அரசிடம் எந்தவிதமான உத்தேசமும் இல்லை.

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெசவாளர் சங்கங்களே கூட்டுறவு ஆலைகளை உண்டாக்குவது என்பது நடைமுறைக்கு வர சாத்தியம் இல்லாத ஓர் ஏற்பாடு. குறைந்தபட்சம், நடுத்தரமான நூற்பாலையை

1989 மார்ச் 29]

கடன் உதவி மறுக்கப்பட்டதாக இதுவரை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. அப்படி ஏதாவது மறுக்கப்படுமானால், சம்பந்தப்பட்ட வங்கிகளுக்கு மாவட்டத் தொழில் மையங்கள் மூலமாக மீண்டும் பரிந்துரை செய்து அந்தக் கடன் உதவிகளைப் பெறுவதற்கு இந்த அரசு முயற்சி செய்யும்.

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டங்கள் நிறைவேற, மத்திய மாநில அரசுகள் கடந்த 10 ஆண்டுகளில் வழங்கிய மானியங்கள் எவ்வளவு? ஏதாவது மானியம் டைவர்ட் செய்யப் பட்டுள்ளதா ? அப்படி செய்யப்பட்டிருந்தால் எத்தனை சதவிகிதம் ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்ற திட்டங்களுக்கு, மாவட்டத் தொழில் மையங்களுக்கு ஆகும் செலவுத் தொகையை மத்திய மாநில அரசுகள் 50:50 என்கிற விகிதத்தில் அல்லது ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 4 லட்சம் ரூபாய், இதில் எது குறைவோ அது மாநில அரசால் வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்திற்கு ஒவ்வோர் ஆண்டும் ஒதுக்கப்படும் தொகை 1980 ஆம் ஆண்டிலிருந்து, தொடர்ந்து கூடுதலாகிக் கொண்டு வருகிறது. மேலும், இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கப் பட்ட தொகை எங்கேயும் எதுவும் மாறுதல் செய்யப்படவில்லை. டைவர்ட் செய்யப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நூல் தட்டுப்பாட்டை நீக்க கூட்டுறவு ஆலைகள்.

12—(*வினா எண். 114) திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

நூல் தட்டுப்பாட்டை நீக்க நெசவாளர் சங்கங்களே கூட்டுறவு முறையில் ஆலைகளை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : தலைவர் அவர்களே, நூல் தட்டுப்பாட்டை நீக்க நெசவாளர் சங்கங்களே கூட்டுறவு முறையில் ஆலைகளை ஏற்படுத்த அரசிடம் எந்தவிதமான உத்தேசமும் இல்லை.

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெசவாளர் சங்கங்களே கூட்டுறவு ஆலைகளை உண்டாக்குவது என்பது நடைமுறைக்கு வர சாத்தியம் இல்லாத ஓர் ஏற்பாடு. குறைந்தபட்சம், நடுத்தரமான நூற்பாலையை

உருவாக்குவது என்றால் கூட 30 லட்சம், 40 லட்சத்திற்கு மேல், இன்னும் ஒரு கோடி ரூபாய் கூட தேவைப்படும். ஆகவே, இன்றைக்கு இருக்கிற கூட்டுறவு நூற்பாலைகளிலிருந்து கிடைக் கிற நூலைக் கொண்டு, தமிழ்நாட்டில் இருக்கிற 6 லட்சத் திற்கும் மேற்பட்ட கைத்தறி நெசவாளர்களுக்கு நூலை சப்ளை பண்ண, பொது நலனைக் கருதி, நூலை சேகரித்து வைத்து தேவையைப் பூர்த்தி செய்து கொடுக்க, 'நூல் வங்கி' ஒன் றினை ஏற்படுத்தி தனியார் துறையிலிருந்து குறைந்த விலையில் சப்ளை பண்ண,அரசின் செல்வாக்கைப்பயன்படுத்தி அதைவாங்கி கூட்டுறவு நூலையும், இதையும் சேர்த்து பங்கிட்டுக் கொடுக்கும் வகையில் அரசு ஏதாவது திட்டத்தினை உருவாக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் கூட்டுறவு நூற்பாலைகள் 18 இருக்கின்றன. இதில் 4 இலட்சத்து 59 ஆயிரம் கதிர்கள் கூட்டுறவு நூற்பாலைகளில் 16 ஆயிரம் பேல் பருத்தி நூல் உற்பத்தி செய்யப்படுகின்றது. இந்த நூல் 'கோவாப் டெக்ஸ்' மூலம் நியாயமான விலையில் கூட்டுறவுச் சங்கங் களுக்கு வழங்கப்படுகிறது.

திரு. சே. ஆர். ஜி. தனபாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு நூற்பாலைகளில் 'சிட்டா' நூல்களை தயாரிப்பதை விட்டுவிட்டு, 'கோன்' நூல்களைத் தயாரித்து வெளி மாநிலங்களுக்கு அனுப்புவதால் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக நெசவாளர்களுக்கு நூல்கள் கிடைப்ப தில்லை. ஆகவே, நூல் வினியோகம் செய்யும் ஏற்பாட்டுக்கு அரசே வழிவகை செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உற்பத்தியாகின்ற நூல்களைப் போதிய அளவுக்கு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வினியோகம் செய்த பிறகு மீதியுள்ள நூல்கள்தான் வட மாநிலங்களுக்கு விற்பனைக்குப் போகிறது.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழையெளிய நெசவாளர்களுக்கு உதவு கின்ற வகையில் நூல் சப்ளை செய்வதற்காக 'லெவி சுகர்' 'லெவி நெல்' என்று கொள்முதல் செய்து சப்ளை செய்வது போல நூலையும் லெவி முறையில் கொள்முதல் செய்து, குறைந்த விலையில் ஏழையெளிய கைத்தறி நெசவாளர் களுக்கு வழங்க அரசே ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி பரிசீலனை செய்யப் படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

1989 மார்ச் 29]

திரு. வி. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் நூல் தட்டுப்பாடு காரணமாக நெசவாளர்கள் வேலையின்றி இருக்கிறார்கள். அவர்களுக்குச் சலுகை விலையில், குடும்பக் கார்டு மூலமாக நூல் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10–00)

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : தலைவரவர்களே, இதற்குத் தனி வினா எழுப்பினால் விரிவான விடை தர முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. தகவல் கோரல்

நாடாளுமன்றத்தில் தக்கர் கமிஷன் அறிக்கை வெளியிடப் பெற்றுள்ளது குறித்து.

THIRU M. ABDUL LATHEEF : Mr. Speaker, on a point of order, I crave the indulgence of the Hon. Speaker to raise a matter of public importance, not only public importance, but it is a matter of urgent national importance. I mean, other things being equal, I seriously doubt whether I could raise this at all because of the question of jurisdiction. What I submit is, that the nation is seized of the very serious matter in connection with the publication of the Thakkar Commission Report. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் விடை சொல்லும் வரையில் பொறுமையாக இருக்கலாம் அல்லவா ?

திரு. எம். அப்துல் லத்தீப்: தலைவரவர்களே, மிகமுக்கியமான பகுதி, தக்கர் கமிஷன் ரிப்போர்ட்டிலே. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் அனைவரும் உட்காரலாம். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். ஒரு நாளைக்கு ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம்தான் எடுத்துக் கொள்ள வேண்டுமென்பது மரபு, இப்போது நான் அறிவிக்கப் போகிற ஒத்திவைப்புத் தீர்மானத்தில் தொடர்ந்து உரையாற்றலாம். (குறுக்கீடு) எந்த வகையான முன்னறிவிப்பும் கொடுக்காமல் எழுப்பக்கூடாது.

1989 மார்ச் 29]

திரு. வி. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் நூல் தட்டுப்பாடு காரணமாக நெசவாளர்கள் வேலையின்றி இருக்கிறார்கள். அவர்களுக்குச் சலுகை விலையில், குடும்பக் கார்டு மூலமாக நூல் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10–00)

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : தலைவரவர்களே, இதற்குத் தனி வினா எழுப்பினால் விரிவான விடை தர முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. தகவல் கோரல்

நாடாளுமன்றத்தில் தக்கர் கமிஷன் அறிக்கை வெளியிடப் பெற்றுள்ளது குறித்து.

THIRU M. ABDUL LATHEEF : Mr. Speaker, on a point of order, I crave the indulgence of the Hon. Speaker to raise a matter of public importance, not only public importance, but it is a matter of urgent national importance. I mean, other things being equal, I seriously doubt whether I could raise this at all because of the question of jurisdiction. What I submit is, that the nation is seized of the very serious matter in connection with the publication of the Thakkar Commission Report. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் விடை சொல்லும் வரையில் பொறுமையாக இருக்கலாம் அல்லவா ?

திரு. எம். அப்துல் லத்தீப்: தலைவரவர்களே, மிகமுக்கியமான பகுதி, தக்கர் கமிஷன் ரிப்போர்ட்டிலே. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் அனைவரும் உட்காரலாம். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். ஒரு நாளைக்கு ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம்தான் எடுத்துக் கொள்ள வேண்டுமென்பது மரபு, இப்போது நான் அறிவிக்கப் போகிற ஒத்திவைப்புத் தீர்மானத்தில் தொடர்ந்து உரையாற்றலாம். (குறுக்கீடு) எந்த வகையான முன்னறிவிப்பும் கொடுக்காமல் எழுப்பக்கூடாது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, தமிழ்நாடு சட்டமன்ற நிகழ்ச்சி குறித்து நாடாளுமன்றத்திலே காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களும், அ.தி.மு.க. உறுப்பினர்களும் பிரச்சினை எழுப்பியபோது நாடாளுமன்றத்தினுடைய தலைவர் அதை அனுமதிக்கவில்லை. அதே முறையைத் தாங்களும் இங்கே பின்பற்றுவது நாடாளுமன்ற-சட்டமன்ற உறவை நிலைப்படுத்து வதற்கு உதவுமென்று கருதுகிறேன்.

4, ஒத்திவைப்புத் தீர்மானம்— எதிர்க்கட்சித் தலைவர் மீது வழக்கு தொடர்ந்துள்ளது மற்றும் எதிர்க்கட்சித் தொண்டர்கள் கைது செய்யப் பெற்றுள்ளது தொடர்பான பதட்ட நிலை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அருள்கூர்ந்து திரு. லத்தீப் அவர்கள் உட்கார வேண்டும். இப்போது ஒத்திவைப்புத் தீர்மானம். சட்டமன்றப் பேரவையின் எதிர்க்கட்சித் தலைவர் மீது வழக்குத் தொடர்ந்துள்ளதாகவும், இதைத் தொடர்ந்து அந்தக் கட்சியின் தொண்டர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டு அதையொட்டித் தமிழகம் முழுவதும் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து சட்டமன்றப் பிற அலுவல்களை ஒத்தி வைத்து, அவையில் விவாதிக்க அனுமதி கோரி, கீழ்க்கண்ட உறுப்பினர்கள் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான அறிவிப்புகளைக் கொடுத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு எதிர்க் கட்சித் துணைத் தலைவர் திரு. எஸ். திருநாவுக்கரசு, திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன், திரு.எஸ்.ஆர். இராதா, திரு. ஆர்.அண்ணா நம்பி, திரு. கே. ஏ. செங்கோட்டையன், திரு எஸ். டி. உகம்சந்த். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை மிகச் சுருக்கமாக விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். அப்துல் லத்தீப் : மற்ற சட்டமன்றங்களிலே....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அப்துல் லத்தீப் அவர்கள் இதுபற்றி எழுத்து மூலமாகக் கொடுத்தால் கவனித்து விடை சொல்லப்படும். (குறுக்கீடு).

திரு. குமரி அனந்தன் : சபாநாயகர் அவர்கள் தீர்ப்பு தவறானது என்று மாண்புமிகு உறுப்பினர் பேசுவது மரபுகளுக்கு, சட்டத்திற்கு மாறானது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்போது திரு. குமரி அனந்தன் அவர்கள், சபாநாயகர் தீர்ப்பு தவறானது என்று உறுப்பினர் சொல்லக்கூடாது என்று கூறியதைக் கோடிட்டு வைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, தமிழ்நாடு சட்டமன்ற நிகழ்ச்சி குறித்து நாடாளுமன்றத்திலே காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களும், அ.தி.மு.க. உறுப்பினர்களும் பிரச்சினை எழுப்பியபோது நாடாளுமன்றத்தினுடைய தலைவர் அதை அனுமதிக்கவில்லை. அதே முறையைத் தாங்களும் இங்கே பின்பற்றுவது நாடாளுமன்ற-சட்டமன்ற உறவை நிலைப்படுத்துவதற்கு உதவுமென்று கருதுகிறேன்.

4, ஒத்திவைப்புத் தீர்மானம்— எதிர்க்கட்சித் தலைவர் மீது வழக்கு தொடர்ந்துள்ளது மற்றும் எதிர்க்கட்சித் தொண்டர்கள் கைது செய்யப் பெற்றுள்ளது தொடர்பான பதட்ட நிலை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அருள்கூர்ந்து திரு. லத்தீப் அவர்கள் உட்கார வேண்டும். இப்போது ஒத்திவைப்புத் தீர்மானம். சட்டமன்றப் பேரவையின் எதிர்க்கட்சித் தலைவர் மீது வழக்குத் தொடர்ந்துள்ளதாகவும், இதைத் தொடர்ந்து அந்தக் கட்சியின் தொண்டர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டு அதையொட்டித் தமிழகம் முழுவதும் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து சட்டமன்றப் பிற அலுவல்களை ஒத்தி வைத்து, அவையில் விவாதிக்க அனுமதி கோரி, கீழ்க்கண்ட உறுப்பினர்கள் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான அறிவிப்புகளைக் கொடுத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு எதிர்க் கட்சித் துணைத் தலைவர் திரு. எஸ். திருநாவுக்கரசு, திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன், திரு.எஸ்.ஆர். இராதா, திரு. ஆர்.அண்ணா நம்பி, திரு. கே. ஏ. செங்கோட்டையன், திரு எஸ். டி. உகம்சந்த். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை மிகச் சுருக்கமாக விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். அப்துல் லத்தீப் : மற்ற சட்டமன்றங்களிலே. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அப்துல் லத்தீப் அவர்கள் இதுபற்றி எழுத்து மூலமாகக் கொடுத்தால் கவனித்து விடை சொல்லப்படும். (குறுக்கீடு).

திரு. குமரி அனந்தன் : சபாநாயகர் அவர்கள் தீர்ப்பு தவறானது என்று மாண்புமிகு உறுப்பினர் பேசுவது மரபுகளுக்கு, சட்டத்திற்கு மாறானது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்போது திரு. குமரி அனந்தன் அவர்கள், சபாநாயகர் தீர்ப்பு தவறானது என்று உறுப்பினர் சொல்லக்கூடாது என்று கூறியதைக் கோடிட்டு வைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1989 மார்ச் 29]

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு முதல்வரவர்கள் சொன்னதைக் கோடிட்டு வைத்துக்கொள்ள வேண்டும்.

திரு. இரா. மோகன் : தலைவரவர்களே,......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுடைய ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி வழங்கவில்லை. உட்காரலாம்.

திரு. இரா. மோகன் : தலைவர் அவர்களே

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் உங்களுடைய ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி வழங்கவில்லை. நீங்கள் உட்காரலாம்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** ** தமிழகத்தில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலைகளையொட்டியும், அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து, அவற்றை இங்கே விவாதிக்க வேண்டும் என்கிற இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை அவையின் முன்வைத்து, அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து, விவாதிக்க வேண்டுமென்று பேரவைத் தலைவராகிய உங்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

25 ஆம் தேதி, மாண்புமிகு சட்டமன்றத்தினுடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எழுந்து, தன் மேலேயும், தன் குடும்ப நண்பர்கள் மேலேயும், தன்னுடைய உதவியாளர்கள் மேலேயும், பொய் வழக்குகள் போடப்படுவதைச் சுட்டிக்காட்டி, சட்டத்திற் குப் புறம்பாகக் கைது செய்யப்படுவதைச் சுட்டிக்காட்டி, இந்த மன்றத்தினுடைய கவனத்திற்கு அந்தப் பிரச்சினைகளைக் கொண்டுவர முற்பட்டார்கள். பொதுவாக, வரவு-செலவுத் திட்டம் படிக்கப்படுகிறபோது....

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒரு ''பாயின்ட் ஆப் இன்பர்மேஷன்''. நம்முடைய எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் தந்திருக்கிற ஒத்திவைப்புத் தீர்மானத்தில், இப்போது அவர் பேசக்கூடிய எந்தப் பொருளும் இல்லை. அவர் கொடுத்திருக்கிற ஒத்திவைப்புத் தீர்மானத்தில், ''சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவராக உள்ள செல்வி ஜெயலலிதா அவர்கள் சட்டமன்றக் கடமைகளைச் செவ்வனே செய்ய இயலாத விதத்தில், காவல் துறையினர் போலீஸ் கமிஷனரின் உத்தரவின் பேரில், அவர்மீது கொலை முயற்சி உட்பட பல்வேறு பிரிவுகளிலும் பொய் வழக்கு தொடர்ந்தும், அவருடைய

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

உதவியாளர்கள், குடும்ப நண்பர்கள் மீதும் பொய் வழக்குத் தொடர்ந்தும், அவர்களைக் கைது செய்தும், பல்வேறு சிரமங்களையும், தொல்லைகளையும் தந்து, மக்களுக்கான அவரது பணிகளையும், அவரது சொந்த அலுவல்களையும் செய்யவிடாது, சட்டபூர்வமற்ற முறையில் காவல்துறை செயல்பட்டு வருகிறது. எதிர்க்கட்சியை ஒழிக்கும் நோக்கத்திலும், எதிர்க்கட்சித் தலைவரான ஜெயலலிதா அவர்களுக்குத் தொல்லை தருகிற விதத்திலும் காவல் துறை செயல்படுவதால், சட்டம் ஒழுங்கு கெடும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்த ஜனநாயக விரோதப் போக்கைக் கண்டித்த எங்கள் கழகத் தொண்டர்களை ஆயிரக்கணக்கில் கைது செய்துள்ளதால், தமிழகம் முழுவதும் பதட்ட நிலை ஏற்பட்டுள்ளது. இந்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகளைப்பற்றி விவாதிக்க சட்டமன்றத்தின் பிற அலுவல்களை ஒத்திவைத்து இந்த முக்கிய பிரச்சினை குறித்து அவையில் விவாதிக்க அனுமதி வழங்கக் கேட்டுக் கொள்கிறேன்'' என்று தான் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தில் இருக்கிறது. அந்த அடிப்படையில் பேசுவதுதான் ஒத்திவைப்புத் தீர்மானத்தின் அடிப்படையில் பேசியதாகப் பொருள். அப்படியில்லாமல் பேசினால்—நம்முடைய எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் இங்கே எடுத்துக் கொண்ட அதே மரபைப் பின்பற்றி, ஒவ்வொரு ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீதும், அனைவரும் பேச நேரிடும். எனவே, அது முன்மாதிரியாகிவிடக் கூடாது. எனவே எந்த ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறாரோ அதன் அடிப்படையிலேயே பேசுவதுதான் நல்லது என்று கருதுகிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் கொடுத்திருக்கிற ஒத்திவைப்புத் தீர்மானத்தைப் படிக்கிறேன்.

'' சட்டமன்ற விதி 56-ன் கீழ் கீழ்க்கண்ட ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டுவர அனுமதி வேண்டுகிறேன்.

** ** **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எந்த ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் அனுமதிக்கப்பட்டிருக்கிறதோ அந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீதுதான் பேச வேண்டும். மீண்டும் நான் படிக்கிறேன், உங்கள் கவனத்திற்காக.

'' சட்டமன்றப் பேரவையின் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்மீது வழக்குத் தொடர்ந்துள்ளதாலும், இதனைத் தொடர்ந்து அந்தக் கட்சியின் தொண்டர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாலும், தமிழகம் முழுவதும் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து, சட்டமன்றத்தின் பிற அலுவல்களை ஒத்திவைத்து இந்தப் பிரச்சினை குறித்து அவையில் விவாதிக்க வேண்டும் '' என்று கோரும் ஒத்திவைப்புத் தீர்மானம்தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1989 மார்ச் 29]

(முற்பகல் 10-10)

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு தலைவரவர்களே, நீங்கள் அனுமதித்துள்ள ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது தவிர அன்றைக்கு அவையில் நடைபெற்ற மற்ற சம்பவங்கள் பற்றி இங்கே கிளப்பப்பெற்றவை பற்றி அவைக் குறிப்பிலிருந்து....

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு தலைவரவர்களே, இந்த மன்றத்திலே நடைபெற்ற நிகழ்ச்சி பற்றி ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டுவருவது வழக்க மில்லை ; வாடிக்கையும் இல்லை ; உரிமை மீறல் பற்றிய பிரச்சினை வேண்டுமானால் கொண்டு வரலாம். இந்த மன்றத் தில் நடந்த நிகழ்ச்சியைப் பற்றி ஒத்திவைப்புத் தீர்மானமாக விவாதிக்க முடியாது என்று விதி இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது வேறு செய்தி தான் வரப்போகிறது.

திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, இங்கே எடுத்துக் கொண்டிருக்கிற, அடுத்ததாகக் கோருகிற ஒத்தி வைப்புத் தீர்மானம் 24 ஆம் தேதி கொடுக்கப்பட்டதாகும். அன்றைக்கிருந்த நிலைமைகளையொட்டி அந்த ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுக்கப்பட்டிருந்தது. அதற்குப் பின்னால் 25ஆம் தேதி அதைவிட மோசமான, சட்டமன்ற வரலாற்றிலேயே களங்கம் ஏற்படுத்தக்கூடிய மிகப் பெரிய வன்முறைச் சம்பவம் நடந்து, அதையொட்டி 24 ஆம் தேதிக்கு முன்பு இருந்ததை விட வேகமான அளவில் கைதும், வன்முறையும் சட்டமன்றத் திற்கு வெளியே தமிழகத்தில் ஏற்பட்டுள்ளது. எனவே ஒத்தி வைப்புத் தீர்மானம் என்பது வெகு சமீபத்திலே மிகப் பதட்ட நிலையை ஏற்படுத்தக் கூடிய எந்தச் சூழ்நிலை வெளியே இருக் கிறதோ, அதையொட்டிக் கொடுத்திருப்பதற்குத்தான் முன் னுரிமை கொடுத்து, 25 ஆம் தேதி நாங்கள் கேட்டிருக்கிற ஒத்திவைப்புத் தீர்மானத்தை நீங்கள் எடுத்துக் கொள்ளவேண் டும். இரண்டுமே ஒரே விஷயங்கள்தான். 24 ஆம் தேதி ஏற்பட்ட நிகழ்ச்சிகள், அதையொட்டி 25 ஆம் தேதி நடந்த நிகழ்ச்சிகள், அதையொட்டி கடந்த 3 நாட்களாக தமிழகத் திலே வெளியே ஏற்பட்டிருக்கிற பதட்ட நிலைகள் ஆகிய இரண் டையும் எடுத்துக் கொண்டு விவாதிக்க நீங்கள் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இல்லையென்றால் இது முடிந்தவுடனே அந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்வதாக இருந்தால் அதிலே பேசுகிறோம். சட்ட மன்றத்திலே பல ஒத்திவைப்புத் தீர்மானங்கள் (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குக் குறிப்பிட விரும்புவது, நேற்றே இது பற்றிய பிரச்சினைகள் எழுந்தபோது, அலுவல் ஆய்வுக் குழுவிலே

வரிசைப்படுத்தி முறைப்படுத்துவோம் என்று அறிவித்து, அதன் படி அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்திலே என்ன முடிவு எடுக்கப் பட்டதோ அந்த அடிப்படையில்தான் முதலில் நீங்கள் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு முன்னுரிமை கொடுத்துத் தரப் பட்டிருக்கிறது. அதன் பேரில் இப்போது நீங்கள் விவாதம் நடந்து முடிந்த பிறகு அடுத்து என்ன செய்ய வேண்டுமென் பதைப் பேரவைத் தலைவர்தான் தீர்மானிக்க வேண்டுமே தவிர, இதையும் எடுத்துக் கொள்ளுங்கள், அதையும் எடுத்துக் கொள் ளுங்கள் என்று நீங்கள வற்புறுத்துவதோ அல்லது இரண்டையும் எடுத்துக் கொள்ளுங்கள் என்பதோ விதிமுறைகளுக்கு மாறானது என்பது மட்டுமல்லாமல் இப்போது உங்கள் முன்னால் வைக்கப் பட்ட ஒத்திவைப்புத் தீர்மானத்தை வற்புறுத்துகிறீர்களா என் பதை மட்டும் தெளிவுபடுத்துங்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, நேற்று அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தைப் பற்றிச் சொன் னீர்கள். அங்கே விவாதிக்கப்பட்டபோதுகூட ஒத்திவைப்புத் தீர்மானம் முதலில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமானால் வரிசைப்படி தோழர் திரு. ரமணி கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானம்தான் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். அவர்தான் முன்பே ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத் திருக்கிறார். அப்படியிருந்தும்கூட எதிர்க்கட்சியினுடைய ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ளலாம் என்று— அவர்கள் அங்கே எதிர்க்கட்சித் துணைத் தலைவரோ அல்லது காங்கிரஸ் கட்சித் தலைவரோ யாரும் அலுவல் ஆய்வுக் குழுவுக்கு வராமல் இருந்தும்கூட—அவர்களுடைய ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றுதான் அலுவல் ஆய்வுக் குழுவிலே முடிவு செய்யப்பட்டது. அதன்படி எந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்வது என்று முடிவு செய்யப்பட்டதோ அந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைப் பற்றித் தான் இப்போது பேசுவது நல்லது. இல்லாவிட்டால் இதுவே ஒரு முன்மாதிரியாகி அதையே ஒவ்வொருவரும் ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுக்கும்போது வேறு பிரச்சினை களைப் பற்றிப் பேசத் தொடங்கி விடுவார்கள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் இங்கே உங்களிடத்திலே வேண்டிக் கொண்டது இரண்டு ஒத்திவைப்புத் தீர்மானங்களும் ஒரே பொருள்பற்றித்தான். வெளியே ஏற்பட்டிருக்கிற சட்ட ஒழுங்குப் பிரச்சினை பற்றியும், பாதிப்பு பற்றியும், வன்முறைச் சம்ப வங்கள் பற்றியும்தான் 25 ஆம் தேதி கொடுத்திருக்கிறோம். அதே பொருள் குறித்து 24 ஆம் தேதியும் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறோம். எனவே, அதைப் பற்றி நாங்கள் பேசுகிற பொழுது, சட்டமன்றத்திலே நடந்த நிகழ்ச்சிகளை மட்டும் விவாதிக்க நாங்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுக்கவில்லை

1989 மார்ச் 29] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

இதையொட்டி வெளியே ஏற்பட்ட நிலைமையைத்தான் சொல்கிறேன். எனவே, இதையும் நாங்கள் குறிப்பிட்டுச் சொல்வதற்கு நீங்கள் அனுமதிக்க வேண்டும். முதலிலேயே இங்கே நடந்த நிகழ்ச்சி எதையும் பேசக் கூடாது என்று சொன்னால் அப்பொழுது இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்தே பிரயோசனம் இல்லை ; அதனாலே எந்தப் பயனும் இல்லை.

மாண்புமிகு பேரவை தலைவர்: இங்கே நடந்த நிகழ்ச்சிகள் பற்றிய குறிப்பை என்ன செய்ய வேண்டுமென்பதை, ஒத்திவைப்புத் தீர்மானம் முடிந்த பிறகுதான் நான் அறிவிக்க முடியும்.

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சட்டசபையில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் குறித்து ஒத்திவைப்புத் தீர்மானம் எடுக்கப்பட்டு விவாதிக்கப்பட்டால் பதில் சொல்வது யார் ? சபாநாயகர் சட்டமன்றத்தில் நின்று பதில் சொல்லக் கூடாது. இதுபோல பல்வேறு பிரச்சினைகளை நாங்கள் எங்களுடைய அறையிலேதான் அழைத்துத் தீர்த்து இருக்கின்றோம். இந்தப் பிரச்சினைகள் போன்று பல்வேறு நேரங்களில் விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் நடந்த நேரமெல்லாம், பல்வேறு உறுப்பினர்கள் தாக்கப்பட்ட நேரங்களிலே கூட நாங்கள் அழைத்துப் பேசியிருக்கின்றோம். சபாநாயகர் நின்று பதில் சொல்லக் கூடாது, அவ்வளவுதான்.

திரு. என். கணபதி : பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தச் சட்டமன்றத்தில் நடந்த விரும்பத்தகாத நிகழ்ச்சிகளைப் பற்றி உரிமை மீறல் பிரச்சினைகள் நேற்று கொடுக்கப்பட்டு, அதைப் பற்றி விரிவான ஒரு விளக்க உரை இங்கே தரப்பட்டு, தங்கள் தீர்ப்பிலே அந்தப் பொருள் இருக்கிறது. அப்படியிருக்கின்ற நேரத்தில், அதே பொருளைப் பற்றி இன்று மீண்டும் விவாதம் செய்வது என்பது எந்த விதிமுறையின் கீழ் வருகிறது ? இதை நீங்கள் அனுமதிக்கப் போகின்றீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உங்களிடமிருந்து ஒரு தீர்ப்பை நான் எதிர்பார்க்கிறேன். ஒத்திவைப்புத் தீர்மானம் என்பது அவைக்கு வெளியிலே நடக்கக்கூடிய மக்களுக்கு ஏற்படக்கூடிய பிரச்சினைகளைப் பற்றி, அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து அரசினுடைய பதிலைப் பெறுவதற்காக எழுப்பப்படக் கூடியதா அல்லது அவைக்குள்ளேயே நடக்கக்கூடிய பிரச்சினைகளைப் பற்றி ஒத்திவைப்புத் தீர்மானங்கள் வருவதற்கு விதிமுறைகளில் ஏதாவது வழி இருக்கிறதா ? எனவே, ஒத்திவைப்புத் தீர்மானம் என்றால் அவைக்கு வெளியிலே உள்ளதை மட்டும் எடுப்பீர்களா ? அல்லது

[திரு. கோ. வீராயன்] [1989 மார்ச் 29

குள்ளேயே நடக்கக் கூடியதைப் பற்றியும் நீங்கள் எடுப்பீர்களா என்பதற்கு உங்களுடைய தீர்ப்பை நீங்கள் அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவைக்கு வெளியிலே நடந்த நிகழ்ச்சிகள் பற்றித்தான் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வர முடியும், அவைக்கு உள்ளே நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றிப் பேசித்தான் தீர்க்க முடியுமே தவிர, அது எந்த வகையான ஒத்திவைப்புத் தீர்மானத்திலும் வராது.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் ஒத்தி வைப்புத் தீர்மானத்தை எடுப்பதற்கு முன்னாலேயே ஏறக்குறைய பத்து பாயின்ட் ஆப் ஆர்டர்கள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. தயவு செய்து என்னைப் பேச அனுமதிக்குமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

சபையிலே நடைபெற்ற நிகழ்ச்சிகளைப் பற்றி நான் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுக்கவில்லை. சபைக்கு வெளியிலே இருக்கிற பதட்ட நிலை, கைது, வன்முறை இவை குறித்துத் தான் நாங்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்துள்ளோம். 24 ஆக இருந்தாலும் அல்லது 25 ஆம் தேதி கொடுத்ததாக இருந்தாலும் சரி, அதற்கெல்லாம் எது மூல காரணமாக இருந்ததோ அந்த மூலகாரணத்தைப் பற்றி நான் சொல்ல வந்தேன். அவ்வளவுதான். எனவே, அதற்கு நீங்கள் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம், எதனாலே இந்தப் பதட்ட நிலை ஏற்பட்டிருக்கிறது, ஏன் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள், எப்படி வன்முறை நடக்கிறது, ஏன் நடக்கிறது என்று சொல்கிறபொழுது அதற்கு முன்னாலே நடந்த சம்பவங்களை நான் சுட்டிக்காட்ட வேண்டியிருக்கிறது. எனவே, சபைக்குள்ளே நடந்ததைப் பற்றி நான் இங்கே எந்த ஒத்திவைப்புத் தீர்மானமும் தரவில்லை. எனவே, நீங்கள் ஏற்கனவே கொடுத்ததை எடுத்துக் கொண்டாலும், இரண்டும் ஏறக்குறைய ஒன்று தான் என்கின்ற காரணத்தினாலே, அந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திலே நான் உரையாற்ற விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 24 ஆம் தேதி நீங்கள் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை நான் அனுமதித்து இருக்கிறேன் ; அருள்கூர்ந்து அந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திலே பேச வேண்டுகிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 24 ஆம் தேதி நான் கொடுத்திருக்கிற ஒத்திவைப்புத் தீர்மானமும், சபைக்கு வெளியே இருக்கிற பதட்ட நிலை, வன்முறைகளைப் பற்றியதுதான். 25 ஆம் தேதி கொடுத்தது அதை விட இன்னும் அந்தச் சூழ்நிலை அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை ஒட்டிக் கொடுத்திருக்கிறேன்.

எனவே, 24 ஆம் தேதி நான் கொடுத்த அந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திலே குறிப்பிட்டிருப்பதைப் போல, எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிற மாண்புமிகு உறுப்பினர் செல்வி ஜெய லலிதா அவர்கள் மீது, வெளியே யாரோ கொடுத்த புகாரின் அடிப்படையை ஏற்றுக் கொண்டு, ஜாமீனிலே வரமுடியாத பல்வேறு விதிகளின் கீழே வழக்குகளைத் தொடர்ந்து காவல்துறை ஆணையாளர் வரம்பு மீறி செயல்பட்டுள்ளார். காவல்துறை ஆணையாளர் வரம்பு மீறி செயல்பட்டது மட்டுமல்ல; தினமும் ஒரு அரசியல்வாதியைப் போல, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டிருக்கிற சிலரைத் தேடிப்பிடித்து, அவர்களிட மிருந்து புகார் மனுக்களைப் பெற்றுக் கொண்டு அல்லது தயாரித்து அவற்றைப் பதிவு செய்துகொண்டு, அரசியல்வாதிகளை விட இன்னும் அதிகமாக, காலை ஒரு தடவை, மாலை ஒரு தடவை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை, எதிர்க்கட்சியினுடைய தலைவரை அவமானப்படுத்து கிற விதத்திலே, களங்கம் கற்பிக்கிற விதத்திலே, பல்வேறு விதமான புகார்களைப் பத்திரிகையிலே சொல்லிக் கொண்டே யிருந்தார்.

(முற்பகல் 10-20)

இதுதான் பல்வேறுவிதமாக பின்னாலே ஏற்பட்ட பாதிப்பு களுக்கு, வன்முறைக்குக் காரணமாக அமைந்தது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட இங்கே சொல்கிறபோது, எதிர்க் கட்சித் தலைவர் மீது வழக்கு போட்டது தனக்கே கூட தெரியாது. அதற்கு பின்னால் அந்த வழக்கை தொடர வேண்டாம் என்றுகூட நான் கேட்டுக் கொண்டேன் என்று சொன்னார்கள். அந்த அளவிற்கு முதலமைச்சர் அவர்களைக் கூடக் கலக்காமல்—அவர் வாதத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன்—அமைச்சர் அந்தஸ்தில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் மீது வழக்குப் பதிவு செய்து, அவசரம் அவசரமாக பத்திரிகைகளில் அந்தச் செய்தி வர வேண் டும் என்பதற்காக, பத்திரிகையாளர்களிடத்தில் சொல்லி பிரசுரிக்கச் செய்து, இப்படி வெளியே பதட்ட நிலையை, கைது களை ஏற்படுத்தியவர், செய்தவர் கமிஷனர் திரு. துரை ஆவார். எனவே, அவர் மீது, இந்த உரிமைப் பிரச்சினை வாயிலாக நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன், சட்டத்திற்குப் புறம்பாக.........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் பேசுவது ஒத்தி வைப்புத் தீர்மானத்தில், உரிமைப் பிரச்சினையில் அல்ல.

திரு. எஸ். திருநாவுக்கரசு: எனவே, மாண்புமிகு முதலமைச் சர் அவர்களை இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மூலமாக கேட்டுக் கொள்வது, இப்படி தன்னுடைய அதிகாரத்தை மீறி, எதிர்க்கட்சித் தலைவருடைய குடும்ப நண்பருடையவீட்டிலிருந்து கடிதத்தை எடுத்து வந்து, சட்டத்திற்குப் புறம்பாக அதைப்

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1989 மார்ச் 29

பயன்படுத்தி, பேரவைத் தலைவராகிய தங்களுக்கும் தந்து, பத்திரிகைகளுக்கும் தந்து, இப்படி ஒரு அரசியல்வாதியைப் போல் அத்துமீறி செயல்பட்டிருக்கிற காவல் துறை ஆணையாளர் மீது நடவடிக்கை எடுத்து, அந்தப் பதவியிலிருந்து அவரை மாற்றி, அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த அரசை நான் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மூலமாக வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதையொட்டி தமிழகம் முழுவதும்—மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட நேற்று சுமார் 1,500 பேர்கள்தான் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். ஆனால் உங்களுக்கும், உங்கள் மூலமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர் களுக்கும் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன், நான் விசாரித் தேன். திருச்சி ஜெயிலில் மட்டும் சுமார் 2,500 பேர்களுக்குக் குறையாமல் இருக்கிறார்கள். அதைப் போல சென்னையில் ; இப்படி தமிழகம் முழுவதும் ஏறக்குறைய—நேற்று நான் சொன்ன போது 10,000 பேர்கள் என்று சொன்னேன். இன்றைக்குக் கிடைத்திருக்கிற தகவல்படி இன்னும் அதைவிட அதிகமாகவே தமிழகம் முழுவதும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன் னேற்றக் கழகத் தொண்டர்கள், தலைவர்கள், அதைப் போல காங்கிரஸ் கட்சியின் தொண்டர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார் கள். இதிலே என்ன மகிழ்ச்சி ஆளுகிற கட்சிக்கு என்று எனக்குத் தெரியாது. நேரிடையாக வன்முறையில் ஈடுபட்ட சிலரைக் கைது செய்வதில் ஆட்சேபணை இல்லை. ஆனால் எந்தவித வன்முறைச் சம்பவத்திலும் ஈடுபடாத அப்பாவித் தொண்டர்களை எல்லாம் கைது செய்து, பல்லாயிரக்கணக்கில் ஜெயிலில் அடைப்பதன் மூலமாக, எதிர்க்கட்சியை, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை நிச்சயமாக அழித்துவிட முடியாது. அதற்குக் காவல்துறை தவறாகப் பயன்படுத்தப்படுகிறது. தொண்டர்கள், தலைவர்கள் அச்சுறுத்தப்படுகிறார்கள். பல் வேறு மாவட்டச் செயலாளர்களுடைய வீடுகள், கார்கள் நொறுக்கப்பட்டுள்ளன. எனவே, இப்படிச் சட்டத்திற்குப் புறம் பாக காவல் துறையினரே—வன்முறையைத் தடுக்க வேண்டிய காவல் துறையினரே—வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டு வெளியே இருக்கிற பதட்ட நிலையை அதிகரிக்கச் செய்து, தமிழகம் முழுவதும் பதட்ட நிலை பொதுமக்கள் மத்தியில் ஏற் பட்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மூலமாகக் கேட்டுக்கொள் கிறேன். வெளியே கைது செய்யப்பட்டிருக்கிற அப்பாவித் தொண்டர்களை விடுவிக்க வேண்டுமென்று நான் எதிர்க்கட்சி களின் சார்பிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்களுக்கே தெரியும், எந்த எதிர்க்கட்சியையும் நிச்சயமாக காவல் துறையைக் கொண்டு அழித்து விட முடியாது—கொஞ்ச நாட்கள் சிறைகளில் அடைக்கப் பட்டு, அவர்கள் சித்ரவதை செய்யப்படுவதைப் பார்த்து அதிலே வேண்டுமானால் மகிழ்ச்சி அடையலாமே தவிர, அந்த மகிழ்ச்சி

1989 மார்ச் 29] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

நிரந்தரமானதாக இருக்க முடியாது. அதனால் நீங்கள் பலன் எதையும் பெறப் போவதில்லை. எனவேதான் நான் இந்த அரசைக் கேட்டுக் கொள்வது, காவல் துறை அதிகாரிகளைக் கட்டுப்படுத்தி, தவறு செய்கிற கமிஷனர் திரு. துரை போன்றவர்களை நீங்கள் கண்டிக்க வேண்டும். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பெயரில் வங்கியிலே இருக்கிற கணக்குகளைக் கூட ஆபரேட் செய்யவிடாமல் உத்தரவிட்டிருக்கிறேன், வங்கிகளைக் கேட்டு இருக்கிறேன் என்று சொல்லக் கூடிய அளவிற்கு கமிஷனர் திரு. துரை அவர்கள் பத்திரிகையிலே பேட்டி கொடுத்திருக்கிறார்கள். தினம் தினம் அவர்களுடைய பேட்டிகள் பத்திரிகையிலே வந்ததை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பார்த்து இருப்பார்கள், நீங்களும் பார்த்து இருப்பீர்கள். இப்படி அத்துமீறி செயல் பட்ட கமிஷனர் திரு. துரை மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது என்னுடைய முதல் டிமாண்ட், அல்லது முதல் கோரிக்கை ஆகும். அதையொட்டி, சட்டமன்றத்திலே அந்தச் சம்பவங் களை எழுப்ப முயன்ற எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை, இங்கே இருக்கிற மாண்புமிகு அமைச்சரே, திரு. துரைமுருகன் அவர்களே, சேலையைப் பிடித்து இழுத்து (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதைப் பற்றி உங் களுடைய பேச்சுக்குள்ளே வரக்கூடாது. (குறுக்கீடு). ஒத்தி வைப்புத் தீர்மானத்தின்மீது தான் பேச வேண்டும். ஏன் ஒத்திவைக்க வேண்டும் என்பதைப்பற்றி மட்டும் பேசுங்கள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: நான் சொல்லி முடித்துவிடு கிறேன். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவண்டும். (குறுக் கீடு) (கூச்சல்-குழப்பம்) இன்றே முடித்துவிடுவோம். என்னைப் பேச விடுங்கள். (குறுக்கீடு). என்னைப் பேசவிட்டால் தானே? (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் உட்காருங் கள். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, என் மீது வேண்டுமென்றே, களங்கம் கற்பிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, என்னுடைய அரசியல் புகழுக்குக் குந்தகம் ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தோடு, திட்டமிட்டு, எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிற செல்வி ஜெயலலிதா அவர்களும், அவருடைய கட்சியைச் சேர்ந்தவர்களும் வெளியில், நான் அந்த அம்மையாருடைய சேலையைப் பிடித்து இழுத்ததாகவும், துகில் உரிந்ததாகவும் ஒரு பிரச்சாரத்தைச் செய்து வருகிறார்கள். ஆனால் என்னைப் பொறுத்தவரையில், இதை அவர்கள் வெளியில் சொல்வதால்,

அவர்கள் ஒரு அரசியல் நடத்துவதாகக் கூட நான் எடுத்துக் கொண்டாலும், எங்களுடைய கட்சியின் சார்பிலே நடந்த பேரணியின் இறுதியில் நடந்த பொதுக் கூட்டத்தில் நான் அத்தகைய இழி செயலைச் செய்யவில்லை என்று மறுத்திருக்கிறேன். ஆகவே ஒரு அரசியல் கட்சி வெளியிலே குற்றம் சாட்டுவது, அதற்கு மற்றொரு கட்சி பதில் சொல்வது என்பது, வெளியிலே முடிந்து போகிற விஷயங்கள். ஹேஷ்யங்கள், மற்றவை எல்லாம் வெளியிலே இருக்கலாம். ஆனால் சட்டமன்றத்தில், பொறுப்பு வாய்ந்த எதிர்க் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் ஒரு அமைச்சர் மீது வேண்டுமென்றே, திட்டமிட்டு, களங்கம் சுமத்துகிறார்கள். நான் பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் வாயிலாக இந்த அவைக்குத் தெரிவிக்கிறேன். அத்தகைய செயலில் நான் ஈடுபடவில்லை. மேலும் அவர்கள் அவ்வாறு சொல்வது நல்லதும் அல்ல. இது மரபை மீறியதாகும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். அவ்வளவுதான். (குறுக்கீடுகள்).

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் நம்பினோம். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த அவையிலே மாத்திரம் அல்ல, தமிழ்நாட்டில் உள்ள அத்தனை மக்களுடைய பாதுகாவலனாக இங்கே பொறுப்பேற்றிருக்கிறார்கள். பாதுகாவலனாக பொறுப்பேற்றது மட்டுமல்ல, பாதிக்கப்பட்ட அத்தனை பேர்களுக்கும் நியாயத்தை வழங்கும் ஒரு பொறுப்பையும் ஏற்றிருக்கிறார்கள். அப்படிப்பட்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள், நேற்றையதினம் சொல்லிய பதிலைப் பார்த்து, என்னால் உட்கார முடியாத அளவிற்கு நான் அதிர்ச்சி அடைந்தேன். காரணம் இங்கே நடந்த சம்பவத்தைப் பற்றி நான் சொல்லத் தயாராக இல்லை. என்ன நடந்தது என்பதை நாம் அனைவரும் இந்தக் கண்களைக் கொண்டு பார்த்துக் கொண்டே உட்கார்ந்து இருந்தோம். பத்திரிகை நிருபர்களும் பார்த்துக் கொண்டு இருந்தார்கள். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அருள் கூர்ந்து இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் குறித்துச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்). அவையில் நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றி இப்போது பேச்சே இல்லை. எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், அமைச்சரைப் பற்றி நேரிடையாகப் பெயரைச் சுட்டிச் சொன்னதால், அவர்கள் திரும்ப பதில் அளித்தார்களே தவிர, இதில் ஒழுங்குப் பிரச்சினைகளுக்கோ, வேறு பிரச்சினைகளுக்கோ இடம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒத்திவைப்புத் தீர்மானத்தில் தொடர்ந்து பேசுவதாக இருந்தால் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசலாம். (குறுக்கீடுகள்). நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு). அதைப் பற்றி இன்றைக்கு நாம் பேச வேண்டாம். உட்காருங்கள். (குறுக்கீடுகள்).

1989 மார்ச் 29]

திரு. எஸ். திருநாவுக்கரசு: காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திருமதி பொன்னம்மாள் அவர்கள், சட்டமன்றத்திலே அவர்கள் பார்த்ததைச் சொன்னார்கள். ஆகவே............(குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாம் தற்போது சட்ட மன்றத்திலே நடந்ததைப் பற்றி விவாதிக்கவில்லை. ஒத்தி வைப்புத் தீர்மானத்திலே நீங்கள் பேசமுடியுமானால், பேச லாம். (கூச்சல்-குழப்பம்).

(முற்பகல் 10-30)

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** ** **

திரு. குமரி அனந்தன்: **(குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் உட்காருங் கள். நீங்கள் இதைப்பற்றித் தொடர்ந்து பேசினால், நான் அவையை ஒத்திவைத்து விடுகிறேன். (கூச்சல்-குழப்பம்)

** ** ** ** **

இது தொடர்பாக திரு. குமரி அனந்தன் அவர்களுக்கும் நான் சொல்ல விரும்புவது, இது தொடர்பான எந்தச் செய்தியையுமே நாம் இங்கே பேசக்கூடாது என்று சொல்லி, ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது மட்டும் பேச வேண்டு மென்று குறிப்பிட்டேன். ஆனால் நீங்கள் திருப்பித் திருப்பி இந்த அவையில் நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றி ஒவ்வொருவரும் பேசத் தொடங்கி நிகழ்ச்சியை சூடாக்குகிறீர்கள். இதைத் தணித்துக் கொள்வீர்கள் என்று நான் நம்புகிறேன். நீங்கள் சொல்ல வேண்டியதை ஒத்திவைப்புத் தீர் மானத்தின் மீது பேசினால், பிரச்சினையே கிடையாது. அதற்கு அப்பாற்பட்டு அவையில் நடந்த நிகழ்ச்சியைப் பற்றிப் பேசுவ தற்கு இந்நேரத்தில் நான் சந்தர்ப்பம் அளிக்கவில்லை என்பதை மட்டும் நினைவில் கொண்டு பேசவேண்டும்.

திரு. குமரி அனந்தன்: **(கூச்சல் குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது இந்தச் செய்திகளுக்கு இங்கே இடமே கிடையாது. அதனை நேரம் வரும் போது அனுமதிக்கிறேன். அப்போது நீங்கள் பேசலாம். திரு. எஸ். திருநாவுக்கரசு அவர்களைத் தவிர, வேறு யாருக்கும் பேச நான் அனுமதி வழங்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற் றப் பெற்றன.

[1989 மார்ச் 29

திரு. குமரி அனந்தன் : **(கூச்சல்— குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலமைச்சர் அவர்கள் பேசுகிறபோது அனைவரும் அமரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : **(கூச்சல்— குழப்பம்)

திரு. எஸ். திருநாவுக்கரசு: **(கூச்சல்— குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அருள்கூர்ந்து இந்தப் பேச்சே வேண்டியது இல்லை. அதுபற்றிப் பேசுவதற்கு இங்கே இடமே கிடையாது. ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது பேச முடியுமா முடியாதா என்பதைப் பற்றிச் சொல்லுங்கள். (கூச்சல்— குழப்பம்)

திரு. எஸ். திருநாவுக்கரசு : **(கூச்சல்— குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நடைபெற்ற நிகழ்ச்சிகளையே பேசுவீர்களேயானால் அதை அணை போட நான் எல்லாவற்றையும் நீக்க வேண்டிய அவசியம் ஏற்படும். நீங்கள் ஒத்திவைப்புத் தீர்மானத்தில் பேசப்போகிறீர்களா இல்லையா ? அவையில் அன்று நடந்த நிகழ்ச்சியைப் பற்றிப் பேசுவதற்கு இது இடம் இல்லை. அதற்குரிய நேரத்தை எப்போது என்று நான் பிறகு சொல்வேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது எல்லாம் ஒத்திவைப்புத் தீர்மானத்தில் வருகிறதா என்று கேட்கிறேன் (கூச்சல்— குழப்பம்).

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவை முன்னவர் அவர்கள் எழுந்து பேசும்போது அனைவரும் உட்கார வேண்டும்.

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : பேரவையினுடைய தலைவர் அவர்களே, இந்த அவையை மதித்து 30 ஆண்டுக் காலம் பழகிய நான் இன்றைக்கும் மதித்து, ஒன்றிரண்டு வார்த்தை யாராவது தவறாகச் சொன்னால் கூட, அதைப்பற்றி நான் கவலைப்படாமல் மனச்சாட்சியோடு விளக்கம் சொல்வதற்காகத்தான் நான் சொன்னேனே தவிர வேறு நோக்கம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.

1989 மார்ச் 29] [பேராசிரியர் க. அன்பழகன்]

மறுப்பு தெரிவிக்கப்பட்ட ஒரு கருத்தைப் பற்றி யாரும் திரும்பப் பேசுவது சரியல்ல. இந்த அவையிலே மறுப்பு தெரிவிக்கப்பட்டால் அதை வலியுறுத்துவதற்கு இடம் கிடையாது. எனவே அவைத் தலைவர் அவர்கள் அன்று நடைபெற்ற நிகழ்ச்சியைப் பற்றி இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தில் எடுத்து எடுத்துப் பேசுகிற அந்த முறையை அனுமதிக்கக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன் : **(கூச்சல்— குழப்பம்).

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, **(கூச்சல்— குழப்பம்). ஆனால் ஒன்று. நடைபெற்றது என்னும் பிரச்சினையிலே வாதிப்பது என்பதற்கு இது இடம் இல்லாதபோது. இது நேரம் இல்லாத போது, இது பொருத்தம் இல்லாத போது அவையுரிமை மீறிய காரியமாக இங்கு விவாதிப்பது என்றாகின்றபோது நான் அதற்குள்ளே சென்று அதிகம் விவாதிக்க விரும்பவில்லை. எனக்குப் பல விளக்கங்கள் சொல்லத் தெரியும். அதைச் சொல்ல நான் விரும்பாததற்குக் காரணம் அன்று நடைபெற்ற நிகழ்ச்சிகளுக்குள்ளே செல்ல வேண்டாம் என்ற காரணத்தினாலே தான். எனவே அப்படி நடைபெறவில்லை என்று மறுத்தால், மறுத்த கருத்து இந்த அவையிலே இடம் பெற்றிருக்கின்றபோது மேலும் அதையே கிளப்பிக் கொண்டிருப்பது பெருமை தருவதாகாது.

(முற்பகல் 10-40)

திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு செய்தி அல்ல, ஒரு பக்கம் மறுத்தால் இன்னொரு பக்கம் விட்டுவிட. நடைபெற்ற ஒரு சம்பவம். அவர்களுக்கு என்ன உரிமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது நீங்கள் ஒத்திவைப்புத் தீர்மானத்தில் பேசுகிறீர்களா, இல்லை இந்த அவையில் நடைபெற்ற நிகழ்ச்சிகளிலே பேசுகிறீர்களா? ஒத்திவைப்புத் தீர்மானத்திலே பேசுங்கள். அந்தச் செய்தியை மட்டும் பேசுங்கள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : **

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, விவாதிப்பது என்றால் எவ்வளவோ விவாதிக்கலாம். ஆனால் உண்மை என்னவென்று கேட்டால் அன்று நடைபெற்ற

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.

நிகழ்ச்சியை இங்கே பேசி, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மூலமாக தவறான கருத்துக்களைப் பதிவு செய்வது என்பது முறையல்ல. பத்திரிகைகளிலே வருவதெல்லாம் உண்மையும் அல்ல. கொடுத்த செய்தியெல்லாம் உண்மையும் அல்ல. யார் யார் சொன்ன செய்தி அது என்பதும் இன்னும் சொல்லப்போனால் யார் யார் சொல்ல என்னென்ன காரணம் என்றும் நான் சொல்வது முறையல்ல முன்னவராக இருக்கின்ற காரணத்தால் (குறுக்கீடுகள்).

தலைவர் அவர்களே, அப்படி ஏதாவது உறுப்பினர்கள் சான்று வைத்திருப்பார்களானால் சபாநாயகரிடத்திலே சொல்லி வாதித்து—ஏனென்றால் இது அவ்வளவு பெருமை தரக்கூடிய செய்தி அல்ல—அந்தச் சான்றுகளை சபாநாயகரிடத்திலே வேண்டுமானால், பிஸினஸ் அட்வைசரி கமிட்டியிலே கூட கலந்து கொண்டு அதைத் தெரிவிக்கலாமே தவிர இந்தச் சந்தர்ப்பத்தை அப்படித் தவறாகப் பயன்படுத்துவது இந்த அவைக்கு ஏற்றதல்ல,

திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, மேலேயிருந்த பத்திரிகை நிருபர்களே அதை எழுதியிருக்கிறார்கள். ஆக அதைச் சொல்வதற்கான உரிமை எங்களுக்கு இருக்கிறது. மறுக்கின்ற உரிமை உங்களுக்கு எப்படி இருக்கிறதோ.........

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, நான் மறுபடியும் சொல்கிறேன். பத்திரிகை நிருபர்களிலே வேறு மாதிரி எழுதியிருக்கிறவர்களும் இருக்கிறார்கள். ஆக அதுவல்ல பிரச்சினை. இந்தப் பிரச்சினை நடைபெறாத ஒன்றாக நிச்சயமாகக் கருதப்படுகின்ற ஒரு சூழ்நிலை இருக்கின்றபோது, நடைபெற்றதாகச் சொல்கின்ற சில பேர் இருப்பதால் இதை முடிவு எடுக்க வேண்டுமெனில் தனிப்பட்ட முறையில் வேண்டுமானால் சபாநாயகரிடத்தில் பேசலாமே தவிர அவையில் அந்தப் பிரச்சினையை எழுப்பி மேலும் நடைபெறாத—உள்ளபடியே அப்படி நடைபெறாத ஒன்றை, நடைபெறவில்லை என்று மறுக்கப்பட்ட ஒன்றை, நடைபெற்றதாக ஜோடிக்கப்பட்ட ஒன்று என்று கருதப்படும் நிலை ஏற்படுகிறது. நான் சொல்வதை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற அவசியம் இல்லை. இருவிதமான கருத்துக்கள் எப்போதும் இருக்கலாம். ஆனால் அப்படிக் கருதுவதற்கும் சொல்வதற்கும் எனக்கு நியாயம் இருக்கிறது. என் பக்கம் உள்ளது நியாயமா, உங்கள் பக்கம் உள்ளது நியாயமா என்பதை சபாநாயகரிடத்திலே தனித்துப் பேசி வேண்டுமானால் விளக்கம் பெறலாமே தவிர, அதை ஒரு பிரச்சினையாக ஆக்குகின்றபோது மறுப்புச் சொல்வதை உள்ளபடியே மறுபடியும் அனுமதிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டு அதற்கு மறுப்பு சொல்கின்ற நிலைமை ஏற்பட்டு அவையினுடைய முக்கியமான கடமை தவறிவிடுகிற நிலைமை ஏற்படுகிறது. எனவே குறிப்பிட்ட பொருள் பற்றி மட்டும் எதிர்க் கட்சித் துணைத் தலைவர் பேசி விவாதத்தை முடிக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

1989 மார்ச் 29]

திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, நான் நிச்சயமாக ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மேல்தான் பேசிக் கொண்டிருக்கிறேன். வெளியே இந்தப் பதட்ட நிலைகள் எல்லாம் இருப்பதற்கு காரணங்களை நான் சொன்னேன். அதை நீங்கள் மறுக்கிறீர்கள். அந்த உரிமை உங்களுக்கு உண்டு. ஆனால் சொல்லுகின்ற உரிமை எங்களுக்கு உண்டு. அன்றைக்கு நடந்த அந்தச் சம்பவம் மிகவும் துர்ப்பாக்கியவசமான சம்பவம். வெட்கக் கேடான சம்பவம். முதலமைச்சர் அவர்களே சுட்டிக்காட்டியதைப்போல் வெட்கித் தலை குனிய வேண்டிய சமாச்சாரங்கள் ஆகும் அவை. எனவே, இதையெல்லாம் முதலமைச்சர் அவர்கள் ஒத்துக்கொண்டார்கள். இதிலே தவறு செய்தவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற உணர்வு கூட இல்லாமல்.......

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்களும் ஒத்துக்கொண்டார்கள் என்று, தான் சொல்லுகின்ற கருத்துக்கெல்லாம் முதலமைச்சரை சாட்சியாக்குவது இந்த அவையிலே நாங்கள் ஒன்றும் அவ்வளவு புரியாதவர்களல்ல—முதலமைச்சர் ஒத்துக் கொண்டது சட்டமன்றத்திலே நடந்த அமளி, வன்முறைகள் பற்றிய கருத்து** ஒரு முதலமைச்சர் தலைவன் என்ற முறையில் தலைக்குனிவை பெருந்தன்மையோடு எடுத்துச் சொல்லி ஏற்றுக்கொண்டு சொன்னது பொறுப்பு இருக்கிறது என்பதை உணர்த்துவதற்கு அது அடையாளமே தவிர நடைபெறாத நிகழ்ச்சிகளையெல்லாம் சேர்த்து அதற்கும் அவர் ஏற்றுக்கொண்டதாக ஒரு கற்பனையான வாதத்தை இங்கே நிலைநிறுத்துவது நியாயம் அல்ல.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க. கூட எதிர்க்கட்சியாக இருக்கிறபோது, 10 எம். எல். ஏக்கள் இருந்திருக்கிறார்கள். 20 எம். எல். ஏக்கள் இருந்திருக்கிறார்கள். எவ்வளவோ சம்பவங்கள் எல்லாம் நடந்திருக்கின்றன. சூடான விவாதம் எல்லாம் நடந்திருக்கிறது. அப்போது நாங்கள் 140 பேர், 150 பேர் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இருந்தோம் * * * (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் ஒத்திவைப்புத் தீர்மானத்தில் பேசுவதில்லை என்று முடிவு எடுத்திருக்கிறீர்களா? (குறுக்கீடு) ஒத்திவைப்புத் தீர்மானத்தைத் தவிர மீதி எல்லாமே பேசுவது என்று முடிவு பண்ணிவிட்டுப் பேசினால், அடுத்து அவைத்தலைவர் என்ன செய்ய வேண்டுமோ, அதைச் செய்கிறேன் (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, கடந்த காலத்தில் மாண்புமிகு எம்.ஜி. ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது அவரே என்னை நீக்கிவைத்த அந்தக் கால கட்டம் தவிர, பெரும்பாலான கால கட்டங்களில் இங்கே இருந்து இருக்கிறேன். இந்த அவையிலே நடைபெற்ற அத்தனை நிகழ்ச்சிகளும், எனக்கு மிக நன்றாகத் தெரியும். இன்னும் சொல்லப் போனால், எனக்குத் தெரிந்த கால கட்ட நிகழ்ச்சிகள் மாண்புமிகு திரு. திருநாவுக்கரசு அவர்களுக்குத் தெரிவதற்கு வாய்ப்பு கிடையாது. எவ்வளவு கண்ணியமாக இந்த அவை நடைபெற்றது என்பதும் எனக்குத் தெரியும். கடைசி காலத்திலே எவ்வளவு கண்ணியக் குறைவான சூழ்நிலை இங்கே உருவாக்கப்பட்டது என்பதும் எனக்குத் தெரியும். எனவே, வாதம் செய்வது இவைகளைப் பற்றியதாக இருப்பது முறையல்ல. அவற்றை வாதிப்பதாக இருந்தால் அதற்கு வேறு நேரம் ஒதுக்க வேண்டும். இல்லையெனில் வேறு இடம் அமைத்துக்கொள்ள வேண்டும். இடத்தைப் பொறுத்தவரையில் ஏற்றுக்கொண்ட அந்தத் தீர்மான அடிப்படையில் விளக்கம் சொல்வதைத் தவிர வேறு எதையும் இந்த அவையினுடைய தலைவர் மரபைக் காப்பாற்றுவதற்காக அனுமதிக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன் (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள், அவர்களை ஆளுங்கட்சியாக இருந்தபோது, திராவிட முன்னேற்றக் கழகம் குறைந்த எண்ணிக்கையிலே உள்ள போது நடந்த சம்பவங்களைக் குறிப்பிட்டார்கள். நானும் 1967 லிருந்து இரு அவைகளிலேயும் இருந்திருக்கிறேன். * * * * (கூச்சல்-குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அருள்கூர்ந்து திரு. திருநாவுக்கரசு அவர்களை ஒத்திவைப்புத் தீர்மானத்திலே பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் திரு. வீராசாமி அவர்கள் சொன்னதை நான் வன்மையாக ஆட்சேபிக்கிறேன் * * * (கூச்சல்-குழப்பம்).

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி. * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து அமைச்சராக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சித் தரப்பினராக இருந்தாலும் சரி, ஒத்திவைப்புத் தீர்மானத்தைத் தவிர வேறு எந்தச் செய்திகளையும் தொடர்ந்து பேசினால், நான் அவையை ஒத்திவைப்பதைத் தவிர வேறு வாய்ப்பே இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன் (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

1989 மார்ச் 29]

திரு. குமரி அனந்தன் : பணிவான ஒரு வேண்டுகோள், * * * (கூச்சல்-குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரும்பத் திரும்ப நீங்கள் பிரச்சினை எழுப்பிக் கொண்டிருந்தால் பயனே கிடையாது (குறுக்கீடு).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : * * *

திரு. குமரி அனந்தன் : * * * (கூச்சல்—குழப்பம்)

(முற்பகல் 10-50)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. குமரி அனந்தன் அவர்கள் இது தொடர்பாகத் தொடர்ந்து பேசக் கூடாது. திரு. திருநாவுக்கரசு அவர்களைப் பேச அனுமதிக்கிறேன் (கூச்சல்—குழப்பம்).

திரு. குமரி அனந்தன் : * * *

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசும்போது, எல்லோரும் உட்காருங்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துரைமுருகன் அவர்களே மறுத்த பிறகு, ஒரு சட்டமன்றத்திலோ அல்லது வேறு ஒரு மன்றத்திலோ அல்லது ஒரு நிகழ்ச்சியிலோ ஒருவர் மீது குற்றம் சாட்டப்பட்டு அவர் அதை மறுத்து விட்டால், இல்லை என்று சொல்லிவிட்டால், அதோடு அதை விட்டு விடுவது தான் மரபு. அதையே பெரிதுபடுத்தி—நான் காங்கிரஸ் கட்சி நண்பர்களைச் சொல்லவில்லை—அதை ஒரு அரசியல் ஆதாயம் ஆக்கி அனுதாபத்தைப் பெறலாம் என்று எண்ணுவது தவறு. நான் திரு. மூப்பனார் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன், உங்களைக் கேட்டுக் கொள்கிறேன், எல்லோரையும் கேட்டுக் கொள்கிறேன், ஒரு பெண் மானபங்கப் படுத்தப்பட்டது பற்றிச் சொல்கிறீர்கள். அப்படி ஒன்று நடந்து இருந்தால் நான் இப்போதும் சொல்கிறேன், வெட்கப்படுகிறேன். அவர்கள் எனக்கு சகோதரி போன்றவர்கள் தான். என்னுடைய

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.

சகோதரிக்கு இப்படி நடந்து இருந்தால் என்ன உணர்வு எனக்கு ஏற்படுமோ அதே உணர்வு தான், அப்படி நடந்து இருந்தால். அன்று நடைபெற்ற அசம்பாவிதத்தில் யார் என்று அடையாளம் காண முடியாத ஒரு குழப்பத்தில் வேண்டும் என்றே ஒரு அமைச்சர் மீது, துரைமுருகன் மீது குற்றம் சாட்டப்பட்டதால்தான் அதை மறுக்க வேண்டி வந்தது. கடந்த காலத்தில் என்னுடைய மனைவி, மக்கள் அனைவரும் விமான நிலையத்திலே ரவிக்கை கிழிக்கப்பட்டு, சேலை கிழிக்கப்பட்டு போலீசாரால் நடத்தப்பட்டபோது யாராவது இப்படித் துடித்தீர்களா? என்ன காரணம்? (குறுக்கீடு) இல்லை, யாரும் துடிக்கவில்லை, யாரும் ஒரு மறுப்பு அறிக்கை விடவில்லை. அதற்காக இதை நான் சரி என்று சொல்லவில்லை. காரணம் நான் ஒரு சாதாரண மானவன், கேவலமானவன், இன்னும் சொல்லப் போனால் சூத்திரன் நான். அவ்வளவுதான் (கூச்சல்—குழப்பம்).

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்று திருமதி யசோதா, எம்.எல்.ஏ அவர்கள் தாக்கப்பட்டபோது யாரும் இப்படி கவலைப்படவில்லை. ஏன் என்றால் அவர் ஒரு தாழ்த்தப்பட்டவர் (கூச்சல்—குழப்பம்).

திரு. குமரி அனந்தன்: ஆகவே சொல்கிறேன், வேதனை யோடு சொல்கிறேன், இதனை அவர்கள் பின்வாங்காத காரணத்தாலே உண்மைக்கும்......

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: * * எனவே அந்த வார்த்தை அவைக் குறிப்பிலே இடம் பெற வேண்டாம் என்று நான் சட்டமன்றப் பேரவைத் தலைவரைக் கேட்டுக் கொள்கிறேன் (கூச்சல்—குழப்பம்)

திரு. குமரி அனந்தன்: தயவுசெய்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.(கூச்சல்—குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து அவை முன்னவர் அவர்கள் எழுந்து நின்றால் அனைவரும் உட்காருங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப் பெற்றன.

1989 மார்ச் 29]

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு குமரி அனந்தன் அவர்கள், சொல்லப்பட்ட வார்த்தையை மட்டும் வைத்துக் கொண்டு அவர்கள் வருத்தப்படுவதாகப் பேசு கிறார்கள். சொல்லப்பட்ட வார்த்தை, அவர் ஒரு வார்த்தையைச் சொன்ன காரணத்தால் வந்த வார்த்தை. நான் துரைமுருகன் பற்றி இங்கே பேசியபோது ஒரு மறுப்பைத் தெரிவித்தேன். அமைச்சரும் அதற்கு முன்னாலேயே மறுப்பைத் தெரிவித்து விட்டார்கள். அப்படி நீங்கள் சொல்லுவது தான் உண்மை என்றால் அதனை அவைத் தலைவருடைய அறையில் அதனுடைய உண்மையைப் பற்றிய வாதம் செய்யலாமே தவிர, இந்த அவையில் நாங்கள் சொல்லுவது தான் உண்மை என்று சொல்லுவதும் தொடர்ந்து வாதாடுவதும் அந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் நியாயம் அல்ல. நாங்கள் மறுப்பு சொன்னோம் என்றால் அதை நீங்கள் ஏற்றுக்கொள்ளா விட்டால்கூட மறுபடியும் அந்தக் குற்றம் சாட்டப்பட்ட காரணத்தால் மறுப்பு சொல்லப்பட்டது. அது உங்களால் ஏற்றுக்கொள்ளப்படுகிறதா என்பது வேறு. * * (கூச்சல்— குழப்பம்).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி; * *

திரு. எஸ். திருநாவுக்கரசு: * * (கூச்சல்— குழப்பம்)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் என்ன இந்த அவையினுடைய மரபை மீறாமல் இருக்கிறார்களா? இந்த அவையினுடைய மரபை காலையிலிருந்து மீறிக் கொண்டு இருக்கிறார்கள். ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தது ஒன்று; பேசுவது ஒன்று. அதனால் தான் இந்தப் பிரச்சினைகள். நேற்று அவர்கள் அலுவல் ஆய்வுக் குழுவை மதிக்கவில்லை, வரவில்லை. வெளிநடப்புச் செய்தார்கள், அது அவர்களுடைய ஜனநாயக உரிமை.

திரு. பி. எச். பாண்டியன்: சூத்திரன் (கூச்சல்— குழப்பம்).

(இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியினர் வெளியேறினர்) (கூச்சல்—குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனைவரும் உட்காருங்கள் (கூச்சல்—குழப்பம்) எல்லோரும் உட்காருங்கள்.

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.

திரு. பி. எச். பாண்டியன் : சூத்திரன், (கூச்சல்—குழப்பம்) சூத்திரன் ஒரு முதலமைச்சராக இருப்பது பிடிக்கவில்லை (கூச்சல்—குழப்பம்)

திரு. எஸ். திருநாவுக்கரசு : * *

(கூச்சல்—குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருப்பித் திருப்பி நீங்கள் இதையே பேசிக் கொண்டு இருக்கக் கூடாது கூச்சல்—குழப்பம்).

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் மேற்கொள்ளப் பட்ட ஒத்திவைப்புத் (கூச்சல்—குழப்பம்) தீர்மானம் சம்பந்தமான கருத்துக்களைத் தவிர மற்ற கருத்துக்கள் அவைக் குறிப்பில் இடம் பெறக்கூடாது என்று தங்களை நான் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலில் மதிப்புமிகு உறுப்பினர்களுக்கு நான் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். (கூச்சல்—குழப்பம்) உட்காருங்கள், நான்தான் நிற்கிறேனே எதற்கும் ஒரு வரம்பு உண்டு. எனக்கும் சினம் உண்டு. உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்), உட்காரலாம் நீங்கள். உறுப்பினர்கள் ஒன்றைக் கவனிக்க வேண்டும். (கூச்சல்—குழப்பம்). பொதுவாகவே ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுக்கிறபோது, உரிமை மீறல் பிரச்சினை கொடுக்கிறபோது அது பற்றி ஆய்ந்து முடிவெடுத்து ஒன்றை நான் அனுமதிக்கிறேன். 25-ஆம் நாள் அப்படி ஒரு உரிமை மீறல் பிரச்சினை கொடுத்த போது நான் தெளிவாகவே சொன்னேன். 27, திங்கட்கிழமை எடுத்துக் கொள்வோம் என்று தெளிவாகவே நான் சொல்லி உங்களுக்கு வாய்ப்பு அளித்தேன். ஆனால் அந்த வாய்ப்பை நீங்கள் மறுத்து வெளி நடப்புச் செய்தீர்கள். 27-ஆம் தேதி எடுத்துக் கொள்வதாக நான் உறுதி அளித்த பிறகு மதிப்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் இதை நாளைக்கு எடுத்துக் கொள்ளலாம் என்றார். கடைசியில் இப்போது என்ன ஆகிறது? பேரவைத் தலைவர் ஒரு தீர்ப்புச் சொல்லி இன்றைக்கு எடுத்துக் கொள்ளலாம் என்று சொன்னால் அவர் சொன்ன நாளில்கூட எடுத்துக் கொள்ள முடியவில்லை. உறுப்பினர்களே அதை முடிவு செய்கின்ற அளவுக்கு நீங்கள் வளர்ந்து விட்டீர்கள். அதற்குக் காரணம் ஒரு வேளை பேரவைத் தலைவர் ரொம்ப இளக்காரமாக இருக்கிறார் என்ற நினைப்பு

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.

1989 மார்ச் 29] [பேரவைத் தலைவர்]

உங்களுக்கு இருக்கிறதோ என்று எனக்குத் தெரியவில்லை. எனவே திரு. திருநாவுக்கரசு அவர்கள் ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது பேசப்பட்ட செய்திகளைத் தவிர வேறு அனைத்துச் செய்திகளும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒத்திவைப்புத் தீர்மானத்தின்மீது மட்டும் பேசுவதாக இருந்தால் தொடர்ந்து பேசலாம்.

(முற்பகல் 11–00)

திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவரவர்களே, என்னுடைய ஒத்திவைப்புத் தீர்மானமே, வெளியே பதட்ட நிலைமை ஏற்பட்டிருக்கிறது; கைது இருக்கிறது; வன்முறை நடந்திருக்கிறது; வீடுகள், கடைகள் நொறுக்கப்பட்டிருக்கின்றன. இவைகளுக்கு மூல காரணமாக இருக்கிற அந்தப் பிரச்சினைகள் குறித்துத்தான் நான் சொன்னேன். அவை அல்லாமல் சட்ட மன்றத்திற்குள்ளே நடந்தவை பற்றி நான் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவரவில்லை. (மணியடிக்கப்பெற்றது). ஒத்திவைப்புத் தீர்மானத்தைப் பற்றிப் பேசுவதற்கு தாங்கள் அனுமதிக்க வேண்டும். (கூச்சல்—குழப்பம்) ஒத்திவைப்புத் தீர்மானத்தைப் பற்றி மட்டும்தான் நான் பேசுகிறேன்.

** ** ** ** **

(கூச்சல்—குழப்பம்) ஒத்திவைப்புத் தீர்மானத்தைப்பற்றி மட்டுமே பேசுகிறேன். தொடர்ந்து பேசுவதற்கு தாங்கள் அனுமதிக்வில்லை என்றால் நாங்கள் வெளி நடப்புச் செய்யவேண்டிவரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது. ஒத்திவைப்புத் தீர்மானத்தில் சுருக்கமாகப் பேசுவதுதான் முறை; ஒரு மணி நேரம் பேசுவது முறையல்ல. (குறுக்கீடுகள்) பேசுகின்ற முறையில் நீங்கள் பேசுங்கள்: அனுமதிக்கிறேன். ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அப்பாற்பட்டவற்றைப் பேசுவதற்கு வாய்ப்புக் கிடையாது (குறுக்கீடுகள்). நீங்களே வன்முறையை உருவாக்கிக் கொண்டிருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உங்கள் வார்த்தைகளினாலே வன்முறையை உருவாக்குகிறீர்கள் என்பதை நாடு அறியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.

திரு. எஸ் திருநாவுக்கரசு : நீங்கள்தான் வன்முறையை உருவாக்குகிறீர்கள். (கூச்சல், குழப்பம்)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள்தான் வன்முறையை உருவாக்குகிறீர்கள் என்று சொல்கிறார்கள். நீங்கள் அவர்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. திருநாவுக்கரசு அவர்கள் கூறிய வார்த்தைகளைத் திரும்பப் பெற வேண்டும். (கூச்சல்— குழப்பம்) எனக்கு அந்த அதிகாரம் இருக்கிறது. (குறுக்கீடு) உறுப்பினர்கள் சொல்வதைக் கேட்டு, அதற்குப் பதில் சொல்ல, நடவடிக்கை எடுக்க எனக்கு அதிகாரம் இருக்கிறது. ஆனால் ஓர் உறுப்பினர் அவைத் தலைவர்மீது களங்கம் கற்பிக்கின்ற முறையில், உள்நோக்கம் கற்பிக்கின்ற முறையில் சொல்வது தவறு ; பேரவைத் தலைவரைப் பார்த்து திருப்பிச் சொல்வதற்கு எந்த உறுப்பினருக்கும் அதிகாரம் கிடையாது (கூச்சல், குழப்பம்). நீங்கள் சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டிருந்தால், உங்களை நான் அனுமதிக்கமாட்டேன். மாறாக உங்களை வெளியேற்ற வேண்டியிருக்கும்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : நீங்கள் சொன்னதைத்தான் நான் திருப்பிச் சொன்னேன். நீங்கள் வன்முறையைத் தூண்டுகிறீர்கள் என்று சொன்னால், ‘‘ தூண்டுவது நீங்கள்தான் ’’ என்று நான் சொல்லக்கூடாதா ? (கூச்சல்—குழப்பம்). அதற்கு உரிமை கிடையாதா ? அதைச் சொன்னால் என்மீது ஒழுங்கு நடவடிக்கையா ? (கூச்சல்—குழப்பம்).

திரு. பி. எச். பாண்டியன் : சபை இங்கே நடந்து கொண்டிருக்கிறது. ** (கூச்சல்—குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை எல்லாம் நான் அனுமதிக்கவில்லை. எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் நிற்பது தெரியவில்லையா ? தயவுசெய்து அனைவரும் உட்காருங்கள். நான் யாரையும் அனுமதிக்கவில்லை. (கூச்சல்—குழப்பம்) எல்லோரும் உட்காருங்கள். (கூச்சல்—குழப்பம்).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இப்போது பரிமாறிக் கொள்ளப்பட்ட வார்த்தைகள் அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

1989 மார்ச் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இங்கே அவையின் முன்னைய நிகழ்ச்சி பற்றிக் குறிப்பிட்ட அனைத்து வாக்கியங்களும் கருத்துக்களும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவரோ அல்லது தலைவரோ அல்லது எந்த சட்டமன்ற உறுப்பினரோ ஒரு ஒத்திவைப்புப் பிரேரணையைக் கொடுக்கும்போது எதற்காக ஒத்திவைக்க வேண்டுமென்ற காரணங்களை மட்டும் கூறி, அது சம்பந்தமாக ஒத்திவைத்ததற்குப் பின்னால், விவாதத்தில் இந்தப் பிரச்சினைகள் வரலாம். சபையை ஒத்திவைத்துவிட்டு அதற்கான பொருள்கள் வருவதற்கு முன்னதாகவே அந்த விஷயங்களைப் பூராவும் இங்கே பேசுவது என்பது நம்முடைய சட்டமன்ற விதிகளுக்கே முரணானது. அதைத் தயவுசெய்து கறாராக, கண்டிப்பாகத் தாங்கள் அமல்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதனால் வரக்கூடிய விளைவுகள்தான் இவையெல்லாம்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதை நான் ஏற்றுக்கொள்கிறேன். இங்கே ஒத்திவைப்பதற்கு வாய்ப்புத் தந்தால் நாங்கள் விவாதிக்கத் தயாராக இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் ஒன்று கேட்க விரும்புகிறேன். ஏற்கெனவே இந்தத் தலைவர் இருக்கையில் எல்லாம் நீங்கள் இருந்திருக்கிறீர்கள். முதலிலேயே உறுதிமொழி தரவேண்டுமா? ஒத்திவைப்பதாக நான் சொன்னதற்குப் பிறகு தான் நீங்கள் பேசுவீர்களா? நீங்கள் பேசுவதற்கு முன்னதாகவே, 'ஒத்திவைப்பதாக உறுதி தந்தால் தான் பேசுவோம்' என்று சொல்வது என்ன மரபு? எனக்கு நீங்கள் dictate செய்யவேண்டிய அவசியம் இல்லை. ஒத்திவைக்க அனுமதி தந்தால்தான் பேசுவோம் என்றால் என்ன அர்த்தம்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, கடந்த கால ஆட்சியில் அவர்களும் அமைச்சராக இருந்திருக்கிறார்கள். எப்போதாவது எதிர்க்கட்சியினர் கொண்டு வருகிற ஒத்திவைப்புத் தீர்மானத்தின்படி அவை ஒத்திவைக்கப்பட்டு, அந்தத் தீர்மானத்தின் மீது நீண்ட நேரம் பேசப்பட்டிருக்கிறதா என்பதை அவர்கள்தான் விளக்க வேண்டும்.

திரு எஸ். திருநாவுக்கரசு : 1965 ஆம் ஆண்டில் இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்குப் பிறகு சட்டமன்ற மேலவையில் ஒத்திவைப்புத் தீர்மானம் ஏற்கப்பட்டு சட்டமன்ற விதிகளுக்கிணங்க விவாதிக்கப்பட்டு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒத்திவைப்புத் தீர்மானம் ஏற்கப்பட்டு அதற்குப் பிறகு அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்துவிட்டுப் பேசுவது பற்றி இரண்டாவது கருத்து இல்லை. ஆனால் ஒத்திவைப்புத் தீர்மானத்தை ஏற்க வேண்டும் என்று வலியுறுத்துகிறபோதே நீண்டதொரு பேருரை ஆற்றியதாக ஏதாவது முன்னுதாரணம் இருக்கிறதா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அனுமதி கோருவதற்கே அரை மணி நேரமா?

திரு. எஸ். திருநாவுக்கரசு: பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற மேலவையில் இதுபோன்று அனுமதிக்கப்பட்டிருக்கிறது. சட்டமன்றத்திலே பெரும்பாலும் இப்படித் தீர்மானம் தந்து அதுபற்றி விவாதிக்கப்பட்டிருக்கிறது. இதெல்லாம் நடந்திருக்கிறது. எனவே நாங்கள் புதிதாக ஒன்றும் சொல்லவில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, விவாதங்கள் நடைபெற்றிருக்கின்றன. ஒரு பிரச்சினை குறித்து விவாதிப்பதற்காக அனைவரும் சேர்ந்து அலுவல் ஆய்வுக் குழுவிலே முடிவு செய்து விவாதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஒத்திவைக்கவேண்டுமென்று கோருவதற்கே—அதாவது ஒரு நான்கு வரி அல்லது ஐந்து வரிதான் பேசுவார்கள்; அவர்கள் பேசியபிறகு அதைப்பற்றி முதலமைச்சரோ அல்லது அதற்குரிய அமைச்சர்களோ பதில் அளிப்பார்கள். பிறகு ஒத்திவைப்பதா அல்லவா என்பது பற்றி சபாநாயகர் தீர்ப்பளிப்பார். இதுதான் மரபாக இருந்திருக்கிறது. ஏறத்தாழ ஒரு மணி நேரத்திற்கும் மேலாக ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது—இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் தரப்பட்டிருக்கிறதே, அதிலே இல்லாத பிரச்சினைகளை எல்லாம் பேசுவதும், அதன் காரணமாக அமளி மூளுவதும் சரிதானா என்பதை எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் விளக்கவேண்டும். (குறுக்கீடுகள்).

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சுருக்கமாக முடித்திருப்பேன். (கூச்சல்—குழப்பம்).

திரு. எம். அப்துல் லத்தீப்: தலைவர் அவர்களே, ஒரு வேண்டுகோள். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கூட ஒத்துழைப்பார்கள் என்று நான் நம்புகிறேன். எனக்கு இரண்டு தரப்பிலேயும் உற்ற நண்பர்கள் இருக்கிறார்கள். மக்கள் நம்முடைய நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்துக் கொண்டு இருக்கிறார்கள். இந்தச் சட்டசபையை நடத்த நாம் மக்களுடைய பணத்தைச் செலவழித்துக்கொண்டிருக்கிறோம். எனவே தயவுசெய்து மக்களுக்காக அதிக நேரத்தைச் செலவழித்தால் (கூச்சல்—குழப்பம்).

1989 மார்ச் 29]

திரு. எஸ். திருநாவுக்கரசு : நான் சொன்னதை மீண்டும் வலியுறுத்துகிறேன்.

** ** **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மீண்டும், மீண்டும் இதையே சொல்லிக் கொண்டிருந்தால் சரியல்ல.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : ** ** **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. திருநாவுக்கரசு அவர்கள் இது தொடர்பாகவே மீண்டும், மீண்டும் பேசுவது..(குறுக்கீடுகள்) அவர்கள் இவ்வாறு பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அனைத்தும் அவைக்குறிப்பி லிருந்து நீக்கப்படுகிறது. (கூச்சல்— குழப்பம்)

மாண்புமிகு பேராசியர் க. அன்பழகன் : **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவை முன்னவர் அவர்கள் பேசுகிறபோது மற்றவர்கள் உட்கார முடியுமா, முடியாதா? (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : ** ** **

(முற்பகல் 11-10)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பேசும்போது அவரை மதித்து உட்கார முடியுமா, முடியாதா?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : அப்படி ஒரு தவறான கருத்தை, ஒரு அனுதாபத்தை ஏற்படுத்துவதற் காக வேண்டுமென்றே நாட்டிலே பரப்புவது மிகப் பெரிய குற்றம் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : ** **

அதற்கு நான் கண்டனம் தெரிவித்துக் கொள்கிறேன். அதன் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வற்புறுத்தி, மேலும் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது விவாதம் செய்ய அனுமதிக்காததால் வெளி நடப்புச் செய்கிறோம்.

(அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளி நடப்புச் செய்தனர்).

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.

திரு. பி. எச். பாண்டியன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒன்று சொல்கிறேன். வேறு ஒன்றும் இல்லை. பிரச்சினை அல்ல. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நடைமுறைகளின் உள்நோக்கம் பற்றி சொல்கிறேன். நான் சபாநாயகராக கொஞ்ச நாட்கள் இருந்ததனாலே சொல்கிறேன். அதாவது—to say that you are not able to transact legislative business அது தான் dragging on என்று சொல்கிறேன். ஏற்கெனவே, சொல்லியிருக்கிறேன். Constitutional functioning இருக்கமுடியவில்லை என்று ஒரு அமைச்சர் பேசியிருக்கிறார். Dragging on என்றாலே it is with an ulterior motive to say that you are not able to transact businessful It is will. அதனாலே இந்தமாதிரி ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுக்கவே வேண்டாம். ஏனென்றால் ஒரு தனி நபர் வெளியிலே பாதிக்கப்பட்டாலோ, உள்ளே பாதிக்கப்பட்டாலோ, உறுப்பினராக இருக்கின்ற காரணத்தினால் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதித்தால், தமிழ்நாடு முழுவதும் காவல் துறையினரால் செயல்பட இயலாது. நாள்தோறும் போலீசார் வழக்கு போடுகின்றார்கள். குறுக்கு விசாரணை செய்யும்போது சாட்சியிடம் இப்படித்தான் சொல்வோம். போலீசார் சொல்லிக்கொடுத்துப் பொய் சாட்சி சொல்கிறார் என்று சொல்வோம். அதுமாதிரி Investigating Officer box-ல் நிற்கும்போது ''நீங்கள் வேண்டுமென்றே இந்தக் கேசைப் போட்டிருக்கிறீர்கள்'' என்றுதான் சொல்வோம். அப்படி ஒரு suggestion போடுகிறோம். அவ்வளவு கேஸ்களையும் நீங்கள் எடுத்து முடிக்க முடியுமா? ஒரு அம்மையாருக்கு என்று நேற்று வந்த இந்த வழக்கை வாபஸ் வாங்குவதாகச் சொன்னதே மற்றவர்களுக்கு இது பாதிப்பை ஏற்படுத்தும். அப்படி எல்லா வழக்குகளையும் நீங்கள் எடுக்க வேண்டும்.

நான் சேரன்மாதேவி போலீஸ் ஸ்டேஷனிலிருந்து எஃப்.ஐ.ஆர்.-ஐக் கூட கொண்டுவரப் போகிறேன். கல்லிடைக்குறிச்சி போலீஸ்ஸ்டேஷனிலிருந்துகூட எஃப்.ஐ.ஆர். கொண்டுவரப் போகிறேன். முதலமைச்சர் பார்த்துக்கொள்ளலாம், எது எது எல்லாம் ''ஃபால்ஸ் கேஸ்'' என்று. இதையெல்லாம் இங்கே என்னுடைய தியரியாக சொல்கிறேன். சட்டமன்றம் நீதிமன்றமாகச் செயல்படுகிறதா என்பதைத்தான் நாம் சிந்தித்துக்கொண்டிருக்கிறோம். உறுப்பினர்களை கொஞ்சம் கட்டுப்பாட்டோடு இருக்கும்படி சொல்ல வேண்டும். ஏனென்றால் நான் தனிமையாக இருக்கிறேன். என்னைப் பொறுத்த வரையிலே சொல்வேன். நான் வெளியிலே போவேன். எங்கள் ஊரிலே என் வீடு தனி வீடு. 20 பேர் முட்ட வந்தாலும் சரி. உலகத்திலே நான் யாருக்கும் பயப்படுவது இல்லை. எம்.ஜி.ஆர். ஒருத்தருக்குத்தான் பயப்படுவேன். அதனாலே நான் இங்கே தான் நிற்பேன். யார் இங்கு வந்தாலும் சரி. Advance, anticipatory order வாங்கிக் கொள்வேன். **

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

1989 மார்ச் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த வாக்கியம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அந்தக் கடைசி வாக்கியம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தக் கடைசி வாக்கியம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. எம். அப்துல் லத்தீப் : பேரவைத் தலைவர் அவர்களே, ...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல்வர் அவர்கள் எழுந்த பிறகு பேசலாமா ? அது என்ன மரபு ?

திரு. எம். அப்துல் லத்தீப் : மன்னிக்க வேண்டும். பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பெரிய சதி நடந்து கொண்டிருப்பதாக நாங்கள் எல்லாம் ஐயுறுகிறோம். இந்த அவையில் தங்களை யார் பாதுகாத்துக்கொள்ள முடியாதோ அந்த அதிகாரிகளை எல்லாம் நேரடியாகக் குறிப்பிட்டு பேசுகிறார்கள். போலீஸ்காரர்கள் நடவடிக்கை எடுக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். முதல்வர் அவர்களிடம் வாக்குறுதிகளை வாங்கிக் கொண்டு நடைமுறைகளில் தொய்வு ஏற்படுத்தக்கூடிய அளவுக்கு சூழ்நிலைகளை உருவாக்கியிருக்கின்றார்கள். போலீஸ்காரர்களுடைய ஒரு தைரியத்திற்கு, Morale க்கு குறை ஏற்படுகின்ற வகையில் செய்கின்றார்கள். அவர்கள் கடமைகளைச் செய்யாத அளவுக்கு தடுத்து மாநிலத்திலே ஒரு பெரிய அராஜகத்தை வளர்த்துக் கொண்டிருக்கின்றார்கள். அரசியல் சட்டப்படி அரசு நடவடிக்கைகள் நடைபெறவில்லை என்ற குற்றச்சாட்டைச் சொல்லி, அரசியல் நோக்கோடு ஒரு பெரிய சதி நடந்து கொண்டிருக்கிறது என்பதை நான் இந்தச் சபையிலே சொல்கிறேன். எங்களைப் போன்ற உறுப்பினர்களுடைய உரிமைகளைப் பற்றியெல்லாம் பல தடவை எழுந்து பேசுகிறார்கள். மற்றவர்களுடைய பிரச்சினையைத் தீர்ப்பதற்குத்தான் நாம் இங்கே பேச வேண்டுமே தவிர, அரசியல் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அதுவும் குறிப்பிட்ட அரசியல் கட்சி, இரண்டு அரசியல் கட்சிகள் ஏதோ அரசியல் நோக்கத்தோடு ஒன்றுபட்டிருக்கிறார்கள். அவர்களுடைய பிரச்சினைகளையும் தீர்ப்பதற்காக இங்கு பேசிக் கொண்டே இருக்கின்றார்கள். அதை இந்த அவையும் அனுமதித்துக் கொண்டே இருக்கின்றது. முதலமைச்சர் அவர்களிடத்திலே திரும்பத் திரும்ப அவர்கள் வாக்குறுதிகளைப் பெற்றுக் கொண்டு இருக்கின்றார்கள். போலீஸ்காரர்கள் அப்படிப்பட்ட

[திரு. எம். அப்துல் லத்தீப்] [1989 மார்ச் 29

நடவடிக்கை எடுக்கமாட்டார்கள் என்ற வாக்குறுதியைப் பெற்றுக்கொண்டே இருக்கின்றார்கள். போலீஸ்காரர்கள் செயல்பட முடியாமல் அவர்கள் முடமாகக் கூடிய ஒரு முயற்சியிலே ஈடுபட்டு இருக்கின்றார்கள். இதன் பின்னாலே ஒரு பெரிய சதி நடந்து கொண்டிருக்கிறது என்பதை இந்த அவையிலே சுட்டிக் காட்டுகிறேன். தயவு செய்து இந்த நடைமுறைகளையெல்லாம் கட்டுப்படுத்த வேண்டும். எங்களைப் போன்றவர்களுக்கு வாய்ப்பு அளிக்காமல் இருந்தால் நாங்கள் எப்படி எங்கள் கருத்துக்களைக் கூற முடியும்? மேலும் நாங்கள் எல்லாம் சீனியர் மெம்பர்கள். தலைவர் அவர்கள் மன்னிக்க வேண்டும். நேற்று வந்தவர்களுக்கு எல்லாம் பேச வாய்ப்பு அளிக்கிறீர்கள். நாங்கள் பேச தாங்கள் அனுமதிக்கவில்லை. தாங்கள் எங்களுக்கும் சம வாய்ப்பு அளிக்க வேண்டும். அவர்கள் இன்றைக்கு எதையும் செய்ய முடியும் என்று நினைக்கிறார்கள். சபாநாயகர் தீர்ப்புக்கு எதிராக நடந்து, அவையில் அமளியை ஏற்படுத்தி அதன் மூலம் தமிழ்நாட்டில் அரசியல் அமைப்பு முறைப்படி நடக்கவில்லை என்ற சூழ்நிலையை உருவாக்க சதி நடந்துகொண்டிருக்கிறது. தாங்கள் தயவு செய்து எல்லோருக்கும் சமமாகப் பேச வாய்ப்பு அளிக்க வேண்டும். அதனால் தான் என் கருத்துக்களைச் சொல்ல, இங்கே மாண்புமிகு முதல்வர் அவர்கள் எழுந்த நிலையிலும், வற்புறுத்தி நான் பேச வேண்டுமென்று சொன்னேன். அதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொறுத்துக்கொள்ள வேண்டுமென்று தங்கள் மூலம் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கும் இந்த அவையில் மோசமான நிலைமைகள் உருவாக்கப்படுவதற்கு இதற்கு மேல் எங்கேயும் சாட்சியம் தேவையில்லை. எந்த ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தையும் விதிகளுக்கு உட்பட்டு, பேச வேண்டுமென்று மிகுந்த பொறுமையோடு, ஒவ்வொரு தரமாக, 10, 11 தரத்திற்கு மேல் தாங்கள் சொல்லியிருக்கிறீர்கள். நாங்களும் பார்த்துக்கொண்டு, எண்ணிக்கொண்டுதான் இருந்தோம். எந்த ஒரு பொறுப்பு வாய்ந்த ஜனநாயகப் பிரதிநிதியாக இருக்கிற உறுப்பினரும், நான் உட்பட: இந்த அவையில், இப்படிப்பட்ட முறைகள் நடைபெற்றால், எந்த ஒரு நடவடிக்கையையும் நடத்த முடியாத ஒரு தடைதான் ஏற்படும் — something like a war of attrition என்கிற முறையில், வார்த்தைகளைக் கொண்டு யுத்தம் நடத்தி, எந்த அடிப்படையும் இல்லாமல், பொருளும் இல்லாமல், அவர்கள் நினைத்திருக்கிறவாறு ஒரு பலாத்கார சூழ்நிலையை உருவாக்கிட வேண்டுமென்ற நிலையில் இருக்கிறார்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கும்படியான, அந்த மக்களுக்காக, மக்களால், மிகுந்த பெரும்பாலான மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிற ஓர் அரசாங்கத்தை பலாத்காரத்தைப் பயன்படுத்தி, அதற்கு மிகப் பெரிய மெஜாரிட்டி இருப்பதால், வேறு

1989 மார்ச் 29] [திரு. கே. ரமணி]

முறையை இங்கே கையாள்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு நடவடிக்கையை அவர்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று தான் சொல்ல வேண்டியிருக்கிறது. அவர்களை வெளியேற்றிய போது எங்களுடைய கட்சியின் சார்பில் அதுபற்றி தெளிவாக குறிப்பிட்டிருக்கிறோம். இந்தியாவில் பல மாநிலங்களில் ஏது எதுவோ நடக்கிறது. அதேபோல இங்கேயும், தமிழ்நாட்டிலேயும், அப்படிப்பட்ட நிலை உருவாக்கப்பட்டு வருகிறது. அதுவும் சபைக்குள் நடைபெற்று வருகிறது. நாங்கள் அத்தனை பேரும், அத்தனை உறுப்பினர்களும் அச்செயலைக்கருதி, எண்ணி, பார்த்து, எங்கள் நெஞ்சங்கள் எல்லாம் குமுறிக் கொண்டிருக்கின்றன. உள்ளதை இல்லாதது போலவும், இல்லாததை உள்ளது போலவும் பேசி, தர்க்கம் புரிய ஆரம்பித்தால் உலகம் அழியும் வரை அதற்கு முடிவே இராது. அதுதான் இங்கேயும் இன்றைய தினம் நடைபெறுகிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தன்னுடைய சரியான நடவடிக்கை மூலம்தான் அம்மாதிரியான செயல்கள் வளரும் போது முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். அதனைக் கட்டுப்படுத்த வேண்டியது பேரவைத் தலைவரின் நடவடிக்கை மூலம்தான். அதற்கு நாங்கள் அத்தனை பேரும் ஆதரவளிக்கத் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி இல்லையென்றால் இந்த நிலைமை தொடர்ந்து நடக்கும். அப்படிப்பட்ட நிலையில் ஒரு வார்த்தை கூட எதிர்க்கட்சிகளாலோ அல்லது ஆளும் கட்சிக் காரர்களாலோ பேச முடியாது. இந்தச் சபையை ஒன்றிரண்டு பேர் தங்கள் இஷ்டம்போல் நடக்கும்படி செய்கின்ற நடவடிக்கைகள் நாளையிலிருந்து இருக்கக் கூடாது. அதற்கு உரிய நடவடிக்கைகளை தாங்கள் எடுக்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

திரு. பி. எச். **பாண்டியன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற வருடம் ஜனவரி 28ஆம் தேதி என்ன சதித் திட்டம் நடைபெற்றதோ, அது இன்றைக்கும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதுவும் இந்த அவையில் நடைபெறுகிறது என்பதை மறந்துவிடாதீர்கள். ஏதோ காரணங்களுக்காகத் தான் இப்படி செய்கிறார்கள். அவைக்குள்ளேயே அமளியை உருவாக்கி, ஏதாவது செய்யலாமா, அரசியல் சட்டத்துக்குப் புறம்பாக நடக்கிறது என்கிற நிலையை உருவாக்கலாமா என்பதற்காகத்தான் இப்படிச் செய்கிறார்கள். மற்றொன்று, ஓர் உறுப்பினரைப் பற்றி சில வார்த்தைகள் பேசப்பட்டு, பின்பு எடுக்கப்பட்டன. அந்த அம்மையார் முதலமைச்சர் இறந்தவுடன் திரு. இராகவானந்தம் தன்னுடன் தொலைபேசியில் கிண்டலாகப் பேசினார் என்று சொன்னார். அப்போது அவர்கள் யூஸ் பண்ணிய வெப்பன்ஸ் இதுதான். ***

***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, * * * என்கிற வார்த்தையை அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து அகற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பி. எச். பாண்டியன் பின்னால் சொன்ன வார்த்தைகள் அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

(முற்பகல் 11-20)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானத்தை அளித்தவர்கள் அது குறித்து நீண்ட நேரம் பேசியவர்கள் இல்லை என்றாலும்கூட இந்த அவையிலே இருக்கிற உறுப்பினர்களுக்கு மதிப்பளித்து பதில் அளிக்க வேண்டிய கடமையும், பொறுப்பும் எனக்கு இருக்கிறது. முதலிலே நம்முடைய சட்டப் பேரவையினுடைய முன்னாள் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்களும், இந்திய யூனியன் முஸ்லீம் லீக்கினுடைய தலைவர் திரு. அப்துல் லத்தீப் அவர்களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் திரு. ரமணி அவர்களும் எடுத்துச் சொன்ன கருத்துக்களை நான் முழுமையாக ஏற்றுக்கொள்கிறேன். தமிழ்நாட்டு மக்கள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு 5 ஆண்டுக் காலம் வாக்களித்து, அதற்குப் பிறகு நடைபெறுகின்ற தேர்தலில் என்ன முடிவு எடுப்பார்களோ, அதைப்பற்றிக் கவலையில்லை— இப்போது 5 ஆண்டுகளுக்கு நீங்கள் ஆட்சியை வகிக்கலாமென்று வாக்களித்து, திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆட்சிப் பொறுப்பில் அமர்த்தி இருக்கிறார்கள். எங்களுடைய தோழமைக் கட்சிகளுக்கும் பெருவாரியான வாக்குகளை வழங்கி இங்கே அமர்த்தியிருக்கிறார்கள். அதைப்போலவே எதிர்க்கட்சியாக இருப்பது எந்தக் கட்சி, அதற்கு அடுத்த கட்சியாக இருப்பது எந்தக் கட்சி என்பதையும் தமிழ்நாட்டு வாக்காளர் பெருமக்கள் நிர்ணயித்திருக்கிறார்கள். அதற்குள் தாங்கள் முதலமைச்சராக வர முடியாமல் போய்விட்டதே, அப்படி இருந்திருந்தால் வந்திருக்கலாமே, எனவே இப்போது அதுபோல ஒரு கூட்டுச்சேர்ந்து பார்த்தால் என்ன என்றெல்லாம் திட்டமிட்டு, அதற்காக 5 ஆண்டுக் காலம் பொறுத்திருக்க வேண்டுமா, தேவையில்லை, இப்போதே சட்டப் பேரவையிலே கலவரம் விளைவித்து மாநிலத்திலே அராஜகங்களைத் தூண்டிவிட்டு வன்முறைகளைத் தூண்டிவிட்டு இவைகளைக் காரணங்களாகக் காட்டி இந்த அரசை ஆட்சியைக் கவிழ்த்துவிடலாம் என்கின்ற எண்ணம் உருவாகியிருப்பதாக நான் கருதுகிறேன். நான் டெல்லிக்குச் சென்றது

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2 முறை. 2 முறை சென்றபோது இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக 4 முறை இந்தியப் பிரதமரைச் சந்தித்த போது அப்படி ஓர் எண்ணம் அவருக்கு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஆனால் அவரைச் சுற்றியிருப்பவர்கள் அப்படிப்பட்ட ஓர் எண்ணத்தை உருவாக்கி இருக்கக்கூடும். ஏனென்றால் தமிழ்நாட்டிலே ஆட்சிப்பொறுப்புக்கு எப்படியும் வரவேண்டுமென்று 20 ஆண்டுக் காலமாக காத்திருக் கிற காங்கிரஸ்காரர்களும் எடுத்த எடுப்பிலே, அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் இறந்த பிறகு, தான்தான் முதலமைச்சர் என்று எண்ணிக்கொண்டிருந்தவர்கள், ஐயோ அது கிட்டாமல் போய்விட்டதே என்ற காரணத்திற்காக மத்தியில் உள்ளவர் களையும் குழப்பி மாநிலத்திலும் குழப்பத்தை விளைவித்து இங்கே ஆட்சியைக் கலைத்துவிடலாமென்று ஒரு திட்டம் வகுக்கப் படுவதாக நான் கருதுகிறேன். எனக்கும் தகவல்கள் வந்துள்ளன. அதனுடைய அடிப்படையிலே அண்மையிலே இங்கே வந்துசென்ற திரு. தினேஷ் சிங் அவர்கள் மத்தியிலே அமைச்சர். அவருக்கு ஏதாவது உடல் நலம் குன்றியிருக்கிறது என்று டெல்லியிலே கேள் விப்பட்டால் இங்கிருந்து நாங்கள் யாராவது டெல்லி சென்றிருந் தால் அவரைச் சென்று பார்த்திருப்போம். அதிலும் குறிப்பாக நாஞ்சிலார் அவர்கள் இருக்கிறார்களே, அவருக்கு நெருங்கிய நண்பர், அவரும் சென்று பார்த்திருப்பார். ஆனால் இங்கே நம்முடைய தமிழகச் சட்டமன்றத்தில் அமைச்சராக இருக்கிற திரு. வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள் தலையிலே காயம்பட்டு மருத்துவமனையிலே சிகிச்சை பெறுகிறார். அதைப் போலவே சுப்பிரமணியம் என்ற பெரியார் மாவட்டத்தைச் சேர்ந்த சட்ட மன்ற உறுப்பினர் மூக்கில் அடிபட்டு இன்னமும் முகத்திலுள்ள வீக்கம் குறையாமல் மிகுந்த அவதிப்பட்டு சென்னைப் பொது மருத்துவ மனையில் சிகிச்சை பெறுகிறார். ஆனால் திரு. தினேஷ் சிங் அவர்களுக்கு இவர்களைப்பற்றியெல்லாம் கவலை யில்லை. அவர் எதிர்க்கட்சியினுடைய தலைவரைச் சென்று பார்த்திருக்கிறார். அது அவருடைய விருப்பம். அதை நான் தட்டிக் கேட்கவும் இல்லை. மறுக்கவும் இல்லை. தவறு என்று சொல்லவும் இல்லை. பூச்செண்டு எல்லாம் கொண்டுபோய்க் கொடுத்துப் பார்த்தார்கள் என்று புகைப்படங்கள் எல்லாம் பத்திரிகைகளிலே வெளி வந்திருக்கின்றன. அதோடு முடிந்துவிட வில்லை. அவர் பத்திரிகையாளர்களைச் சந்தித்து இந்த ஆட்சி இருக்கக்கூடாது என்கிற வகையில் ஜனநாயகத்திற்கு விரோதமான ஆட்சி, அரசியல் சட்டத்திற்குப் புறம்பாக நடைபெறுகிற ஆட்சி என்றெல்லாம் வார்த்தைகளைப் பயன்படுத்தி ஒரு மிரட்டலைச் செய்துவிட்டுப் போயிருக்கிறார்.

உங்களுக்கு என்னைப்பற்றித் தெரியும். எங்களுடைய அமைச்சர்களைப் பற்றியும் தெரியும். உங்களைப் பற்றியும் எனக்குத் தெரியும். நாங்களெல்லாம் ஏதோ ஆட்சிப் பொறுப்பில் இந்த அவையில் பதவியில் வந்து அமரு வதற்காக இந்த இயக்கத்திற்கு வந்தவர்கள் அல்ல. ஏறத்தாழ

50, 60 ஆண்டுக் காலமாக— இந்த மன்றத்தில் அமர்ந்திருப்பவர்களிலே முக்கால் பகுதியினர்— பல்வேறு சிறைச்சாலைகளில் அவதிப்பட்டவர்கள், கூழ் குடித்தவர்கள், அடிபட்டவர்கள். எடுத்த உடனேயே ஆட்சிப் பொறுப்பில் வந்து அமர வேண்டும் என்பதற்காக அரசியல் கட்சி தொடங்கியவர்கள் அல்ல. எத்தனையோ போராட்டங்களைச் சந்தித்தவர்கள். எத்தனையோ சிறைச்சாலைகளில் கஞ்சிச் சட்டியை ஏந்தியவர்கள். அடிபட்டவர்கள். சித்திரவதைக்கு ஆளானவர்கள். அப்படிப்பட்டவர்கள் இங்கே அமர்ந்திருக்கிறோம்.

நாளைக்கே இந்த ஆட்சி கலைக்கப்பட்டு, '' நீங்களெல்லாம் வீட்டிற்குப் போங்கள் '' என்று சொன்னால், அதற்காக கோட்டை வாசலில் நின்றுகொண்டு அழுது புலம்பிக்கொண்டிருக்க மாட்டோம். ஆனால், ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். தமிழ்நாட்டிலே ஒரு அரசை — மக்களுடைய தீர்ப்பைப் பெற்று உருவான ஒரு அரசைக் கலைப்பதென்பது — ஒரு சாதாரணமான காரியமல்ல என்பதை தமிழ்நாட்டிலுள்ள வாக்காளப் பெருமக்களின் சார்பாக நான் மத்திய அரசுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அப்படி ஒரு நிலை ஏற்பட்டால், இதைவிட அதிகமான உறுப்பினர்களாக நாம் இங்கே வந்து அமருவோம் — ஆளும் கட்சியிலே என்பதையும் அவர்கள் மறந்துவிடக்கூடாது.

இன்னொன்று என்ன கருதிக் கொண்டிருக்கிறார்கள் என்றால் — இப்போது ஏற்பட்டிருக்கிற அந்தக் கூட்டு எதற்காக என்றால் —வருகிற தேர்தலிலே கூட்டுச் சேருவது என்றும், அதற்குப் பிறகு அந்தக் கூட்டு சேர்ந்து, தேர்தல் எல்லாம் முடிந்த பிறகு, பாராளுமன்றத்திற்கான தேர்தலிலே அங்கே ராஜீவ் காந்தி வென்றுவிடுவார் என்றும், அடுத்த ஆண்டு ராஜீவ் காந்தி பிரதமராக ஆன பிறகு, முன்பு ஜனதா ஆட்சி உருவானபோது மாநில ஆட்சிகளைக் கலைத்தமாதிரி, பிறகு இந்திரா ஆட்சி உருவானபோது மாநில ஆட்சிகளைக் கலைத்ததுபோல் இங்கே மாநில ஆட்சியைக் கலைத்துவிடலாம் என்றும் கருதிக்கொண்டிருக்கிறார்கள்.

'' கொக்கு தலையிலே வெண்ணெய் வைத்துப் பிடிப்பது.'' என்று ஒரு பழமொழி உண்டு. அதைப்போல், ராஜீவ் காந்தி பிரதமராகஆகி, அவர் தமிழ்நாட்டு அரசைக் கலைப்பது என்று சொன்னால் பிறகு நேஷனல் ஃப்ரன்ட் உருவாவதில் அர்த்தமேயில்லை ; (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்காலத்தில் இந்தியாவினுடைய ஆட்சி நேஷனல் ஃப்ரன்டால்— அதனுடைய துணைக் கட்சிகளாக இருக்கிற கட்சிகளால் — சி.பி.எம்., சி.பி.ஐ., இப்படிப்பட்ட கட்சிகள் மூலமாக அங்கே நிச்சயமாக அமையப் போகிற ஆட்சி எதிர்க்கட்சியினுடைய ஆட்சிதான். (மேசையைத் தட்டும் ஒலி).

1989 மார்ச் 29] [டாக்டர் மு. கருணாநிதி]

எனவே அந்த பயம் இங்கே யாருக்கும் இருக்கத் தேவையில்லை அல்லது, ஒருவேளை ராஜீவ் காந்தியே மீண்டும் பிரதமராக வந்தால் — நான் வாழ்த்துகிறேன் — அது வேறு விஷயம் — வந்தால் அவர் இங்கே கலைத்துவிடலாம் என்று கருதுவாரானால் — கலைத்துவிட்டு நடைபெறுகிற தேர்தலிலும் நாங்கள்தான் இங்கே பொறுப்புக்கு வருவோம் என்பதை மாத்திரம் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால், அவர்கள் யாரை நம்பிப் போகிறார்கள் என்பதை மறந்துவிடக் கூடாது. யார் யார் வீட்டு வாசலிலே போய் நிற்கவேண்டும் என்பதை மறந்துவிடக் கூடாது. எங்கெங்கே போய், எவ்வளவு நேரம் காத்துக் கொண்டிருக்க வேண்டும் என்பதையும் மறந்துவிடக் கூடாது. பேட்டிகூடக் கிடைக்காத இடத்தில் போய் தவிக்கப் போகிறார்கள் என்பதற்காக இப்போதே முன்கூட்டியே அச்சாரமாக — ஆழ்ந்த அனுதாபத்தை நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. பாண்டியன் அவர்களும் திரு. ரமணி அவர்களும், திரு. லத்திப் அவர்களும் இங்கே எழுப்பிய பிரச்சினைக்காக நான் இதைச் சொல்ல நேர்ந்தது.

இங்கே வைக்கப்பட்ட இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தில் மிக முக்கியமாகக் கொடுக்கப்பட்டிருப்பது "செல்வி ஜெயலலிதா மீது வழக்கு போடப்பட்டிருக்கிறது. அதனால் ஏற்பட்டிருக்கிற கொந்தளிப்பான நிலை குறித்து" என்று சொல்லப்பட்டிருக்கிறது. உண்மையிலே வழக்கு எதுவும் குறிப்பிட்டுப்போடப்பட வில்லை. அப்படிப் போடப்படாத சூழ்நிலையில் வழக்குப் போடப்பட்டுள்ளதாகவும், அதனால் தமிழ்நாட்டில் கொந்தளிப்பு ஏற்பட்டிருப்பதாகவும் கற்பனை செய்துகொண்டு ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் அளிக்கப்படுகிறது.

உண்மையிலேயே, நடந்தது என்ன என்பதைப் போலீஸ் கமிஷனர் மூலமாக நான் அறிந்தவற்றை இந்த அவைக்குத் தெரிவிப்பது என்னுடைய கடமையாகிறது.

"ஸ்ரீதரன் என்பவர் அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர். அவருடைய உறுப்பினர் பதிவு எண். 321624. இவர் செல்வி ஜெயலலிதாவுக்கு 10—2—1988 அன்று மதுரை வந்தபோது தமுக்கம் மைதானத்தில் தேர்தல் கூட்டத்தின்போது ரூ. 25,000 மற்றும் ரூ. 35, 000 மதிப்புள்ள வெள்ளிச் சாமான்களை, ஜெயலலிதாவுக்குக் கொடுத்தார். தேர்தலில் போட்டியிட வேட்பாளர்கள் தேர்வுக் குழு தேனிக்கு வந்தபோது 10—3—1988-ல் தேனி தொகுதிக்குத் தன்னை வேட்பாளராகத் தேர்ந்தெடுப்பதற்காக ஆயிரம் ரூபாய் முன்பணம் செலுத்தினார்.

[டாக்டர் மு. கருணாநிதி] [1989 மார்ச் 29

(முற்பகல் 11-30)

20—3—1988 அன்று செல்வி ஜெயலலிதாவின் ஆலோசகர் நடராஜன் அழைப்பின்படி இவர் ஜெயலலிதா வீட்டுக்குச் செல்ல, அங்கே திரு. நடராஜனிடம் தேனி டிக்கட் கிடைக்க ரூபாய் 50 ஆயிரம் கொடுத்தால் ஜெயலலிதா மகிழ்ச்சி அடைவார் என்று சொன்னதன்பேரில், எம். எஸ். ஸ்ரீதரன் 25 ஆயிரம் ரூபாயை முதலில் ஜெயலலிதாவிடம் கொடுத்தார். அப்படிக் கொடுத்ததற்கான புகைப்படம்கூட எடுக்கப்பட்டது. அவர் அந்த அம்மையாருக்கு முன்னால் நின்று பணம் கொடுத்து படம் எடுத்துக்கொள்வதிலே அவ்வளவு ஆர்வம் காட்டிய இளைஞர், பாவம். அந்தப் படம் எடுக்கப்பட்டிருக்கிறது. அதைக்கூட போலீசிலே ஒப்படைத்திருக்கிறார். 9—5—1988 அன்று நடராஜன், ஸ்ரீதரனை மீண்டும் போயஸ் தோட்டத்திற்கு வரச் சொல்லி தேர்தல் நிதி டிக்கட்டுகள் வாங்கவேண்டுமென்று கூற அவர் சொல்படி ஒரு லட்ச ரூபாய்க்கான ஆயிரம் ரூபாய் மதிபபுள்ள 100 டிக்கட்டுகளை ஜெயலலிதாவிடம் ஒரு லட்சரூபாய் கொடுத்துவிட்டு வாங்கினார். அன்று இரவு நடராஜன் ஸ்ரீதரனை அவருடைய வீட்டுக்கு அழைத்துச் சென்று, ஜெயலலிதா எழுதயிருக்கும் கதையைத் திரைப்படம் எடுக்கப் போவதாகவும், ஸ்ரீதரன் 20 லட்ச ரூபாய் தரவேண்டுமென்றும், முன்பணமாக ஒரு லட்சம் கொடுக்கும்படியும் கேட்டார். அதன்படி 16—5—1988 அன்று ஸ்ரீதரன் ஒரு லட்சம் ரூபாயை போயஸ் தோட்டத்தில் நடராஜனிடம் கொடுத்தார். பின்னர் 19—12—1988 அன்று தேனி தொகுதிக்கு ஸ்ரீதரனை வேட்பாளராகத் தேர்ந்தெடுக்க $2\frac{1}{2}$ லட்ச ரூபாய் தரவேண்டுமென்று நடராஜன் கேட்க, ஸ்ரீதரன் 20—12—1988 அன்று தேனியிலுள்ள தன்னுடைய சொத்தை 7 லட்ச ரூபாய்க்கு விற்று, அதில் $2\frac{1}{2}$ லட்ச ரூபாயை 21–12–1988 அன்று ஜெயலலிதா வீட்டில் நடராஜனிடம் கொடுத்தார். அதே நாளில் மதுரை மாவட்டம் அ.இ.அ.தி.மு.க. செயலாளர் சேடபட்டி முத்தையாவுக்கு தன் பெயரைப் பரிந்துரை செய்வதற்காக 40 ஆயிரம் ரூபாயை சென்னை உடுப்பி ஹோமிலே வைத்துக் கொடுத்தார். எனினும் அப்போது அறிவிக்கப்பட்ட வேட்பாளர் பட்டியலில் ஸ்ரீதரன் பெயர் இல்லை. உடனே நடராஜனிடம் பணத்தை திருப்பிக் கேட்க, 28—12—1988 அன்று போயஸ் தோட்டத்திற்கு வருமாறு சொல்லப்பட்டார். அப்போது ஸ்ரீதரன் போயஸ் தோட்டத்திற்குச் சென்றபோது, நடராஜன், கிருஷ்ணமூர்த்தி, தினகரன், ஸ்ரீனிவாசன், சேகர், முரளி, சுந்தரமூர்த்தி மற்றும் இருவரால் பயமுறுத்தப்பட்டு துப்பாக்கியால் சுட்டுவிடுவோம் என்று கூறி, வெளியே துரத்தப்பட்டார். மேலும் முயற்சிகள் செய்து பலன் பெறாத ஸ்ரீதரன் 12—2—1989 அன்று போயஸ் தோட்டத்திற்குச் சென்று பணத்தைக் கேட்க, நடராஜன் துப்பாக்கியைக் காட்டி மிரட்டி கொன்றுவிடுவோம் என்று சொல்லி அவரும், அவருடன் சேர்ந்தவர்களும் ஸ்ரீதரனை அடித்து வெளியே துரத்தினார்கள்.

1989 மார்ச் 29] [டாக்டர் மு. கருணாநிதி]

இந்தப் புகார் மீது சென்னை மத்திய குற்றப்பிரிவு குற்ற எண் 255/89, பிரிவு 342, 506, 307, 420 இ.த.ச.-வில் வழக்குப் பதிவு செய்து உதவி ஆணையாளர் (குற்றப் பிரிவு) அவர்கள் நேரடி விசாரணையில் எடுத்துக்கொள்ளப்பட்டது. இந்த வழக்கிலே குறிப்பிடப்பட்டுள்ள எதிரிகள் ஜெயலலிதா, எம். நடராஜன், கிருஷ்ணமூர்த்தி, தினகரன், சுந்தரமூர்த்தி, ஸ்ரீனிவாசன், சேகர், சேடபட்டி முத்தையா, முரளி மற்றும் இருவர் ஆவர். விசாரணையின்போது திரு. சுந்தரமூர்த்தியை 20—3—1989 அன்று 21-30 மணிக்கு கைது செய்து, விசாரணைக் குப்பின் 21—3—1989 அன்று நீதிமன்றத்தின் முன் ஆஜர் செய்யப் பட்டார். திரு. நடராஜன் ஏற்கெனவே மத்திய குற்றப் பிரிவு குற்ற எண். 254/89-ன்கீழ் கைதானவர். இந்த வழக்கில் முன் ஜாமின் பெற்றுள்ளார். மேலும் எதிரிகள் கிருஷ்ணமூர்த்தி, தினகரன் மற்றும் முரளி ஆகியோரும் இந்த வழக்கில் முன் ஜாமீன் பெற்றுள்ளார்கள். இந்த வழக்கிலே 9 எதிரிகளும் பெயரிடப்பட் டிருந்தாலும் எந்தெந்த எதிரிகள் எந்தப் பிரிவின் கீழ்வரும் குற்றங்களைப் புரிந்துள்ளார்கள் என்பது புலன் விசாரணை முழுமையாக முடிந்த பின்னரே தெரியும். உதாரணமாக பணம் கேட்க வந்த ஸ்ரீதரனை 12—2—1989 அன்று அடித்துத் துரத்திய வர்கள் எதிரிகள் நடராஜன், கிருஷ்ணமூர்த்தி, தினகரன், சுந்தர மூர்த்தி மற்றும் முரளி ஆகும். அந்தச் சமயத்திலே மற்ற எதிரிகள் அங்கு இல்லை. ஒவ்வொரு எதிரியும் எந்தவிதத்திலே இந்த வழக்கிலே சம்பந்தப்பட்டுள்ளார்கள் என்பதை அறியவும் புலன் விசாரணை தொடருகிறது.'' இவ்வாறு சென்னை மாநகரக் காவல் துறை ஆணையாளர் இந்த வழக்கு குறித்து அறிக்கை கொடுத்துள்ளார். ஆக வழக்கு தொடரப்படவில்லை. புலன் விசாரணைதான் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

அதுமாத்திரமல்ல, இதிலே வெளியிலே நடைபெறுகிற சம்ப வங்களைப் பற்றியெல்லாம் எதிர்க் கட்சியினுடைய துணைத் தலைவர் இங்கே குறிப்பிட்டார். இதிலே பல இடங்களில் முதலமைச்சருடைய கொடும்பாவி கொளுத்தப்பட்டு, அப்படிக் கொளுத்தியவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அதைப் போலவே, அதற்குப் பதிலாக செல்வி ஜெயலலிதாவின் கொடும் பாவி கொளுத்தப்பட்டு அப்படிக்கொளுத்திய தி.மு.க.வினர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அந்தப் பட்டியல் எல்லாம் என்னி டத்தில் இருக்கிறது.

இதையொட்டித்தான் நேற்றையதினம் நம்முடைய அவை யினுடைய முன்னவரும், கல்வியமைச்சரும் கழகத்தினுடைய பொதுச் செயலாளருமான பேராசிரியர் அவர்கள், இரண்டாம் தேதி கண்டனக் கூட்டங்கள் முதலமைச்சரைத் தாக்கியதற்காக என்று இருந்ததை, நேற்றையதினம் நம்முடைய அவையிலே உள்ள உறுப்பினர்கள், குமரி அனந்தன் அவர்கள். ரமணி அவர் கள், அழகர்சாமி அவர்கள், லத்தீப் அவர்கள், இவர்களெல் லாம் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஒரு வார காலம் அவர்கள்

[டாக்டர் மு. கருணாநிதி] [1989 மார்ச் 29

அவைக்கு வரக் கூடாது என்று தள்ளி வைக்கப்பட்டிருந்ததை, உடனடியாகத் திரும்பப் பெற்று, நேற்றைக்கே அவர்கள் அவைக்கு வரலாம்; முந்தாநாளே கூட அவைக்கு வரலாம் என்று அறிவிக்கப் பட்டது. இப்படி ஒரு சுமுகமான சூழ்நிலை உருவான பிறகு, இந்தக் கண்டனக் கூட்டங்களெல்லாம் தேவையில்லை என்பதற் காகத்தான், இரண்டாம் தேதி முதல் ஒன்பதாம் தேதி வரை யிலே, தமிழ்நாட்டிலே கழக அரசின் நிதிநிலை அறிக்கை விளக்கக் கூட்டங்கள் என்று அதனுடைய தலைப்புகூட மாற்றப் பட்டிருக்கிறது.

இந்த அளவிற்கு ஆளுங்கட்சி பொறுப்போடு அமைதியாக தமிழ் நிலத்தை நடத்திச் செல்ல வேண்டுமென்று விரும்புகிற பொழுது, இதை அமளிக்களமாக ஆக்குகிறார்கள். காலையிலே கூட நம்முடைய லத்தீப் அவர்கள் இங்கே தாக்கர் கமிஷனைப் பற்றிப் பேச ஆரம்பித்தபொழுது நான் அதைத் தடுத்து நிறுத்தி யிருக்கிறேன். இவைகளெல்லாம் ஒரு வீண் அமளியை உரு வாக்குவதற்கு இடம் தரக்கூடாது என்கின்ற அந்தப் பெருந் தன்மையோடு அண்ணா அவர்கள் வழியில் நின்றுதான் நான் அதைத் தடுத்து நிறுத்தினேன். ஏதோ மத்திய அரசுக்குப் பயந்து கொண்டு அல்ல; மோதுதல் வேண்டாம் என்பதுதான். நிர்வாகத்திலே மோதுதல் தேவை இல்லை. நாம் உறவுக்குக் கை கொடுப்பவர்களாகவும் நம்முடைய மாநில உரிமைகளுக்குக் குரல் கொடுப்பவர்களாகவும் இருப்போம் என்பதைப் பல நேரங்களிலே நான் சுட்டிக்காட்டியிருக்கின்றேன், அதை நடை முறைப்படுத்தியிருக்கின்றோம், இந்த அரசின் சார்பில்.

ஆனாலும்கூட, ஏதாவது செய்து, வன்முறைகளை விளை வித்து, அராஜகங்களின் மூலம் இந்த ஆட்சியைக் கலைத்து விடலாம் என்று யார் கருதினாலும் அது நடவாது. இன்னும் சொல்லப்போனால் அதற்குப் பின்னணியாக இருப்பவர்கள் மத் தியிலே உள்ள சிலர் மாத்திரம் அல்ல: நான் சொன்னேனே, தரை மட்டமாக ஆக்கப்பட்டு விட்டது என்று, அந்த சாராய சாம்ராஜ்யத்தினுடைய அதிபர்கள் சிலபேரும் இதற்குப் பின்னா லேயிருந்துகொண்டு தூண்டிவிட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்ற உண்மையையும் நான் இங்கே சொல்ல விரும்புகின்றேன். எனவே, தண்டிக்கப்படுகின்ற அல்லது நடவடிக்கை எடுக்கப் படுகின்ற குற்றவாளிகளில் சாராய சாம்ராஜ்யாதிபதிகளும் அடங்குவார்களேயானால் அது இந்த அரசின் தவறாக இருக் காது; அவர்கள் நடத்துகின்ற நாடகத்தின் விளைவாக இருக்கும் என்பதை மாத்திரம் இங்கே எடுத்துக்கூறி இந்த அளவில் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ளத் தேவையில்லை என்று கூறி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச் சரவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகு, அவையினுடைய இதர அலுவல்களை ஒத்தி வைத்து இப்பிரச்சினை குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்று கருதி இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

5. வரவு செலவுத் திட்டம் 1989–90
பொது விவாதம்—தொடர்ச்சி.

*திரு. சி. கோவிந்தசாமி : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, மாண்புமிகு பேரவை உறுப்பினர்களே பத்திரிகை யாளர்களே, அரசுத் துறை அதிகாரிகளே, அனைவருக்கும் என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு என்னைச் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்வு செய்திருக்கிற திருப்பூர் தொகுதி வாக் காளப் பெருமக்களுக்கும் அதற்காகப் பேருதவி வழங்கி யிருக்கிற சம்பந்தப்பட்ட அனைவருக்கும், இந்த அவையிலே பேசுகிற நல்ல வாய்ப்பை உருவாக்கித் தந்த பேரவைத் தலை வரவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, எனது முதல் உரையை இங்கே தொடங்க விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

(முற்பகல் 11–40)

தமிழ்நாட்டிலே நடைபெற்று முடிந்த ஒரு மகத்தான அரசியல் போராட்டத்தில் தமிழ்நாட்டு மக்களின் அன்பான ஆதரவைப் பெற்று, தமிழகத்திலே பொறுப்பேற்றிருக்கிற இந்த அரசு, தேர்தல் காலத்திலே நாட்டுமக்களுக்கு முன்னாலே சொல்லப் பட்டு இருக்கிற பல்வேறு வாக்குறுதிகளை நிறைவு செய்யக்கூடிய வகையிலே அளிக்கப்பட்டிருக்கக்கூடிய இந்த வரவு செலவுத் திட்டத்தின் மூலம், சாதாரணமாக அடி மட்டத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிற ஏழை எளிய மக்களினுடைய பல்வேறு பிரச் சினைகளுக்கு உதவி அளிக்கின்ற முறையிலே இந்த மக்களி னுடைய பல நல்வாழ்வுத் திட்டங்களை உள்ளடக்கி உருவாக்கி யிருக்கக்கூடிய இந்த வரவு செலவுத் திட்டத்தை இந்தச் சட்டப் பேரவையிலே சமர்ப்பிக்கின்ற இந்த நேரத்திலேகூட ஒரு பெரிய போராட்டத்திற்கு மத்தியிலே அதைச் சமர்ப்பிக்க வேண்டிய ஒரு சூழ்நிலை இங்கே இந்த அவையிலே உருவாக்கப்பட்டிருக்கிறது. நடந்து முடிந்த அரசியல் போராட் டத்தில் மக்களுடைய பலமான ஆதரவை, அன்பான ஆதரவைப் பெற்று இந்த அரசு ஆட்சிப்பொறுப்பை ஏற்றுள்ளது. இந்த அவையில் அரசியல் உள்நோக்கத்தோடு நடைபெறுகிற இந்த நடவடிக்கைகளை எல்லாம் அவைக்கு வெளியே இருக்கக்கூடிய மக்கள் முன்னால் எந்தமக்கள் இந்த அரசை ஆட்சிப் பொறுப்பில் அமர்த்தினார்களோ அவர்கள் முன்னால் கொண்டு சென்று, அரசியல் உள்நோக்கத்தோடு நடந்து கொண்டிருக்கிற இப்படிப் பட்ட சக்திகளை அடையாளம் காட்ட வேண்டிய அவசியம் இருக் கிறது என்பதை இந்த நேரத்தில் வலியுறுத்திக் கூறவிரும்புகிறேன்.

[திரு. சி. கோவிந்தசாமி] [1989 மார்ச் 29

இங்கே சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற வரவு-செலவுத் திட்ட அறிக்கையில் சாதாரண ஏழை, எளிய மக்கள், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பயனளிக்கக்கூடிய பல நல்ல திட்டங்கள் அறிவிக்கப் பட்டிருக்கின்றன. எனக்கு முன்னால் எங்கள் இயக்கத்தின் சார்பில் உரையாற்றி இருக்கிற உறுப்பினர்கள் இவற்றை வர வேற்றுப் பேசியிருக்கிறார்கள். இந்த அறிக்கையில் உள்ளடங்கி இருக்கிற நல்ல அம்சங்களை வரவேற்று நானும் ஒருசில கருத்துக் களைக் கூற விரும்புகிறேன். குறிப்பாக படித்து வேலையற்ற வாலி பர்களுக்கு நிவாரணம் அளிக்கக்கூடிய வகையில் நல்ல திட்டங் கள் இங்கே முன்வைக்கப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். 10ம் வகுப்பும் அதற்கு மேலும் படித்து வேலையற்று இருக்கிற வாலிபர்களுக்கு மாதம் 200 ரூபாய் மதிப்பூதியம் வழங்கி பல்வேறு துறைகளில் அவர்கள் பணிகளில் அமர்த்தப்படுவார்கள் என்று சொல்லியிருப்பதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக் கிறேன். அவர்களுக்கு அளிக்கப்படுகிற உதவித் தொகை குறை வான தொகையாக இருப்பதால் அதனை உயர்வு செய்து வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்கெனவே இருந்த அரசாங்கம் படித்து வேலையில்லாமல் இருக்கும் வாலிபர்களுக்கு நிவாரணம் வழங்கியபோது பல்வேறு இயக்கங்கள் கோரிக்கை வைத்த பின்னால் வேறு பல மாநில அரசாங்கங்கள் இப்படி நிவாரணம் அளிக்கிற திட்டங்களை அறிவித்த பின்னால் இவர்களும் அதை வழங்குவதாக அறிவித் தார்கள். அப்படி வழங்கக்கூடிய நிவாரணம் என்பது வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து ஐந்தாண்டு காலத்திற்குப் பின்னாலும் வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு அந்த நிவார ணத் தொகை வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். அதுவும் மூன்றாண்டுகளுக்கு மட்டும் தான் அவர்களுக்கு வழங்கப்படும் என்று நடைமுறைப்படுத்தினார்கள். நான் இந்த அரசை கேட்டுக் கொள்ள விரும்புவது வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து ஐந்தாண்டு காலம் என்று இருக்கக்கூடிய விதியை இரண் டாண்டு காலம் என்று மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். அடுத்தபடியாக, அந்த உதவித்.தொகை மூன்றாண்டு களுக்கு மட்டும் வழங்கப்பட்டு பின்பு நிறுத்தப்படும் என்பதை மாற்றி வேலை கிடைக்கிறவரையில் தொடர்ந்து உதவித் தொகை வழங்கிட அரசாங்கம் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய தமிழகத் தில் அரசாங்கத்தின் கணக்கின்படியே 27 லட்சம் பேர்கள் வேலையில்லாதவர்கள் இருக்கிறபோது ஏற்கெனவே இருந்த அரசாங்கம் வழங்குகிற உதவித் தொகை என்பது 11,000 பேர்களுக்கு மட்டும் தான் பயன்படுகிற அளவில் இருந்து கொண்டிருக்கிறது. எனவே, நான் ஏற்கெனவே குறிப்பிட்ட வகையில் வேலையில்லாத அனைவருக்கும் பயன்படுகிற வகையில் இதனை விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1989 மார்ச் 29] [திரு. சி, கோவிந்தசாமி]

சர்வீஸ் கமிஷன் தேர்வு எழுதி பாஸ் செய்தும் பல வருடங்களாக வேலை கிடைக்காமல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிற நிலையில் பலர் இருக்கிறார்கள். இந்த நிலையை மாற்றி சர்வீஸ் கமிஷன் தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்கிற வாலிபர்களுக்கு எல்லாம் உரிய வேலைகளை வழங்குகிற முறையில் அரசாங்கம் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல சர்வீஸ் கமிஷன் தேர்வு கடந்த நான்கு ஐந்து ஆண்டுகளாக நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே அதைத் தொடர்ந்து நடத்தவேண்டும் என்று இந்த அரசை நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அப்படிப்பட்ட தேர்வை, கமிஷன் மூலமாக எழுதி, பாஸ் செய்து இருப்பவர்களுக்கு எல்லாம் அரசு அலுவலகத்திலே பல துறைகளிலும் தற்போது வேலை வாய்ப்புகள் இருக்கின்றன, காலி இடங்கள் இன்றைக்கும் பூர்த்தி செய்யப்படாமல் இருக்கின்றன. ஆகவே அந்த காலி இடங்களை எல்லாம் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் குறிப்பாக நம்முடைய மின்சார வாரியத்திலே மட்டும் பல ஆயிரக்கணக்கான காலியிடங்கள் இன்றைக்கும் இருந்து கொண்டு இருக்கின்றன. ஆகவே அவைகளை பூர்த்தி செய்யக்கூடிய முறையிலே, இந்த சர்வீஸ் கமிஷன் மூலமாக தேர்வு எழுதி பாஸ் செய்திருப்பவர்களுக்கு எல்லாம் வேலையற்று இருப்பவர்களுக்கு எல்லாம் வேலை வாய்ப்புக்களை கொடுக்க வேண்டும். வேலையில்லாப் பிரச்சினை என்பது இன்றைக்கு தேசிய அளவிலே, தொழில் வளர்ச்சியோடு சம்பந்தப்பட்டு இருக்கிற ஒரு பிரச்சினை. மாநில அரசாங்கம் அதற்கு என்று உதவிகளை, இடைக்கால நிவாரணங்களை வழங்க முடியுமே ஒழிய, நிரந்தரமாக அந்த வேலையில்லாப் பிரச்சினைக்கு மாநில அரசாங்கத்தால் தீர்வு காணமுடியாது என்பதை நாம் உணர்வோம். ஆகவே இது மத்திய அரசாங்கத்தினுடைய கொள்கையோடு சம்பந்தப்பட்டு இருக்கிற காரணத்தாலே, இதை நாம் மக்களுக்கு முன்னாலே எடுத்துச் சொல்லவேண்டிய நிலையும் தேவையும் இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய வரவு செலவுத் திட்டத்திலே குடிநீர்ப் பிரச்சினைக்கு தீர்வு காணக்கூடிய முறையிலே ஒரு குறுகிய காலத்தை தீர்மானித்து, அந்தக் குறிப்பிட்ட காலகட்டத்திற்குள்ளே தமிழ் நாடு முழுவதும் இருக்கக்கூடிய மக்களுக்கு குடிநீர்ப் பிரச்சினை தீர்த்து வைக்கப்படும் என்று வரவு செலவுத் திட்டத்திலே நம்முடைய முதல்வர் அவர்கள் பேருரையில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அதற்காக 155 கோடி ரூபாய் நிதியும் ஒதுக்கப்பட்டு இருப்பது வரவேற்கக்கூடிய அம்சம்.

கோவை மாவட்டத்திலே குறிப்பாக பல்லடம் தாலுக்காவில் குடிநீர்ப் பிரச்சினை என்பது மிகப்பெரிய அளவிற்கு இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்

[திரு. சி. கோவிந்தசாமி] [1989 மார்ச் 29

அவர்கள் பல்லடம் தொகுதியைச் சார்ந்தவர்; அங்கேயிருந்து வந்திருப்பவர். அவருக்கு நிச்சயமாக நன்கு புரியும் என்று நான் கருதுகிறேன். அவர்கள் நேரிலேயே பார்த்திருக்கிறார்கள், ஆகவே பல்லடம் தாலுக்கா மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிற பகுதி என்ற முறையிலே, அங்குள்ள குடிநீர்ப்பிரச்சினைக்காக நிவாரணத் தொகையை சற்று கூடுதலாக்கிக் கொடுக்க வேண்டும் என்றும், அந்த மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்து குடிநீர் வழங்க வேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

திருப்பூர் பகுதியில், திருப்பூர் நகரத்திற்கும், அதையொட்டி இருக்கக் கூடிய பல்வேறு கிராமங்களுக்கும் பயன்படக்கூடிய வகையில், இரண்டாவது குடிநீர்த் திட்டம் என்று சொல்லி, ஒரு குடிநீர்த் திட்டம் கடந்த 1983 ஆம் ஆண்டு அன்றைய முதல்வர் அவர்களால் திருப்பூர் நகரத்திலே தொடங்கி வைக்கப் பட்டது. 3 ஆண்டுக் காலத்திலே முடிக்கப்பட வேண்டிய அந்தத் திட்டம்— 1983 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 13 ஆம் தேதி அன்றைய முதல்வர் அவர்களால் தொடங்கிவைக்கப் பட்ட அந்தத் திட்டம்-கிட்டத்தட்ட 6 ஆண்டுக்காலம் நெருங்கிக் கொண்டிருக்கிற இந்த நேரத்திலே கூட, அந்தத் திட்டம் முறையாக செயல்படுத்தப்பட்டு, நிறைவேற்றப்படவில்லை. குடிநீர்ப் பிரச்சினையால் மிகவும் கடுமையாக பாதிக்கப் கப்பட்டு இருக்கிற திருப்பூர் பகுதியில் 10 நாட்களுக்கு ஒரு முறை 2 குடம் தண்ணீர் கிடைக்கக் கூடிய ஒரு அவல நிலைமை இருக்கிறது என்பதை நான் இங்கே எடுத்துச் சொல்ல விரும்பு கிறேன். இது மிகவும் முக்கியமான, மக்களுக்கு மிக அத்தியா வசியமான தேவையாக இருக்கிற பிரச்சினை. கடந்த கால அரசாங்கம் இதைப்பற்றியெல்லாம் அக்கறை இல்லாமல் செய லாற்றியதன் விளைவாக 6 ஆண்டுக் காலம் முடிந்த பின்னாலும் 3 ஆண்டுக் காலத்திலே முடிக்கப்படவேண்டிய அந்தத் திட்டம் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. ஆகவே புதிதாக பொறுப்பேற்றிருக்கக்கூடிய அரசாங்கம், இதிலே நிச்சயமாக உரிய கவனம் செலுத்தும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். ஆகவே ஒரு குறுகிய காலத்திலே இந்த இரண்டாவது குடிநீர்த் திட்டத்தை நிறைவு செய்யக் கூடிய வகையிலே இந்த அரசு பெருமுயற்சி எடுத்துக் கொண்டு அதை நிறைவேற்றவேண்டும்.. திருப்பூர் நகரத்திற்கு மட்டு மல்லாமல், 44 பஞ்சாயத்துக்களுக்கும், 4 பேரூராட்சிகளுக்கும் பயன்படக்கூடிய திட்டம், 5 லட்சத்திற்கும் அதிகமான மக்க ளுக்குப் பயன்படக்கூடிய திட்டம், எனவே இதை உரிய காலத்தி திலே நிறைவேற்றுவதற்கான முயற்சியை அரசாங்கம் துரிதமாக மேற்கொள்ளவேண்டும் என்று நான் வலியுறுத்துகிறேன்.

அதேபோல் கல்விக்காக இந்த வரவு செலவுத் திட்டத்தில் 900 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு இருக்கிறது. ஆரம்பப் பள்ளிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்வது

1989 மார்ச் 29] [திரு. சி. கோவிந்தசாமி]

குறித்தும் புதியதாக 60 மேல்நிலைப் பள்ளிகள் கட்டப்படுவது குறித்தும், இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டு இருப்பது உண்மையிலேயே வரவேற்கக்கூடிய ஒரு நல்ல அம்சமாகும்.

அதைப்போலவே திருப்பூர் நகரம் என்பது மிக வேகமாக வளர்ந்து வருகிற நகரம். அங்கே இரண்டு மேல்நிலைப்பள்ளிகள் ஒன்று திருப்பூருக்கு அருகிலே இருக்கிற 15-வேளம்பாளையம் பேரூராட்சி பகுதியிலேயும் அங்கே சுமார் 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் இருக்கிறார்கள். அந்தப் பஞ்சாயத்திலே ஒரு மேல்நிலைப் பள்ளியும் அடுத்து திருப்பூர் நகரத்தினுடைய தெற்குப் பகுதியாக இருக்கிற தென்னம்பாளையம் பகுதியிலே ஒரு மேல்நிலைப் பள்ளியும் உருவாக்குவதற்கான முயற்சியை இந்த அரசு மேற்கொள்ள வேண்டும் என்று நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களை நான் பணிவோடு இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் இந்த நிதிநிலை அறிக்கையில் தனியார் சுயநிதிக் கல்லூரிகள் தொடங்க அனுமதிகள் ரத்து செய்யப்பட்டு இருக்கின்றன. அதிலே தேவையான வசதிகள் இல்லை. அவைகள் எல்லாம் மிகவும் சீர்கேடான நிலைமையில் இருக்கின்றன என்பதாக இந்த அறிக்கையிலே சுட்டிக்காட்டியிருப்பது உண்மையானது, அதற்கான அனுமதி ரத்து செய்யப்பட்டு இருப்பது வரவேற்கக் கூடிய ஒரு நல்ல அம்சமாகும். அதேநேரத்தில் அரசாங்கத்தினுடைய பொறுப்பிலே இருக்கக் கூடிய கல்லூரிகளில் கூட அப்படிப்பட்ட சில வசதிக் குறைவான போக்குகள் இருக்கின்றன. உதாரணமாக நம்முடைய கோவை மாவட்டத்திலே பாரதியார் பல்கலைக் கழகத்திற்கு உட்பட்டிருக்கக்கூடிய பெண்கள் கலைக் கல்லூரி அரசு கலைக் கல்லூரி மாவட்டத்திலேயே திருப்பூரிலே இருப்பது ஒன்று தான் என்று நான் கருதுகிறேன்.

(முற்பகல் 11-50)

திருப்பூரிலுள்ள எல்.ஆர்.ஜி. அரசு பெண்கள் கலைக் கல்லூரி என்பது மிகவும் பாழடைந்த நிலையில் இருப்பதை கடந்த ஒரு வார காலத்திற்கு முன்னால் அந்தக் கட்டிடத்தை எல்லாம் சம்பந்தப்பட்ட கல்லூரியினுடைய முதல்வர் அவர்கள் என்னை அழைத்துச் சென்று காட்டினார்கள். வாய்ப்பு கிடைக்குமானால் நம்முடைய மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் அந்த மாவட்டத்திற்கு வருகை தருகிறபோது, அந்தக் கல்லூரியை பார்வையிடுமாறு கேட்டுக் கொள்கிறேன். அந்தக் கட்டிடம் மிக மோசமான நிலையில், எந்த நேரத்திலும் அந்தக் கட்டிடம் இடிந்து விழும் என்ற அபாயத்தை நோக்கி அங்கே இருக்கக் கூடிய பேராசிரியர்கள் பாடங்களை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அச்ச நிலையிலே மாணவிகள் அங்கே அந்தக் கல்லூரிக்குச் செல்கிற நிலை இருக்கிற காரணத்தினாலே அந்தக் கல்லூரியை திருத்தி அமைப்பதற்கான முயற்சியில் ஈடுபடவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. சி. கோவிந்தசாமி] [1989 மார்ச் 29

அந்தக் கல்லூரியில் பி.காம், எம்,காம், போன்ற வகுப்புகள் இன்றைக்கு இல்லாத நிலை இருக்கிறது. ஆகவே அந்தக் கல்லூரியில் பி.காம், எம்.காம், வகுப்புகளை ஏற்படுத்துவதற்கு நம்முடைய மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் ஏற்பாடுகளைச் செய்து தரவேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் தாலூக்கா போக்குவரத்திற்குக் கூட பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலே செயல்பட்டு வரக்கூடிய அந்த நிலையிலே அங்கே எந்த ஒரு கல்லூரியும் இல்லாத ஒரு நிலை தொடர்ந்து நீடித்துக் கொண்டிருக்கிறது. ஆகவே இந்த அரசாங்கம் கல்விக்கு மிக அதிகமான கவனம் செலுத்தி, அதற்கான உதவிகளை வழங்கி இருக்கக் கூடிய நிலையிலே கூடலூர் பகுதி மக்களின் நீண்டநாளைய கோரிக்கையான அந்த கூடலூரிலே ஒரு கல்லூரியை ஏற்படுத்த வேண்டுமென்று இந்த அரசை இந்த நேரத்திலே கேட்டுக் கொள்வதோடு, மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் அதற்கான முயற்சியினை எடுப்பார்கள் என்ற நம்பிக்கையோடு அவர்களுடைய கவனத்திற்கு நான் இதைக் கொண்டுவர விரும்புகிறேன்.

அதேபோன்று இந்த அறிக்கையிலே உலக வங்கியினுடைய நிதி உதவியோடு தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் என்ற திட்டத்திலே திருப்பூர் நகரமும் சேர்க்கப்பட்டிருக்கிறது என்பது ஒரு வரவேற்கத்தக்க, பாராட்டுக்குரிய அம்சமாகும். அதிலே தொழிற்துறையிலும், மற்ற துறைகளிலும் வேகமாக வளர்ச்சி பெற்றுக் கொண்டிருக்கின்ற திருப்பூர் நகரத்திற்கு உலக வங்கி நிதி உதவியோடு ஏற்படுத்தக்கூடிய திட்டத்திலே சற்று முன்னுரிமை கொடுக்கக் கூடிய முறையிலே, நகரத்தினுடைய மையத்திலே இருக்கின்ற ரயில்வே பாதையைக் கடக்கின்ற ஒரே ஒரு மேம்பாலம் மிகக் குறுகிய நிலையில் இருக்கிறது நம்முடைய மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் இதை மிக நன்றாக அறிவார்கள். ஆகவே அதை உலக வங்கியின் உதவியோடு, திருப்பூர் நகரத்திலே ரயில்வே மேம்பாலம் என்பது அந்த நகரத்தினுடைய மிக அத்தியாவசிய தேவையாகும், நகர மக்கள் பல மணி நேரம் அந்தப்பாலத்திலே காத்துக் கிடக்கின்ற ஒரு சூழ்நிலை அந்த நகரத்திலே நிலவிக் கொண்டிடிருக்கிற காரணத்தாலே, மிக விரைவாக அந்த ரயில்வே மேம்பாலத்தை விஸ்தரிக்கக் கூடிய முறையிலே அல்லது வேறு ஒரு பாலம் கூடுதலாகக் கட்டக்கூடிய முறையிலே முயற்சியை மேற்கொள்வதற்கு இந்த அரசை, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதே போன்று திருப்பூர் வளர்ந்து வருகின்ற ஒரு நகரம். எந்தவிதமான சாக்கடை வசதியும் இல்லாமல் சாக்கடையின் மத்தியிலே மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஒரு அவல

1989 மார்ச் 29] [திரு. சி. கோவிந்தசாமி]

நிலைமை அங்கே இருந்து கொண்டிருக்கின்ற காட்சியை இன்றைக்கும் நாம் பார்க்க முடியும். ஆக இப்படிப்பட்ட அந்த நகரத்திலே உலக வங்கி உதவியோடு நகரத்தினுடைய வளர்ச்சித் திட்டங்கள் என்ற முறையிலே ஒரு பாதாள சாக்கடைத் திட்டத்தை அங்கே உருவாக்கி, அந்தச் சாக்கடை பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வு காணக்கூடிய முறையிலே அந்தத் திட்டத்தை உருவாக்க வேண்டும்.

மிக அதிகமான போக்குவரத்து நெரிசல் இருக்கின்ற அந்த நகரத்தில், போக்குவரத்து நெருக்கடியான பிரச்சினைகள் காரணமாக பல்வேறு விதமான விபத்துக்கள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்ற இந்த நேரத்திலே, அந்த நகரத்திலே ஒரு 'பை-பாஸ் ரோடும்' அந்த நகரத்திலுள்ள அனைத்து ரோடுகளையும் இணைக்கும் வகையில் நகர எல்லையில் ஒரு 'ரிங் ரோடு' போன்ற ரோட்டையும் இந்த உலகவங்கி உதவியோடு நிறைவேற்றுவதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று வீட்டுவசதி வாரியத்தின் மூலமாக ரூ. 110 கோடி திட்டத்திலே 19,400 வீடுகள் இந்தக் காலத்திலே புதியதாக கட்டப்படும் என்று அரசு அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கது. ஆகவே திருப்பூர் நகரத்திலே, பனியன் தொழிலாளர்கள் நிறைந்து இருக்கக்கூடிய அந்த நகரத்திலே வீட்டு வாடகை என்பது மிகப் பெரிய பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கின்ற காரணத்தாலே, அந்த பனியன் தொழிலாளர்களுக்கு என்று ஒரு குடியிருப்பை, காலனியை உருவாக்கி, அந்த பனியன் தொழிலாளர்களுக்கு, சாதாரண ஏழை எளிய உழைப்பாளிகளுக்குப் பயன்படக்கூடிய வகையிலே வீட்டு வசதி குடியிருப்பு மனைகளை உருவாக்குவதற்கு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக ஏற்பாடு செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று பனியன் தொழில். இன்றைக்கு உலக அளவிலே இந்தப் பனியன் தொழில் என்பது சிறந்து விளங்கியிருக்கக்கூடிய ஒன்று. திருப்பூர் என்று சொன்னாலே பனியன் என்ற பெயர் நினைவிற்கு வரக்கூடிய அளவிற்கு இன்றைக்கு இந்தியாவிலேயும் சரி, உலக அளவிலேயும் சரி, மிகப் பெரிய அளவுக்கு ஏற்றுமதி வியாபாரத்திலே ஈடுபட்டிருக்கக்கூடிய ஒன்று. அதே போல இந்த பனியன் தொழில் மீது வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத விற்பனை வரி விதிக்கப்பட்டிருக்கிறது. கடந்த காலத்திதிலே 1975 ஆம் ஆண்டு கழக அரசு இருந்த காலத்திலே இந்த வரியை நீக்குவதற்கான முயற்சிகளெல்லாம் எடுக்கப்பட்டு, அன்றைக்கு சமர்ப்பிக்கப்பட இருந்த வரவு செலவு திட்டத்திலேகூட அதை நீக்குவதாக அன்றைய அரசு சொன்னதாக அந்த அமைப்புகளைச் சார்ந்தவர்கள் கூறினார்கள். ஆனால் அன்றைக்கு இடையிலே அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்து அகற்றப்பட்ட

[திரு. சி. கோவிந்தசாமி] [1989 மார்ச் 29

காரணத்தினாலே எடுக்க இயலவில்லை. ஆகவே அதற்குப் பின்னாலே வந்திருக்கின்ற அரசாங்கங்களை தொடர்ந்து அந்த அமைப்புக்களின் சார்பிலே வலியுறுத்தியும்கூட அதிலே கவனம் செலுத்தப்படவில்லை.

கடந்த ஆண்டிலே இருந்த கவர்னர் ஆட்சியிலே 5 சதமாக இருந்த அந்த விற்பனை வரியை 2 சதவீதம் குறைத்து, 3 சதவீதமாக மாற்றப்பட்டிருக்கிறது. ஆகவே அந்த அமைப்பின் சார்பாக அவர்கள் வலியுறுத்துவது அந்த 3 சதவீதத்தையும் எடுத்து விட வேண்டும் என்பதுதான். ஏனென்றால் மேற்கு வங்கத்திலோ அல்லது வேறு பல மாநிலங்களிலோ பனியன் மீது விற்பனை வரி இல்லாதபோது, தமிழ்நாட்டில் மட்டும் இருப்பதால் நாம் மற்ற மாநில மார்க்கெட்டுகளோடு போட்டியிட முடியாத ஒரு நெருக்கடியான நிலைமை இருக்கிறது என்று அவர்கள் வலியுறுத்துகிறார்கள். அதேபோல இன்றைக்கு தயாரிக்கப்பட்டு வரக்கூடிய பனியன்களுக்கு மட்டும்தான் விற்பனை வரி போடப்படுகிறது. ஆனால் பல இலட்சக்கணக்கான ரூபாய்களுக்கு துணியாக ஏற்றுமதி செய்கிறார்கள். அல்லது வேறு மாநிலங்களுக்குக் கொண்டு செல்கிறார்கள். அவைகளுக்கெல்லாம் விற்பனை வரி இல்லை. ஆகவே, அவர்கள் சொல்வது நியாயமாக இருக்குமேயானால் அரசு அதைப் பரிசீலிக்கலாம். நூலின் மீது அந்த வரியைப் போட்டால் துணியாகச் சென்றாலும், பனியனாகச் சென்றாலும் அந்த வரி வருவாய் அரசுக்குக் கிடைக்க வாய்ப்பு இருக்கிற காரணத்தினாலே பனியன் மீது போடப்பட்டிருக்கின்ற விற்பனை வரியை நீக்க வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்துகிறார்கள்.

இந்த அரசாங்கம் அதை 1975-ஆம் ஆண்டிலே கருணையோடு பரிசீலித்து எடுப்பதற்கான முயற்சியிலே ஈடுபட்டபோது இடையிலே ஆட்சி அகற்றப்பட்ட காரணத்தாலே, அது அன்றைக்கு நிறைவேற்றப்படவில்லை என்று கூறுகிறார்கள். ஆகவே மீண்டும் இந்த அரசு வந்திருக்கின்ற காரணத்தினாலே அந்த வரி எடுக்கப்படும் என்று பெரும் நம்பிக்கையோடு அவர்கள் இருக்கிறார்கள். அந்த நம்பிக்கையை நிறைவு செய்யக்கூடிய வகையிலே அந்த விற்பனை வரியை எடுப்பதற்கு இந்த அரசாங்கம் முயற்சி எடுக்க வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல வளர்ந்து வருகிற திருப்பூர் நகரத்திலே சுமார் 56 இடங்களிலே அங்கீகரிக்கப்படாத வீட்டு மனைகள் இருக்கின்றன. நகரத்தினுடைய பெரும் பகுதிகளில் அவை அங்கீகரிக்கப்படாத பகுதிகளாக 10 ஆண்டுகளுக்கு மேல் 25 ஆண்டுகள் வரை இருக்கிற காரணத்தினாலே அங்கே எந்தவிதமான வசதியும் நகராட்சி மூலம் செய்ய முடியாத சூழ்நிலை இருக்கின்றது. சம்பந்தப்பட்ட திருப்பூர் நகராட்சியிலே தீர்மானம் போட்டு, ஏற்கெனவே இருந்த அரசாங்கத்திற்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அதை இந்த அரசாங்கம் பரிசீலித்து அந்தப் பகுதிகளை அங்கீகரித்து, அந்தப் பகுதி மக்களுக்குத் தேவையான காரியங்களைச் செய்வதற்கு உதவி அளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல பஞ்சாலைகள்— ஜின்னிங் பாக்டரிகள், பனியன் பவர் லூம்ஸ், கைத்தறி போன்ற பஞ்சோடு தொடர்பு கொண்டிருக்கக்கூடிய தொழில்கள் நிறைந்திருக்கிற அந்த நகரத்திலே, காசநோய் என்ற வியாதியும் அதிகரித்துக் கொண்டிருக்கிற காரணத்தினாலே, அந்த திருப்பூர் வட்டாரத்திலே ஒரு காசநோய் மருத்துவமனை கட்டுவதற்கான ஏற்பாட்டை இந்த அரசு செய்ய வேண்டும். ஏற்கெனவே அதற்கான இடங்களெல்லாம்கூட பார்க்கப்பட்டும் வேலைகள் முறையாகத் தொடங்கப்படாமல் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே அரசாங்கம் இதில் கவனம் செலுத்தி அந்த மருத்துவமனையை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அதேபோல திருப்பூர் நகரம் ஒருபுறத்திலே தொழில் துறையில் வளர்கிறது. அதன் மூலம் ஏராளமான டையிங் தொழிற்சாலைகள், பிளீச்சிங் பாக்டரிகள் நிறைந்து இருக்கின்ற காரணத்தினாலே, அந்த நகரத்திலே கழிவு நீர் தேங்கி மக்களுடைய குடிநீரையும், அதேபோல விவசாயத்திற்காகப் பயன்படுத்தக்கூடிய நிலத்தடி நீரையும் பாதிக்கக்கூடிய நிலைமை உருவாகியிருக்கிறது. ஆகவே, அரசாங்கம் இதிலே கவனம் எடுத்து அந்த நிலத்தடி நீரை பாதுகாக்கக்கூடிய முயற்சியோடு, அவைகள் சிறு சிறு பாக்டரிகளாக இருக்கிற காரணத்தினாலே அவர்களுக்கு தேவையான கருவிகளை வாங்குவதற்கு அரசாங்கத்தின் மூலம் உதவி செய்து, அந்தத் தண்ணீரை சுத்திகரித்து வெளியே அனுப்பக்கூடிய இயந்திரங்களைப் பயன்படுத்தவும் இந்த அரசாங்கம் உதவி அளித்து அந்தத் தொழிற்சாலைகளையும் பாதுகாக்கவேண்டும். அதன் மூலம் பாதிக்கப்படக்கூடிய நிலத்தடி நீரிலிருந்து அந்த மக்களையும் பாதுகாப்பதற்கு உரிய முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த அரசை மிகப் பணிவோடு கேட்டுக் கொண்டு, இந்த அவையிலே என்னுடைய கருத்தைச் சொல்வதற்கு நல்வாய்ப்பைத் தந்த அவைத் தலைவருக்கு நன்றி கூறி அமர்கிறேன். வணக்கம்.

(நண்பகல் 12-00)

*திரு. வ. முல்லைவேந்தன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

'' தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று ''

எனும் தேந்தமிழ்க் கவிஞனுடைய திருமறைக்கொப்ப தோன்றி அல்லலுறும் மக்களின் இன்னலைக் களைய, ஆருயிரைப் பணயம் வைத்து எல்லையில்லாப் புகழ் சேர்த்து வையத்து

நாடனைத்தும் வாழ்வாங்கு வாழ்கின்ற தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் அன்புருவாய் தமிழ் கூறும் நல்லுலகத்தின் தமிழே உருவான தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களால் அளிக்கப்பட்ட நல்லாதரவோடு மொரப்பூர் தொகுதியினுடைய வாக்காளர்களால், அந்தத் தொகுதியிலே இருக்கிற அறிவு ஜீவிகளாலே தேர்ந்தெடுக்கப்பட்ட நான் இந்த மாமன்றத்திலே பேசுகின்ற பெருவாய்ப்பைப் பெற்றமைக்காக முதலிலே இந்த மாமன்றத்தின் சார்பாக அவர்களுக்கெல்லாம் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

13 ஆண்டுகால இடைவெளிக்குப் பிறகு தமிழ் ஆய்ந்த தமிழ்ப் பெருமகனால் தமிழகம் தலை நிமிர்ந்து வாழ்வதற்காக இங்கே அளிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையினை தமிழ் ஆய்ந்த தமிழ்க்குடிமகனுடைய அனுமதியோடு நாடும் ஏடும் போற்றத் தக்க அளவுக்கு அளிக்கப்பட்ட இந்த நிதிநிலை அறிக்கையினை பண்பார்ந்த தமிழர்களெல்லாம் பாராட்டுகின்ற இந்த நேரத்தில் பாராளும் பண்பாளரும் இம்மாமன்றத்தில் உள்ள பண்பாளர்களும் பாராட்டுகின்ற இந்த நிதி நிலை அறிக்கையினை நான் மொரப்பூர் தொகுதி மக்களின் சார்பாகப் பாராட்டுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு தமிழக அரசு, தலைவர் கலைஞர் அவர்களுடைய தலைமையில் தமிழ் மொழி வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் தருகின்ற வகையில் தமிழ் மையங்களை உருவாக்கிடவும், தமிழ் வளர்ச்சிக்காக தனியாக ஒரு துறையை உருவாக்கி, அதற்கென நிதிநிலையை உருவாக்கி, தமிழ் மேம்பாட்டினைச் சிறப்புறச் செய்வதற்காக நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, கல்வித் துறையில்,

'' அன்ன சத்திரம் ஆயிரம் கட்டல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் ''

என்ற பாரதியின் கனவுகளுக்கு உயிரோட்டம் தருகின்ற வகையில் கல்விக்கென 900 கோடி ரூபாயை ஒதுக்கி 13 ஆண்டுகாலமாக கவனிப்பாரற்றுக் கிடந்த துவக்கப் பள்ளிகளை சீர்படுத்திடவும், கட்டிடம் இல்லாமல் இருக்கின்ற மேல்நிலைப் பள்ளிகளுக்கு கட்டிடங்களை வழங்கிடவும், தனியார் கல்லூரிகளிலே நடைபெறுகிற மோசடிகளைத் தடுத்து அவற்றிற்கு அனுமதி மறுக்கிற வகையில் உருவாக்கப்பட்ட இந்தக் கல்வி நிதிநிலை அறிக்கை படித்தவர்கள் உயர்ந்திடவும், கல்வி அறிவைப் பெருக்கிடவும் சிறப்பான ஒரு திட்டமாக இருக்கிறது என்பதைச் சொல்லுகின்ற அதே நேரத்தில், குறிப்பாக மொரப்பூர் தொகுதியில் கலைஞர் முதலமைச்சராக இருந்த நேரத்திலே, கல்விக்கூடங்களுக்கென முன்வைப்புத் தொகை கட்டப்பட்ட மேல்நிலைப் பள்ளிகள் உருவாக்கப்பட வேண்டும். உயர்நிலைப் பள்ளிகள் உருவாக்கப்பட

1989 மார்ச் 29] [திரு. வ. முல்லைவேந்தன்]

வேண்டும் என்று சொல்லி துறிஞ்சிப்பட்டியிலேயும் கடத்தூரிலும் இருக்கின்ற உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றப்படவும், தொட்டம்பட்டியிலேயும், தொங்கனூரிலும் உயர்நிலைப் பள்ளிகள் உருவாக்கப்படவும் வேண்டும் என்று அரசை பலமுறை கேட்டும் நிறைவேற்றப்படாமல் இருக்கிற அந்தக் கோரிக்கைகள் நிறைவேற்றப்படவும், வறுமையிலே வாடு கின்ற அந்தப் பகுதி மக்கள் 5 மைல், 6 மைல் நடந்து சென்று படிக்க முடியாத சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால், பள்ளி யில்லா ஊர்களே இல்லாத நிலையை உருவாக்கிட வேண்டும் எனவும் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக கலைஞர் காலத்திலே தர்மபுரியிலேயும், கிருஷ்ண கிரியிலேயும் கலைக் கல்லூரிகள் உருவாக்கப்பட்டு 10 தொகுதி களைக் கொண்டிருக்கின்ற அந்த மாபெரும் மாவட்டத்தில் இதுவரையிலும் அரூர் பகுதியிலேயே கல்லூரிகள் இல்லை என்கிற நிலைமை இருப்பது வேதனைக்குரிய ஒன்றாகும். மிக அதிகமாக படித்தவர்கள் இருக்கின்ற அந்தப் பகுதியில், அரூரிலே ஒரு கலைக் கல்லூரியை உருவாக்குவதற்கான முயற்சியிலே கல்வித் துறை ஈடுபட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் குடிநீர்ப் பிரச்சினை என்பது தர்மபுரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இந்தியத் துணைக் கண்டத் திலே முதலிடம் வகிக்கின்ற அளவுக்கு ஒரு வெறுமையான பாலை வனமாக மாறியிருக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. குறிப்பாக என்னுடைய தொகுதியில் மதியம் இரண்டு மணியளவில் 200, 300 பெண்கள் விவசாயம் செய்கின்ற கிணறுகளுக்குப் போய் தண்ணீருக்காகக் காத்துக் கிடக்கின்ற கொடுமையான நிலைமை. அந்த நிலைமைகளை மாற்றுகின்ற வகையில் வெகு வேகமாக குடிநீர்த் திட்டத்தை அங்கு உருவாக்கிடவும், அதே நேரத்தில் ஆழ் துளைக் கிணறுகள் மூலமும், சிறிய நீர்ப்பாசனங்கள் மூலமும் தண்ணீர் வசதியைப் பெருக்கித் தந்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, எலவடை, நவலை, பெருமாலன்னப்பட்டி போன்ற பகுதிகளிலும் கடத்தூர், பொம்முடி, போன்ற பேரூராட்சிகளும் மிகக் கொடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கின்ற நிலை மைகளை வெகு விரைவிலே சீர்திருத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, அந்த மாவட்டத்தில் இருக் கின்ற ஒகேனக்கல் குடிநீர்த் திட்டம் 100 கோடி ரூபாய் செலவு என்று சொன்னாலும்கூட அந்த மாவட்டம் முழுவதும் இருக் கின்ற மக்களுடைய குடிநீர்ப் பிரச்சினையைப் போக்கக்கூடிய ஒரு வரப்பிரசாதமாக அமையும். எனவே, அந்தத் திட்டத்தை அரசு விரைவிலே ஏற்று, பணச் செலவைக் கருத்திலே கொள் ளாமல் அதன் மூலம் அந்த மாவட்டத்து மக்களுக்கெல்லாம்

குடிநீர் வழங்கிட வேண்டுமென்றும், குடிநீர் வழங்குகின்ற அந்த நேரத்தில், ஆங்காங்கு இருக்கின்ற கால்நடைகளுக்கும் குடிநீர்த் தொட்டிகளை உருவாக்கித் தந்திட வேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

'பாலின்றி பிள்ளை அழ
பட்டினியால் தாய் அழ
வேலையின்றி நாம் அழ
வீடு முச்சூடும் அழக்கூடாது'

என்று சொன்ன ஜீவாவினுடைய பாடலுக்கொப்ப தொழில் துறைக்கு முக்கியத்துவம் தந்து தொழிலாளர்கள் வேலை வாய்ப்பினைப் பெற்றிடவும், மூடிக் கிடக்கின்ற 17 நூற்பாலைகளையும், 4 பொறியியல் ஆலைகளையும் திறப்பதற்கான முயற்சியில் அரசு ஈடுபட்டு, அதிலே 3 திறந்திருப்பதற்காகப் பாராட்டுவதோடு, இருக்கிற எஞ்சிய ஆலைகளையும் விரைவிலே திறந்திட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றேன். குறிப்பாக, என்னுடைய தொகுதியில் பெருந் தலைவர் காமராஜருடைய காலத்திலே அங்கே ஒரு கூட்டுறவுத் தொழிற்சாலைக்குப் பதிலாக 'தர்மபுரி ஸ்டீல் பிளான்ட்' என்ற ஒரு தொழிற்சாலை உருவாக்கப்பட்டு பல பெயர் மாற்றங்களைப் பெற்று, 'தர்மபுரி ஸ்டீல் கேஸ்டிங்ஸ்' என்ற பெயராலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கலைஞர் அவர்களுடைய காலத்திலே மறுவாழ்வு அளிக்கப்பட்டு, அது தேசியமயமாக்கப் படும் என்று 1976இலே சட்டம் இயற்றப்பட்டு, அது நாடாளு மன்றத்திலே நிறைவேற்றப்படாமல் போன காரணத்தால் அந்தத் தொழில் எம்.ஜி.ஆர். காலத்தில் ஓரளவிற்கு உயிரோட்டம் பெற்று மீண்டும் 1983 ஆம் ஆண்டு அது மூடப்பட்டு, இன்று வரை அது மூடிக் கிடக்கிறது. அதனால் 300 குடும்பங்கள் பட்டினியாலே வாடிக்கொண்டிருக்கின்றன. அந்த 300 குடும்பங்களுக்கு மறுவாழ்வு அளிக்கிறவகையிலே அந்தத் தொழிற்சாலையை அரசு ஏற்று, அந்தக் குடும்பங்களுக்கு மறுவாழ்வு அளிக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

குறிப்பாக, விவசாயிகள் என்பவர்கள் அனாதைகளாக்கப் பட்டு, குறிப்பாக வானம் பார்த்த பகுதியை நம்பி வாழ்கிற விவசாயப் பெருங்குடி மக்கள், விவசாயம் செய்யாமல் வறட்சியாலே வாடிக் கிடக்கிற நிலைமையில் அந்த மாவட்டத்து மக்கள் வறட்சி வருகிற நேரத்திலேயெல்லாம் பக்கத்திலே இருக்கிற கர்நாடகாவிற்கு வேலை தேடிப்போவதும் கால்நடைகளை எல்லாம் அடிமாடுகளாக கேரளாவிற்கு விற்று விடுகின்ற ஒரு சூழ்நிலை இருப்பதை மாற்றுவதற்கு-என்னுடைய தொகுதியிலே தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில்

1989 மார்ச் 29] [திரு. வ முல்லைவேந்தன்]

பொதியன்பள்ளம் என்ற அணைக்கட்டுத் திட்டம் ஆரம்பிக்கப் பட்டு, அந்த ஆட்சி கவிழ்க்கப்பட்ட காரணத்தால் கிடப்பிலே போடப்பட்டு விட்டது. அருந்தமிழ் வளர்த்த ஔவைக்கு நெல் லிக்கனி தந்தவரே, அதியமான் என்று சொல்வார்கள். அந்த அதியமான் கூட அந்த நெல்லிக்கனியை 'மூக்கனூர்' என்ற மலை யடிவாரத்திலே தான் பெற்றான். அந்த மலையடிவாரத்திலே தான் 'பொதியன்பள்ளம்' என்ற அணை கட்டுகிற திட்டம் இருக்கிறது. எனவே, தலைவர் கலைஞர் அவர்கள் இந்த ஆண்டே அந்த பொதியன்பள்ளம் அணை கட்டும் திட்டத்தை நிறைவேற்றி, அந்தப் பகுதியிலே ஒரு இருபது ஏரிகளுக்கு தண்ணீர் செல்கிற நிலைமையை உருவாக்கி, அந்தப் பகுதி குடி தண்ணீர்ப் பஞ்சத்தையும், விவசாயப் பெருங்குடி மக்களுக்கான பாசன நீர்ப் பஞ்சத்தையும் போக்க வேண்டும் என்று கேட்டுக்கொள் வதோடு, 10, 12 ஆண்டுக் காலம் அச்சம்பட்டி என்ற இடத்திலே ஏரி கட்டப்படும், கட்டப்படும் என்று சொல்லி, இதுவரையிலே திட்டம் தீட்டப்படாமல், முழுமை பெறாமல் இருக்கிறது. எனவே, அந்தத் திட்டத்தினை நிறைவேற்ற வேண்டும் என்ப தோடு, வேப்பாடியாறு அணைக்கட்டுத் திட்டம் கட்டப்பட்டால் அந்தத் தொகுதியிலே முழுமையாக வறட்சியை நீக்குவதற்கான வாய்ப்புக்கள் உருவாகும் என்பதையும் இந்த நேரத்திலே தெரி வித்துக் கொள்கிறேன்.

அங்கே இருக்கிற வாணியாற்றிலேயிருந்து, ஈச்சம்பாடி அணைக்கட்டு திட்டம் இருந்தாலும், தண்ணீர் முறைப்படுத்தி விடப்படாமல் அதிகாரிகளுடைய விருப்பம்போல் எல்லாம் தண்ணீர் விடப்படுகிறது. முறைகேடுகள் எல்லாம் நடைபெறு கின்றன.அவற்றையெல்லாம் நீக்கி முறையான வகையில் தண்ணீர் விடுவதற்காகவும், அந்த அணைக்கட்டுகள் முழுமை பெறாத நிலைமையில், இன்னும் கட்டி முடிக்கப்படாத நிலையில் இருக் கிற காரணத்தால், முழுமை பெறாத வேலைகளை விரைவிலே முழுமை பெறச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, மொரப்பூர் தொகுதியைப் பொறுத்தவரையிலே, ஏராளமான கரும்பு உற்பத்தியாகின்றது. அங்கே ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலை உருவாக்கப்பட வேண்டும் என்று 1987-லே அரசு அறிவித்தாலும், இதுவரையிலே அந்த ஆலைக்கான வேலை கள் ஆரம்பிக்கப்படவில்லை. எனவே, அந்த ஆலையை விரை விலே உருவாக்குவதற்கான முயற்சிகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்து, அந்த ஆலைக்கான பகுதிகள் சேலம் வரை யிலே, சூரமங்கலம் வரையிலே இருக்கிற பகுதிகள் சேர்க்கின்ற காரணத்தால், புதிதாக உருவாகின்ற அந்தக் கூட்டுறவு சர்க்கரை ஆலையை மொரப்பூர் தொகுதியினுடைய எல்லைக்குள்ளே அதிகாரப்பட்டியோ, புதுப்பட்டியோ, மோலையானரோ ஏதோ ஒரு இடத்திலே ஆரம்பித்து அந்தக் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு நாடு வாழவும், மொழி வாழவும் தன்னை அர்ப் பணித்து நாட்டுக்குள்ளேயும், ஏட்டுக்குள்ளேயும் நீக்கமற

நிறைந்துவிட்ட எனது உயிரினும் இனிய தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களை இந்த மண்ணுக்குத் தந்த 'அன்னை அஞ்சுகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை' என்று பெயர் சூட்டவேண்டும் என்று இந்த மாமன்றத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதே நேரத்தில், தர்மபுரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், வறட்சியாலே வாடிக் கொண்டிருக்கிற அந்த மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்து அந்த மாவட்டத்திலிருக்கிற வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கும், படித்த பட்டதாரிகளுக்குச் சிறப்பான முறையிலே வேலை வாய்ப்பினைத் தருகின்ற திட்டங்களையெல்லாம் உருவாக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

குறிப்பாக, மொரப்பூர் தொகுதியில் மூன்று இடங்களில் செங்குட்டை என்ற இடத்திலேயும், மங்களகிரிக்காடு என்ற இடத்திலேயும், அம்மாபாளையம் என்ற இடத்திலேயும், 300 ஏக்கர், 300 ஏக்கர் என்ற அளவிற்கு வெறுமனே தரிசாக நிலங்கள் கிடக்கின்றன. கால்நடைப் பராமரிப்புத் துறையின் மூலமாக ஆடு வளர்க்கின்ற திட்டத்தை மூன்று பகுதிகளில் ஏதேனும் ஒரு இடத்திலோ அல்லது இரண்டு இடங்களிலோ ஆரம்பித்து, அந்த ஆட்டுப் பண்ணை வளர்ச்சியின் மூலம் அந்தப் பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பினைப் பெருக்கித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 12-10)

கல்வித்துறையைப் பொறுத்தவரையில், பல்கலைக் கழக மானியக் குழுவின் அறிவிப்பின்படி பல்கலைக் கழகத்திலே இருக்கிற ஆசிரியர்களுக்கு எல்லாம் ஊதிய உயர்வு வழங்கப்பட்டிருக்கிறது. அதேபோல் தமிழ்நாடு அரசு ஊக்க ஊதியம் பெறும் ஆராய்ச்சி மாணவர்களுக்கும் பல்கலைக் கழக மானியக் குழு வழங்கும் ஊக்க ஊதியத்தின் அடிப்படையில் ஊக்க ஊதியத்தை வழங்கினால் ஆராய்ச்சி மாணவர்கள் பெரிதும் விரும்பிப் படிப்பதற்கும், அவர்கள் ஆராய்ச்சியிலே சிறப்பாக ஈடுபடுவதற்கும் வாய்ப்பாக இருக்கும் என்று சொல்லி, கோட்டையிலே நான் இருந்தாலும், தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் என் நெஞ்சிலே குடியிருப்பார்கள் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். அவர்களுடைய எண்ணத்தை ஈடேற்றுகிற வகையில் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கும் கூடிய விரைவிலே, இந்த ஆண்டு இல்லாவிட்டாலுங் கூட, வெகு விரைவிலே ஊதிய உயர்வை அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிற அதேநேரத்தில், துவக்கப் பள்ளியில் பணியாற்றுகின்ற நடத்தாட்டிகள் கலைருடைய ஆட்சிக்காலத்தில் வேலை வாய்ப்பைப் பெற்றவர்கள் இன்னும் 75 ரூபாய், 100 ரூபாய் சம்பளத்தில் தான் வேலை

செய்துகொண்டு இருக்கிறார்கள். அவர்களுடைய அவல நிலையைப் போக்குவதற்கு, அந்த நடத்தாட்டிகளுக்கு எல்லாம் ஊதிய உயர்வினை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதேபோல், மருத்துவத் துறையைப் பொறுத்தவரையில், என்னுடைய தொகுதியில் கடத்தூர் என்ற இடத்தில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கிறது. அந்தப் பகுதியில் 50 ஆயிரத் திற்கும் மேற்பட்ட மக்கள் வாழ்கிறார்கள். அவர்களுக்கு ஒரு சிறிய காயம் என்றால் கூட 30 மைல் 40 மைல் தூரத்தில் உள்ள தர்மபுரிக்குப் போய்த் தான் சிகிச்சை பெறவேண்டும். ஆகவே, அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை அப்கிரேடு செய்து மருத்துவ மனையாக விரைவில் மாற்றி, அந்தப் பகுதியில் வைத்திய வசதியைப் பெருக்கித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் எங்களுடைய பகுதியில் உள்ள பல மருத்துவ மனைகளில் டாக்டர்கள் இல்லாமல் இருக்கிறார்கள். வெகு விரைவில் அந்தப் பகுதியில் உள்ள மருத்துவமனைகளுக்கு டாக்டர்களை நியமித்து அந்தப் பகுதியில் இருக்கிறவர்கள் மருத்துவ வசதியை எந்த நேரமும் பெறுவதற்கு வாய்ப்புகளை உருவாக்கித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

வேளாண்மையை மேலாண்மையாகக் கருதி திருச்சியில் ஒரு விவசாயக் கல்லூரியை துவங்க இருக்கும் இந்தப் பேரரசை நான் பாராட்டுவதோடு, அந்தக் கல்லூரியைத் துவங்குகின்ற நேரத்தில் விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு அதிலே முன்னுரிமை தருகிற வகையில் அவர்கள் படிப்பதற்கு வாய்ப்பு களை உருவாக்கித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த 10,15ஆண்டு காலமாக மின் இணைப்பு வேண்டுமென்று சொல்லி ஏராளமான விவசாயிகள் மின் இணைப்பு மனுக்களை போட்டுவிட்டு 10, 15 ஆண்டு காலமாக 'இலவுகாத்த கிளிகளைப் போல், இன்னமும் வாடிக்கொண்டு இருக்கிறார்கள். வேளாண் மையை பெருக்கவேண்டும் என்று சொல்லப்படுகிற இந்த நேரத் தில் கூடிய விரைவில் அதற்கு முன்னுரிமை தந்து, எல்லா விவசாய பம்புசெட்டுகளுக்கும் மின் இணைப்பு தருகின்ற ஒரு திட்டத்தை இந்த அரசு மேற்கொள்ளுமானால் விவசாயம் பெருகுவதற்கும், வெகு விரைவில் விவசாயத்தில் முன்னேற்றத்தைக் காண்பதற் கும் வாய்ப்புகள் உருவாகும். ஆகவே, அதைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. வ. முல்லைவேந்தன்] [1989 மார்ச் 29

விவசாய பெருமக்களுடைய சார்பாக 3 குதிரை, 5 குதிரை வேகம் உள்ள மின் இணைப்புகளுக்கு எல்லாம் வரி விலக்கு அளித்திருப்பதற்கு நான் மனமாரப் பாராட்டுகிறேன். சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களின் மூலம் வேளாண்மையை பெருக்கப் முடியும் என்பதைக் கவனத்தில் கொண்டு நம்முடைய அரசு அந்த சிறு பாசனத்திற்கு முன்னுரிமை தந்து விவசாய வளம் பெருகுவதற்கான வாய்ப்பினை உருவாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் அறநிலையத் துறையைப் பொறுத்தவரையில் ஏராளமான கோவில்கள் இருக்கின்றன. சில கோவில்களில் தர்மகர்த்தா என்ற பெயரில் 13 ஆண்டு காலமாக அந்த கோவில்கள் எல்லாம் கொள்ளைக்காரர்களின் கூடாரமாக மாற்றப்பட்டு அரசுக்கு வரவேண்டிய நிதி எல்லாம் ஒரு பக்கத்தில் வீண் விரயம் ஆகிக்கொண்டிருக்கிறது. அந்த நிலையினை மாற்றுவதற்கு தீர்த்தமலை போன்ற மிகப்பெரிய கோவில்கள் இருக்கின்ற இடத்தில் ஒரு சுற்றுலா மையத்தை உருவாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் மொரப்பூருக்குப் பக்கத்தில் உள்ள சிங்காரவேல் முனியப்பன் என்ற கோவில் ஒன்று இருக்கிறது. அதிலே ஆண்டு ஒன்றுக்கு லட்சத்திற்கு மேற்பட்ட ரூபாய் வருமானம் வந்தாலும் கூட, அங்கே இருக்கின்ற அதிகாரிகள் அதை 5 ஆயிரம் ரூபாய்க்கு மேல் கணக்குக் காட்டாமல் கொள்ளை அடித்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த நிலையை எல்லாம் மாற்றி தமிழகத்தில் எங்கெங்கே வருமானம் வரக்கூடிய கோவில்கள் இருக்கின்றனவோ அந்தக் கோவில்களை எல்லாம் இந்த அரசு ஏற்று நடத்தவேண்டும். அவ்வாறு ஏற்று நடத்துகின்ற நேரத்தில் முறையான நிர்வாக அமைப்பை உருவாக்குவதன் மூலம் ஏராளமான வருமானத்தை இந்த அரசு பெற வாய்ப்பு இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனது தொகுதியில் இருக்கிற சித்தேரி, மலைவாழ் மக்கள் வாழ்கின்ற பகுதி. மலைவாழ் மக்களுக்கு குறைந்த விலையில் அரிசி போடவேண்டும் என்று திட்டம் இருந்தாலும் கூட, ரேஷன் கார்டுக்கு என்று ஒதுக்கப்படுகின்ற அரிசியில் 50 சதவீத அரிசி தான் அங்கே போய்ச் சேருகிறது. அதை முழுமையாக வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதைத் தனி ஒன்றியமாக ஆக்கவேண்டும் என்ற திட்டம் அரசினுடைய கிடப்பில் இருக்கிறது. அதை வெகு விரைவாக, திட்டமாக மாற்றுவதற்குரிய முயற்சியில் ஈடுபடவேண்டும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த 13 ஆண்டு காலமாக எங்கள் தொகுதியில் இருக்கின்ற ஊராட்சி மன்றங்களின் சாலைகள் ஆனாலும் சரி, ஒன்றிய நெடுஞ்சாலைகள் ஆனாலும் சரி கேட்பாரற்றுக் காட்சி அளிக்கின்றன. எந்தச் சாலைகளிலும் வெகு விரைவில் போய் வர

முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதை மாற்றி அந்த பழுதுபட்ட சாலைகளை வெகு விரைவில் மாற்றுவதற்கு வேண்டிய முயற்சியில் ஈடுபடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக கதிர்புரம், தொட்டம்பட்டி, வெங்கடசமுத்திரம், மேனசி, விதநத்தம், ஆலாபுரம், புதுவெட்டியூர் போன்ற பகுதி களில் இருக்கின்ற சாலைகள் எல்லாம் மிகக் கொடுமையான சாலைகளாக, சொல்லமுடியாத அளவுக்கு அந்தச் சாலைகள் எல்லாம் இருக்கின்றன. ஆகவே இவைகளை எல்லாம் மாற்றி நல்ல தரம் உள்ள சாலைகளாக உருவாக்கித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் சேலம் மாவட்டத்தையும் தர்மபுரி மாவட்டத் தையும் இணைக்கின்ற இடமான பொம்முடிக்கு பக்கத்தில், பொம் முடிக்கும் ராமமூர்த்தி நகருக்கும் மத்தியில் இருக்கின்ற சாலை நாடு சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து அந்தப் பகுதி மக்களால் கேட்கப்பட்டு, இதுவரையில் நிறைவேற்றப்படாமல் இருக்கிற அந்த இணைப்புச் சாலையை உருவாக்கி அங்கே ஒரு பாலத்தைக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் ''மாட மாளிகைக்கு அருகே மண் குடிசை இருக்கக்கூடாது; மந்தகாச வாழ்வுக்கு அருகே மண் புழுக்கள் உலவக் கூடாது; சோம்பேறி சீமான்கள் ஒருபுறமும், அனா தைக் குழந்தைகள் ஒருபுறமும் சேர்ந்து விடக்கூடாது'' அதற் குப் பெயர் தான் சமதர்மம் என்று நமது பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். அந்த லட்சியத்தை நிறைவேற்று கின்ற வகையில் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டி மாட மாளிகைகளில் மக்கள் வாழ்கின்ற வகையில் திட்டத்தினை நிறைவேற்றுகின்ற இந்த அரசினைப் பாராட்டு கிறேன். கிராமப் பகுதிகளிலே இருக்கிற காலனி வீடுகளை விரைவாகக் கட்டவும், அதே நேரத்திலே 'தாட்கோ' என்று சொன்னால். என்னவென்று தெரியாத அளவுக்கு 13 ஆண்டு காலமாக அதிகாரிகளும், சில ஏஜெண்டுகளும் பங்குபோடுகிற ஒரு கொள்ளை கூடாரமாக இருந்திருக்கிறது. ஆகவே 'தாட்கோ' மூலமாக வீடுகள் கட்டப்படுகிறபோது முறையாகக் கட்டப் படுவதற்கும், அதே நேரத்தில் கட்டிய வீடுகளை திரும்பத் திரும்ப காட்டாமல் எல்லா இடங்களிலும் வீடு கட்டுகின்ற ஒரு திட்டத்தினை நிறைவேற்றவேண்டுமென்றும், மொரப்பூர் தொகுதியைப் பொறுத்தவரையில் நாடு சுதந்திரம் பெற்று இந்த நாள் வரையில் வீட்டுமனைப் பட்டா இல்லாத இடங் களும் அதே நேரத்தில் காலனி வீடுகள் இல்லாத இடங்களும் ஏராளமாக இருக்கின்றன. அந்தக் குறைகளோடு இதையெல் லாம் நீக்கி இந்த ஆட்சியினுடைய காலத்தில் வீடுகளைக் கட்டித் தரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. வி. முல்லைவேந்தன்] [1989 மார்ச் 29

அதே நேரத்தில், மாவட்ட தொழில் மையத்தின் மூலம் கடந்த ஆட்சியாளர்களால் சிறுசிறு தீப்பெட்டித் தொழிற்சாலைகள் கட்டப்பட்டு அவைகளெல்லாம் இன்றைய தினம் கேட்பாரற்றுக் கிடக்கின்றன. எனது தொகுதியில் 125 தீப்பெட்டித் தொழிற்சாலைகள் கட்டப்பட்டு அவர்களெல்லாம் கடனாளிகளாக மாற்றப்பட்டு அந்த இடங்களெல்லாம் இப்போது வெறுமனே இருக்கின்றன. அந்தத் தொழிற்சாலைகளையெல்லாம் உருவாக்கி அந்தத் தொழிற்சாலைகளுக்கு மறுவாழ்வு தருகின்ற வகையில் ஒரு நல்ல வாய்ப்பை உருவாக்கித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

பெண்ணின் பெருமையைப் பேசிக்கொண்டிருக்கிற இந்த நேரத்தில் 'கற்பு' என்று வந்தால் இருவருக்கும் பொதுவில் வைப்போம் என்றுதான் பாரதி சொன்னான். ஆனால் நம்மையெல்லாம் வளர்த்து ஆளாக்கிக் கொண்டிருக்கிற நமது தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் 'சொத்து' என்று வந்தாலும் இருவருக்கும் பொதுவில் வைப்போம் என்ற ஒரு புனிதமான திட்டத்தினை அறிவித்து இருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஆற்றல்மிக்க தலைவரை நான் என் நெஞ்சாரப் பாராட்டி நாம் அத்தனைபேரும் ஒட்டுமொத்தமாக இந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்டுகின்ற இந்த நேரத்தில் நல்ல திட்டங்களுக்கு உறுதுணையாக இருந்து திட்டங்கள் நிறைவேறிட முழுமையான ஒத்துழைப்புத் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன், வணக்கம்.

* திரு டி. சி விஜயேந்திரையா : மதிப்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்திருக்கிற 1989-90 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை ஏழை மக்களுக்கும் பாட்டாளி மக்களுக்கும் மிகவும் மகிழ்ச்சிகரமாகவும் உபயோககரமாகவும் உள்ளது. இந்த பட்ஜெட்டில் எல்லாச் சலுகைகளும் கொடுத்து இருக்கிறார்கள். ஆனால் பெட்ரோல் விலை ஏறியிருப்பதால் லட்சக்கணக்கான இரண்டு சக்கர வண்டிகள் ஓட்டும் மத்தியதர மக்களுக்கு பாதிப்பு ஏற்பட்டிருப்பதை தவிர்க்க ஏதாவது வழி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தளி தொகுதி மிகவும் வறட்சியான பகுதிகளைக் கொண்டதாகும். அங்கேயுள்ள விவசாயிகளுடைய வேலை முக்கியமாக ஆடுமாடுகள் வளர்த்தல், வயலில் கூலி வேலைகள் செய்வதுதான். அவர்களுக்கு அங்கே போதுமான நீர்ப்பாசன வசதி கிடையாது. அப்படி இருக்க அங்கே ஆழ்துளைக் கிணறுகளை அதிகப்படுத்த, அதிகமான பணத்தை ஒதுக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

1989 மார்ச் 29] [திரு. டி. சி. விஜயேந்திரையா]

மேலும், விவசாய பம்புசெட்டுகளுக்கு மின்சாரம் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இப்போது பட்டு வளர்ப்புத் தொழிலில் அங்கே அநேகமான பேர் ஈடுபட்டு இருப்பதால் அவர்களுக்கு தண்ணீர் கிடைப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும். இது மழையையே நம்பியிருக்கும் இடமாக இருப்பதால் தற்போது அவர்களுக்கு ஆழ்துளைக் கிணறுகளைப் போட்டு, மின்சாரம் கொடுப்பதற்கும் ஏற்பாடுகள் செய்ய வேண்டும். அதற்கான சட்ட திட்டங்களை விதிகளை மாற்றி, தற்போது கர்நாடகத்தில் பம்பு செட் கேட்டவுடனே 15 நாட்களுக்குள் அமைத்து கொடுத்து விடுகிறது போல் அவர்களுக்கும் வசதி செய்து தர வேண்டும்.

(பிற்பகல் 12-20)

அதைப்போன்று நமது தமிழ்நாட்டிலும் அந்த உரிமையைக், கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்படிக் கொடுக்கப்பட்டால் தருமபுரி மாவட்டத்தில் விவசாயம் பெருகும். பட்டுப் பூச்சி வளர்ப்பும் ஜாஸ்தியாகும். பட்டுப்பூச்சி வளர்ப்பு ஹோசூரிலும், தேன்கனிக்கோட்டையிலும் அதிகமாக இருக்கிறது. அந்தப் பகுதியில் உள்ளவர்களுக்கு இந்தமாதிரி ஆழ்துளைக் கிணறுகள் வெட்டி, பம்பு செட்டுகள் வைத்துக்கொள்ள உதவி செய்தால் அவர்கள் இன்னும் அதிகமான அளவுக்கு நிலங்களில் சாகுபடி செய்ய முடியும்.

தேன்கனிக்கோட்டை வட்டாரம், அஞ்சட்டிப் பகுதியிலே தொட்டள்ள அணைக்கட்டு ஒன்றுக்கு வேலை தொடங்கி, அதைக் கட்டாமலே காலம் கடத்தி வருகிறார்கள். அந்த அணைக் கட்டுத் திட்டத்திற்காக அந்தப் பகுதி மக்கள் எவ்வளவோ முயற்சி செய்தும் முடியவில்லை. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் 'ரிவைஸ்ட் எஸ்டிமேட்' போட வேண்டுமென்று சொல்லி காலம் கழித்து வருகிறார்கள். அந்த அணையைக் கட்டிக்கொடுத்தால் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தில் சாகுபடி செய்ய இயலும்.

மேலும் தேன்கனிக்கோட்டையிலிருந்து 5 கிலோ மீட்டர் தூரத்தில் கொரடகெளரா என்ற ஊரில் ஒரு அணை கட்ட முந்தைய அரசு ஆய்வு செய்து வந்தது. தற்போது அந்த வேலை அப்படியே நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள நிதி நிலைமை சரியாக இல்லை என்றாலும் தேன்கனிக்கோட்டை வட்டாரம் மிகவும் பின்தங்கிய பகுதியாக இருப்பதால், பாசன வசதி இல்லாத பகுதியாக இருப்பதால் அதற்கு முன்னுரிமை கொடுத்து, கட்டிக்கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் சுமார் 10, 15 ஆண்டுகளுக்குமுன் சிறு நீர்ப்பாசனத் திற்காக அஞ்சட்டிப் பகுதியில் பளை என்ற இடத்திலும் தேன் கனிக்கோட்டைப் பகுதியில் குந்துகோட்ட என்ற இடத்திலும் அந்தேவனஹல்லி என்ற இடத்திலும் ஏரிகள் கட்டியிருக்கிறார்கள்

அவற்றின் கரைகளில் சுமார் மூன்று அடிக்கு மேல் மணல் மேடிட்டு அந்த ஏரிகளில் தண்ணீர் பெருகாமல் காலியாக இருக்கின்றன. அதுபற்றி அதிகாரிகளிடம் தெரிவித்தும் பலன் இல்லை. ஆகையால் அந்த மணல் மேடுகளை அப்புறப்படுத்தி, தண்ணீர் பெருக வேலை தொடங்குவதற்கு உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தளி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து, அஞ்செட்டி மற்றும் பெட்டமுகளாளம் பகுதிகளை ஒன்றாகச் சேர்த்து அங்கே குடியிருக்கும் மலைவாழ் மக்களையும், தாழ்த்தப்பட்ட மக்களையும் (எஸ்.சி. மற்றும் எஸ்.டி.) ஒன்று சேர்த்து, அவர்களின் மேம்பாட்டிற்காக தளி 'ட்ரைபல் பிளாக்' ஒன்றை ஏற்படுத்த வேண்டும். இது ஏற்கெனவே அரசின் ஆய்வில் உள்ளது.

தளி யூனியன் 50 பஞ்சாயத்துக்களைக் கொண்டதாக இருக்கிறது. ஹோசூர் பகுதியில் 'சிப்காட்' அமைக்கப்பட்டுள்ளதைப் போல தேன்கனிக்கோட்டையிலும் ஒரு 'சிப்காட்' அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தேன்கனிக்கோட்டை வட்டாரம் வறட்சியால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. பொதுவாக தருமபுரி மாவட்டம் முழுவதும் வறட்சியாக இருப்பதால், அதை வறட்சிப் பகுதி என்று அறிவித்து, அதற்கு தகுந்த சலுகைகளைக் கொடுத்து, பஞ்சநிவாரண பணிகளை அதிகமாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது மட்டுமல்லாமல் ஆடுமாடுகள் தண்ணீர் குடிக்க அந்தப் பகுதியிலுள்ள ஏரிகளில் 'பாண்ட்ஸ்' வெட்டித் தரவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். அதற்குப் போதுமான நிதி ஒதுக்கீடு செய்து, உடனடியாக வேலையைத் தொடங்க வேண்டும்.

தேன்கனிக்கோட்டை நகரப் பஞ்சாயத்தில் நிதிநிலை சரியாக இல்லை. பஞ்சாயத்து வருமானம் அலுவலர்களுக்குச் சம்பளம் கொடுக்கவும், மின்சாரக் கட்டணத்திற்கும்தான் போதுமானதாக இருக்கிறது. அதனால் பஞ்சாயத்து வரி செலுத்தும் மக்களுக்கு எந்தவிதமான வசதியும் செய்துகொடுக்க முடியவில்லை ஆகவே ரூரல், அர்பன் என்ற பாகுபாடு காட்டாமல் ரூரல் பஞ்சாயத்துக்களுக்குக் கொடுக்கும் சலுகைகளாகிய , என்.ஆர்.இ.பி., ஆர்.எல்.இ.ஜி.பி. போன்ற திட்டங்களின் சலுகைகளும் வீடு கட்டும் திட்டங்களும் தமிழகத்தில் இருக்கும் எல்லா பேரூராட்சிகளுக்கும் கிடைக்க வேண்டும்.

சினிமா வரியில் 60 சதவீதம் பேரூராட்சிகளுக்குக் கிடைக்கவும், எல்லாப் பஞ்சாயத்துக்களின் தெரு விளக்குகளைப் பொறுத்த வரையில் தற்போதுள்ள விதிகளை மாற்றி முன்பு மின்சார வாரியமே இவற்றைக் கண்காணித்து வந்ததுபோல மீண்டும் அவர்களுக்கே ஒப்படைத்துவிடவும் ஏற்பாடு செய் வேண்டும். இப்போது தெரு விளக்குகள் மாதக் கணக்கில்

எரியாமல் போகின்ற நிலைமை இருக்கிறது. மின்சார வாரியத்தினிடத்தில் ஒப்படைப்பதன் மூலம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களுக்கும், அங்கத்தினர்களுக்கும் அவதூறு ஏற்படாமல், அவர்கள் அவதூறுகளுக்கு அப்பாற்பட்டு பொதுமக்களின் வசதிகளுக்குக் குந்தகம் ஏற்படாத நிலைமையும் ஏற்படும்.

அடுத்து தேன்கனிக்கோட்டை வட்டாரத்திலே பட்டிகளுக்குள்ளே போக்குவரத்து வசதிகளே சரிவர இல்லாமல் குந்தகம் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக பஸ் போக்குவரத்து இல்லாமல் மக்கள் அவதிப்படுகிறார்கள். தேன்கனிக்கோட்டையிலிருந்து மதகொண்டபல்லி செல்லும் சாலைப்பணி ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் நிர்வாக இயக்குநர், தமிழ் நாடு கட்டுமானக் கழகம், கூடுதல் பொறுப்பு தலைமைப் பொறியாளர், நெடுஞ்சாலை, ஊரகப்பணித்துறை 5/1, தெற்கு மாட வீதி, வி.நகர் காலனி, சைதாப்பேட்டை, சென்னை-15 என்பவரால் இப்பணி துவங்கப்பட்டது. அந்த வேலை இன்னும் முடிக்கப்படவில்லை.

முதன்முதலிலே உதவிக் கோட்டப் பொறியாளர், நெடுஞ்சாலைத் துறை, கிராமச் சாலைகள் உட்கோட்டம், ஒசூர் என்பவரால் இப்பணி துவங்கப்பட்டு 16 கிலோ மீட்டர் தூரமுள்ள சாலை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, அதில் ஒரு பிரிவு இன்னும் முடிக்கப்படாமல் முடங்கிக் கிடக்கிறது. இதனைத் துரிதப்படுத்தி, தேன்கனிக்கோட்டையிலிருந்து மதகொண்டபல்லி போய்வர ஏதுவான வகையில் சாலைப்பணியை முடித்திட வேண்டும். இத்துடன் எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வரிசையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர்கள் இருந்த வரிசையில் ஒரு மைக் உடைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இன்றையதினம்தான் அது உடைக்கப்பட்டு இருக்கிறது.

* **டாக்டர் க. காஞ்சனா** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னைச் சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுத்து அனுப்பிய கிருஷ்ணகிரி தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, அதற்கு முழு முதற் காரணமாக விளங்கும் தமிழினத் தலைவர் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய பாதம் பணிந்து வணங்கி இந்த நிதி நிலை அறிக்கை கூட்டத் தொடரில் ஒரு சில கருத்துக்களைக் கூற விழைகிறேன்.

(பிற்பகல் 12–30)

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையினுடைய 'மைக்' ஒன்று ஒடிந்து கிடக்கிறது. யார் உடைத்தார் என்பது பற்றி அறிய முடியுமா? அதைப் பற்றி நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பின்னர் அறிவிக்கப்படும்.

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, this is a Public Property. இந்த மாதிரி 'மைக்' - ஐ யார் உடைத்தார்கள்? யாருடைய இருக்கை என்றெல்லாம் தெரிந்து அதுபற்றி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஓர் உறுப்பினர் மற்றொரு முஸ்லீம் உறுப்பினர் தொப்பியை அணிந்து கொண்டிருந்தார்).

திரு. எம். அப்துல் லத்தீப் : யாரோ புதிய முஸ்லீம் உறுப்பினர் வந்திருக்கிறார். அவருடைய பெயரை அறிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். (சிரிப்பு).

டாக்டர் க. காஞ்சனா : இந்தியத் துணைக் கண்டத்தில் வேறு எந்த மாநிலத்திலும்-எப்பொழுதும் அளித்திராத மாதிரியில் வேறு எவராலும் படைத்தளிக்க முடியாத வகையில் ஆக்கபூர்வமான, அறிவுபூர்வமான, அனைத்துத் தரப்பு மக்களின் நலனையும் உள்ளடக்கிய அபூர்வமான—ஈடு இணையற்ற இந்த நிதி நிலை அறிக்கையை அளித்த மாண்புமிகு முதல்வர் அவர்களை வணங்கிப் பாராட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன். I would like to congratulate our Hon. Chief Minister for this brilliant matchless, uncomparable and undebatable Budget.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மூன்றாம் நாளாக இந்த அவையிலே நிதி நிலை அறிக்கை பற்றிய விவாதம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஏதோ ஒரு காரணத்தைக் காட்டி மதிப்பிற்குரிய அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்களும், மதிப்பிற்குரிய இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களும் இந்த அவையை விட்டு வெளியேறு

1989 மார்ச் 29] [டாக்டர் க. காஞ்சனா]

வதிலேயே குறியாக இருக்கிறார்கள். நாங்கள் ஆளுங்கட்சி உறுப்பினர்கள். எங்களுடைய உயிரினும் மேலான தலைவர் அவர்கள் தாக்கப்பட்ட நேரத்திலே கூட, இந்த அவையிலே அமைதி காத்து, இந்த நிதி நிலை அறிக்கை தமிழின மக்களுக்கு எவ்வளவு முக்கியமானது என்பதை முழுவதுமாக உணர்ந்து இருக்கின்ற காரணத்தினாலே, இங்கே விவாதத்தில் விளக்க உரை அளிப்பதிலே, பாராட்டுவதிலே பங்கு பெற்றுக் கொண்டிருக்கிறோம். இதை நான் தெளிவாக இந்த அவையிலே குறிப்பிட விரும்புகிறேன்.

நம்முடைய முதல்வர் அவர்கள் அளித்திருக்கிற இந்த பட்ஜெட் நான் குறிப்பிட்டதைப் போல uncomparable and undebatable. இதிலே குற்றம் குறை கண்டுபிடிக்க வாய்ப்பு இல்லாத காரணத்தினாலேயே அந்த உறுப்பினர்கள் இப்படி ஏதோ ஒரு காரணத்தைக் காட்டி வெளி நடப்பு செய்கின்றார்கள். ஆக அவர்களே, எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கின்றவர்களே, முழுமையாகச் சொல்லாமல், வெளியிலே சொல்ல மறுத்தாலும் மறைத்தாலும், மக்கள் நம்முடைய நிதிநிலை அறிக்கையைப் பாராட்டுகிறார்கள் என்ற கருத்தினை இந்த மாமன்றத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பல்வேறு இனம், மொழி, கலை, கலாச்சாரம் கொண்ட இந்திய துணைக்கண்டத்தின் ஒற்றுமையை மாநில சுயாட்சியோடு கூடிய முழுமையான கூட்டாட்சி முறைதான் காப்பாற்ற முடியும் என்று கூறும் கழக அரசின் நிலை மாறா கொள்கைப் பற்றுறுதி போற்றி வரவேற்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

இவ்வரசு, பொறுப்பேற்ற இந்த இரண்டு மாதங்களில் மாண்புமிகு முதல்வர் அவர்களின் முயற்சியினால் சீராக அமைந்திருக்கும் மத்திய மாநில உறவுகள் மன நிறைவையளிக்கக் கூடியதாக இருக்கின்றன.

அண்ணா வழியில் அயராது உழைக்கும் தமிழினத் தலைவர் கலைஞர் யாத்தளித்துள்ள நிதிநிலை அறிக்கையின் அத்தனை அம்சங்களுமே போற்றுதற்குரியன. ஆயினும் தமிழ் மீதுள்ள தனிப் பற்றால், பாசத்தால் மனங்கவரும் தமிழ் மொழி வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்கும் இவ்வரசு இனி வருங்காலத்தில் செய்யவிருக்கிற பணி தலையாயதாக இருக்கிறது.

மதிப்பிற்குரிய உறுப்பினர் பலர் கடந்த நாட்களில் நிதிநிலை அறிக்கையையொட்டி, இந்த அவையிலே பல்வேறு கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறார்கள். நிர்வாகத்தைச் சீர்திருத்த வேண்டும் என்று எல்லோருமே வற்புறுத்திப் பேசியிருக்கிறார்கள். சீர்திருத்தங்கள் விரைந்து செயல்படுத்தப்

பட வேண்டும் என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது என்று நான் நம்புகிறேன். நிர்வாக வசதிக்காக மாவட்டங்களைப் பிரிப்பதும், அதற்கான பெயர்களைச் சூட்டுவதும் விரைவில் ஆராயப்படும் என்று நம் நிதி நிலை அறிக்கையில் காணப்படுகிறது.

என்னுடைய தருமபுரி மாவட்டம் மிக மிக மிகப் பின் தங்கிய மாவட்டம். நாடு சுதந்திரம் பெற்ற இந்த 41 ஆண்டுக் காலத்தில் எல்லா வகைகளிலும் எல்லோராலும் புறக்கணிக்கப்பட்டு வருகிற மாவட்டம் என்பதை வேதனையோடு குறிப்பிட விரும்புகிறேன். அதிலும் குறிப்பாக என்னுடைய கிருஷ்ணகிரி தொகுதியை உள்ளடக்கிய பகுதியின் பின் தங்கிய நிலையைச் சொல்வதற்கு ஒரு நாள் போதாது.

கிருஷ்ணகிரி நாடாளுமன்றத் தொகுதி—கிருஷ்ணகிரி, காவேரிப்பட்டினம், பர்கூர், ஓசூர், தளி, பாலக்கோடு ஆகிய சட்டமன்றத் தொகுதிகளைத் தன்னகத்தே கொண்டது. இவற்றுடன் பரந்து விரிந்து கிடக்கின்ற வட ஆற்காடு மாவட்டத்திற்குச் சொந்தமான திருப்பத்தூர், நாட்றாம்பள்ளி, வாணியம்பாடி ஆகிய சட்டமன்றத் தொகுதிகளையும் சேர்த்து, தனி மாவட்டமாக ஆக்கி, மூதறிஞர் இராஜாஜி அவர்கள் பிறந்த ஊரான ''தொரப்பள்ளி'' ஓசூருக்கு அருகாமையிலேயே இருக்கின்ற காரணத்தால், இந்த மாவட்டத்திற்கு 'இராஜாஜி மாவட்டம்' என்று பெயரிட வேண்டுமென்று அரசைக் கேட்டுக் கொள்கிறேன். மாவட்டத் தலைநகரை மையமாக இருக்கும் கிருஷ்ணகிரியில் அமைக்க வேண்டும் என்கிற என் பணிவன்பான வேண்டுகோளினையும் இந்த அவையில் தெரிவிக்கிறேன்.

தான் வாழ நினைக்காமல் தமிழ் வாழ ஔவைக்கு நெல்லிக்கனி அளித்த மன்னன் அதியமான் ஆண்ட தகடூர், இன்றைக்கு தர்மபுரி என்று மருவி வழங்கும் பகுதி எங்கள் மாவட்டத்தின் மற்றொரு பிரிவு. தர்மபுரி, மொரப்பூர், பென்னாகரம், அரூர், மேட்டூர், தாரமங்கலம் ஆகிய சட்டமன்றத் தொகுதிகள் அடங்கியது தர்மபுரி நாடாளுமன்றத் தொகுதியாக இருக்கிறது. இதனைத் தனி மாவட்டமாக ஆக்கி ''அதியமான் மாவட்டம்'' என அழைப்பது சாலப் பொருத்தமுடையதாக இருக்கும் என்கிற என் கருத்தினை பணிவோடு இந்த அவைக்குத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

அடுத்து, மக்கள் நல்வாழ்வு. ''நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'' என்பது முதுமொழி. Basically, I am a Zoologist; but I am a medical woman by profession.

1989 மார்ச் 29] [டாக்டர் க. காஞ்சனா]

என்னுள்ளே ஆயிரம் கருத்துக்கள், ஆயிரமாயிரம் எண்ணங்கள். கலைஞர் ஆட்சிக் காலத்தில் கண்ணிமைப் பொழுதில், கை நொடிப் பொழுதில் மருத்துவத் துறை தமிழ்நாட்டில் வளர்ச்சி பெற்று உன்னத நிலைக்குப் போய்விட வேண்டும் என்ற பேராவல் எனக்கு. ''சொல்வது யார்க்கும் எளிய அரியவாம் சொல்லிய வண்ணம் செயல்'' என்கிறது தமிழ்மறை. அரிதான காரியங்களைப் படிப்படியாகத்தான் நிறைவேற்ற முடியும். அறிவேன் நான் ; எனினும் வரும் ஆண்டில் 8 கோடி ரூபாய் செலவில் 120 தொடக்கச் சுகாதார நிலையங்களில் மருத்துவர் குடியிருப்புகள் இணைந்த கட்டிடங்கள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளதாக அறிக்கை கூறுகிறது. சொல்லவே வேதனையாக இருக்கிறது. பெரும்பாலான டாக்டர்கள் இது போன்ற குடியிருப்புகளை வாடகைக்கு விட்டு விட்டு, அருகாமையிலே இருக்கும் நகரங்களில் தான் வசிக்கிறார்கள். மாலை நேரங்களில் டவுனில் கன்சல்டேஷன் கிளினிக்குகள் வைத்து நடத்த டவுனில் குடியிருப்பது தான் உதவியாக, சௌகரியமாக இருக்கிறது என்று அவர்கள் கூறுகிறார்கள். அவசர சிகிச்சைக்கு, பிரசவ உதவிகளுக்கு மருத்துவர்கள் தொடக்க சுகாதார நிலையங்கள் உள்ள ஊர்களில் கிடைப்பதில்லை. எந்தக் காரணத்திற்காக இந்தச் சுகாதார நிலையங்கள் ஏற்படுத்தப்படுகின்றனவோ, அந்த நோக்கம் நிறைவேறுவதில்லை. டாக்டர்கள் சுகாதார நிலையங்களையொட்டி கட்டித் தரப்படுகின்ற குடியிருப்புகளில் கட்டாயமாக தங்கி இருக்க வேண்டும் என்பது வற்புறுத்தப்பட வேண்டும் என்ற என்னுடைய தாழ்மையான கருத்தினைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதைப் போலவே இந்த Maternity Ayahs என்றழைக்கப்படுகின்ற—தாய் சேய் நல விடுதியிலிருந்து பணியாற்றக் கூடிய நடத்தாட்டிகள், Child Welfare Officers என்று அழைக்கப்படுகின்ற குழந்தைகள் நல காப்பாளர்கள், பெரும்பாலும் மையங்களுக்குச் செல்லாமலேயே—மேலதிகாரிகளுக்கு ஒரு குறிப்பிட்டத் தொகையை கையூட்டாகக் கொடுத்து விட்டு நகரங்களிலே வசிப்பவர்களாக இருக்கிறார்கள். இவர்கள் கிராமங்களிலே இருந்து பணிபுரிய வேண்டுமானால்—அந்தந்த கிராமங்களிலேயோ அல்லது அருகிலுள்ள கிராமங்களிலேயோ இருக்கின்ற தகுதியுடைய பெண்களுக்கு இந்த வேலைகளைப் போட்டுத் தருவது சற்றுப் பயனுள்ளதாக இருக்கும் என்ற என் கருத்தினைத் தெரிவித்துக்கொள்ள விழைகிறேன்.

அடுத்து, கிருஷ்ணகிரியைப் பொறுத்தவரையில் தாலுக்கா Headquarters Hospital என்று பெயர்தானே ஒழிய, கிருஷ்ணகிரி அரசு பொது மருத்துவமனையில் ஒரு வசதியும் இல்லை. போதுமான கட்டிட வசதிகள் இல்லை. படுக்கை வசதிகள் இல்லாத நிலையில் நோயாளிகள் தங்கள் வீட்டிலிருந்து பாய்களை எடுத்து வந்து, மரத்தடிகளில் விரித்துப் படுத்துக் கொண்டிருக்கிறார்கள். குடி தண்ணீர் வசதி அறவே இல்லை. கிருஷ்ணகிரி நகராட்சியின் மக்கள் தொகை 85,000. சுற்றி இருக்கின்ற கிராமங்களின்

எண்ணிக்கை சுமார் 200. இவ்வளவு ஊர்களுக்கும் பெரிய ஆஸ்பத்திரி என்று சொல்லக் கூடியது கிருஷ்ணகிரி பொது மருத்துவமனை ஒன்றுதான். அன்றாடம் இந்த மருத்துவ மனைக்கு வந்து போகின்ற புறநோயாளிகள் (out-patients) எண்ணிக்கை 350-லிருந்து 400 என்று மருத்துவமனை ஏடுகள் கூறுகின்றன.

அடுத்து, என். எச். 45, 46 என்கிற இரண்டு தேசிய நெடுஞ் சாலைகள் சந்திக்கின்ற இடம் கிருஷ்ணகிரி. சாலை விபத்துக் களுக்கு இலக்கான பகுதி. (Accident-prone area ; accident-prone centre) அப்படி இருக்கக்கூடிய ஊரில் அமைந்துள்ள அரசினர் பொது மருத்துவமனையில் ஓர் எலும்பு சிகிச்சை நிபுணர் கூட இல்லை. எலும்பு முறிவுக்கு ஆளான நோயாளிகள் 45 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள தருமபுரிக்கு அனுப்பப்படுகிறார்கள்.

To see patients with fractured limbs and ribs, with all the pain and agony, travelling in ordinary vehicles like buses and cars to the District Headquarters Hospital in Dharmapuri, which is 45 km. away from Krishnagiri, is indeed a very pathetic scene. A few other patients are going to quacks and, finally, they end up with bone deformities due to mal-union of bones. Hence, I am requesting this Government to post an Orthopaedic Surgeon immediately to the Krishnagiri Government Hospital on humanitarian considerations.

(பிற்பகல் 12-40)

கிருஷ்ணகிரி பொது மருத்துவ மனையில் 3 புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டு, உபயோகப்படுத்தப்படாமல் கடந்த ஓராண்டுக் காலமாக, சில நேரங்களில் நோயாளிகளுடன் வருபவர்கள் பயன் படுத்துகிற இடமாகவும், பல நேரங்களில் சமூக விரோதிகளின் புகலிடமாகவும் இருக்கின்றன. ஏன் இந்தக் கட்டிடங்கள் கட்டப்பட்ட நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படாமல் இருக் கின்றன என்பதை விசாரித்து, உடனடியாக அந்தக் கட்டிடங்கள் நோயாளிகளின் உபயோகத்திற்கு விடப்பட வேண்டுமென்று நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். கிருஷ்ணகிரி சட்ட மன்றத் தொகுதியிலுள்ள மருத்துவமனைகள் பற்றிய, அவற்றி லுள்ள குறைபாடுகள் பற்றிய ஒரு முழு அறிக்கையை நான் நம்முடைய மாண்புமிகு சுகாதார அமைச்சர் அவர்களிடத்திலே அளிக்க உள்ளேன். உற்று நோக்கி, உதவுவார் என்று நம்பு கிறேன்.

நான் என்னுடைய மருத்துவப் பட்டப் படிப்பை சென்னை மருத்துவக் கல்லூரியிலே பயின்றேன். டாக்டர் கலைஞர் அவர் கள் பொறுப்பேற்றுக் கொண்டிருந்த காலத்தில் பயின்றேன் என்ற பெருமை, கர்வம் எனக்குண்டு. நான் பயின்ற கல்லூரிக்கு உடனடியாக என்னென்ன தேவை என்பதைக் கேட்டறிந்து, பார்த்தறிந்து, அதை இன்று சட்டமன்ற உறுப்பினர் என்ற முறை

1989 மார்ச் 29] [டாக்டர் க. காஞ்சனா]

யில் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவருவது என் கடமை என்றாலும், காலத்தின் அருமை கருதி, ஒரு சிலவற்றை மட்டும் இந்த அவையிலே சொல்ல விரும்புகிறேன்.

As far as the Madras Medical College is concerned, I would like to say that the Department of Surgery (including the Accident Surgery Ward) and the Department of Medicine (including the intensive Medical Wards) are giving maximum service to the public. But, while the various superspeciality departments had developed, largely at the cost of the Departments of General Surgery and General Medicine, it appears there has not been enough encouragement for increasing the facilities to these departments in spite of an ever increasing load of work on them. With a view to increase the standard of these two departments and to give them more facilities, the Government must elevate these departments into Institute of Medicine and Institute of Surgery.

Many sudden deaths in the Medical Wards can be prevented by the use of Cardiac defibrillator. The Assistants in the Medical wards are well versed in the use of the defibrillator which does not cost much. Therefore, each one of the general medical wards must be provided with a cardiac monitor-*cum*-defibrillator as a basic and essential item of emergency medicine and coming to AIDS—the new recurrence—Tamil Nadu is in the lead in the country for its active and exhaustive surveillance for AIDS detection—over 200 cases have been found to be positive in the blood for this disease. We do not know when these people will develop the full blown disease. Since senior staff members of Department of Medicine and Nursing have had specialised training in AIDS abroad, they should be utilised to set up infrastructure for Clinical Management of AIDS cases when such a need arises. I would also like to request this Government to set up small neucleus like AIDS clinics—which could be done with the help of the World Health Organisation and Government of India Health Department in District Head quarters Hospitals. Why I am stressing on this point is—invariably the carriers of this Acquired Immuno Deficiency Syndrome—are from all over Tamil Nadu and we do not know when this will become epidemic. I think here I can put a stop though temporarily to Hospitals and disease problems and coming back to my constituency, I Grade Municipality என்று சொல்லப்படுகின்ற கிருஷ்ணகிரிக்கு ஒரு பஸ் ஸ்டாண்டு கிடையாது. தனியார் வண்டிகளும், போக்குவரத்துக் கழகங்களுக்குச் சொந்தமான வண்டிகளுமாக கிட்டத்தட்ட 400 பேருந்துகள் ஒரு நாளில் கிருஷ்ணகிரிக்கு வந்து போகின்றன. பஸ் ஸ்டாண்டு வசதி இல்லாத காரணத்தால் இந்தப் பேருந்துகள் சாலைகளில் நிறுத்தப்பட்டு பொது மக்களுக்குப் பெரிதும் தொல்லையாக இருக்கின்றன. பயணிகள் படும் அவதி சொல்லத்

தரமன்று. உடனடியாக கிருஷ்ணகிரியில் அடுத்து வருகின்ற 25 ஆண்டுகளுக்கும் சேர்ந்து, நெரிசலை. வாகனப் பெருக்கத்தை, மக்கள் தொகைப் பெருக்கத்தைச் சமாளிக்கக் கூடிய அளவில் நிலையான, வசதியான ஒரு பேருந்து நிலையம் அமைய ஆவன செய்ய வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். நான் இடம் சம்பந்தப்பட்ட குறிப்புகள் அடங்கிய கடிதங்களை Director of Municipal Administration அவர்களுக்கும், நமது மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களுக்கும் அனுப்பி யுள்ளேன். ஆவன செய்ய வேண்டுகிறேன்.

பஸ் ஸ்டாண்டு பிரச்சினையைப் பற்றிப் பேசுகின்ற நேரத்தில் எங்கள் மாவட்டத்திலுள்ள 'அன்னை சத்யா போக்குவரத்துக் கழக'த்தைப் பற்றிச் சொல்லியாக வேண்டும்.

பொதுவாகவே தமிழ்நாட்டில் உள்ள போக்குவரத்துக் கழ கங்களின் எம்.டிக்கள் குட்டி ஜமீன்தாரர்களைப் போல இருக் கிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. விசாலமான ஏர் கண்டிஷன் செய்யப்பட்ட அறைகள்—ஆள், அம்பு, யானை, சேனை ஏராளம்! ஏராளம்!! இவர்களுக்கு, நம்முடைய தலை மைச் செயலகத்தில் இருக்கின்ற உயர்மட்ட அதிகாரிகளுக்குக் கூட நான் பார்த்தவரையில் அவ்வளவு வசதியான அறைகள் இல்லை.

எங்கள் மாவட்டத்தின் அன்னை சத்தியா போக்குவரத்துக் கழகத்தின் தலைமை அலுவலகம் தர்மபுரியில் இருக்கிறது. அன்னை சத்யா போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான —பழுதடைந்த வண்டிகள் ஏல விற்பனைக்காக நிறுத்தப்படு கின்ற இடம் ஓசூர். தர்மபுரி ஏ, எஸ்.டி.சி. ஆபீஸ் மிகப் பெரிய நிலப்பரப்பில் அமைந்துள்ளது. தனியார் — வாங்குவதற் காக — பள்ளிக் கூடங்களுக்கு, கம்பெனிகளுக்கு பஸ்களை வாங் குவதற்காக — வருகின்றவர்கள் ஓசூருக்குப் போய் பஸ்களைப் பார்த்து விட்டு வந்து, தர்மபுரி ஆபீசில் தகவல் கொடுக்க வேண் டும் என்கிற நிலை இருக்கிறது. விற்கின்ற கார்ப்பரேஷனுக்கு — அதிகாரிகளுக்கு கமிஷன் தொகைப் பெற்றுத் தருகின்ற ஏஜெண்ட் கள் பலர் ஓசூரில் இருக்கின்றார்கள். அது மட்டுமல்ல, சட்ட மன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் எம். டி.-ஐப் பார்ப்பதற் காக வெளியே நிற்கிறோம். உள்ளே டயர் கம்பனிக்காரர்கள், ஏஜெண்ட்கள் அளவளாவிக் கொண்டிருக்கிறார்கள், எம்.எல். ஏ-க்கள் பனிக் கணக்கில் காத்துக் கொண்டிருக்க வேண்டிய சூழ் நிலை இருக்கிறது. ஆயிரக் கணக்கில் — லட்சக் கணக்கில் இந் தப் போக்குவரத்துக் கழகத்தில் ஊழல் நடைபெறுகிறது. ஒரு டிக்கெட் அதிகமாகப் பஞ்ச் செய்து விட்டார் என்பதற்காகச் சஸ்பெண்டு செய்யப்படுகிற கண்டக்டர், ஒரு ஸ்டாப்பிங்கில் நிறுத்தவில்லை என்பதற்காக சஸ்பெண்டு செய்யப்படுகிற டிரைவர் எல்லாம் இருக்கிற சூழ்நிலை அங்கே இருக்கிறது

என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த போக்குவரத்துக் கழகங்களின் கணக்குகள் ஆடிட்டர் ஜெனரல் ஆபீசில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும், அங்கே அவை சரி பார்க்கப்பட வேண்டும் என்றும், இங்கே அவையில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மேலும் அங்கே ஓட்டுநர்களும், நடத்துனர்களும், பணிமனையில் வேலை செய்பவர்களும் அடிமைகளைப் போல் நடத்தப்படுகிறார்கள். அதிகாரிகளை நத்திப் பிழைக்கத் தெரிந்த ஒரு சிலரைத் தவிர, மற்றத் தொழிலாளர்களின் நிலை மிகவும் பரிதாபமாக உள்ளது.

''ஜாதி உயர்வென்றும், தனத்தால் உயர்வென்றும்,
போதாக் குறைக்குப் பொதுத் தொழிலாளர் சமூகம்
மெத்த இழிவென்றும், மிகுபெரும்பாலோரையெல்லாம்
கத்திமுனைக் காட்டி காலமெலாம் ஏய்த்துவரும்
பாவிகளைத் திருத்த நம் ஆவிகளையேனும் அர்ப்பணம்
செய்வோம்''

என்று செயல்படும் கலைஞரின் அரசு இந்தப் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களின் துயர் துடைக்க, இத்துறையில் மண்டிக் கிடக்கும் ஊழலை அகற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பெண்ணினத்தின் பண்பார்ந்த மேன்மைக்காகப் பெரிதும் பாடுபடும் இந்த அரசு.

''புலனற்றப் பேதையாய்ப் பெண்ணைச் செய்தால்
அந்நிலம் விளைந்த பைங்கூழ் நிலைமையும் அம்மட்டே''

என்பதை நன்குணர்ந்த இந்த அரசு, மகளிர் முன்னேற்றமின்றி சமுதாய மறுமலர்ச்சி இல்லை என்பதை முழுமையாக ஏற்றுச் செயல்பட விழைகிற இந்த அரசு, பெண் கல்வி மேம்பாட்டிற்காகவும், வேலைவாய்ப்புகளுக்காகவும் பெண்களுக்கு அளித்துள்ள சலுகைகளுக்கு என் இதய பூர்வமான நன்றியையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் தொடர்பாக எங்கள் மாவட்டத்தில் குறிப்பாக கிருஷ்ணகிரியில் ஒரு அரசு மகளிர் கலைக் கல்லூரி அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தயவு செய்து, நிதிநிலைமை சரியில்லை என்று இந்தக் கோரிக்கையை ஒதுக்கிவிட வேண்டாம். 1963-64 ஆம் ஆண்டுகளில் சேலம், தர்மபுரி மாவட்டங்கள் பிரிக்கப்படாமல் ஒன்றாக இருந்த காலகட்டத்தில் 25 லட்சம் ரூபாயை மத்திய அரசு ''ரெயில்வே செஸ் ஃபண்டு'' என்ற பெயரில் கொடுத்தது. இந்தப் பணத்தை குழந்தைகள் நலம், பொதுச் சுகாதாரம் ஆகிய வளர்ச்சிப் பணிகளுக்குப் பயன்படுத்த அன்று சேலம் மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் பிரித்துக் கொடுக்கப்பட வேண்டுமென்று அப்போதி

ருந்த தமிழக அரசு முதலமைச்சராக இருந்த பெரியவர் திரு. பக்தவத்சலனார் காலத்தில் ஆணை ஒன்று அனுப்பியது. ஆனால், சேலம் மாவட்டத்தினுடைய வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் பங்கு பெற்ற எம்.பி.க்கள், எம்.எல்.ஏக்கள் மற்ற ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்கள் எல்லாம் கலந்து ஆலோசித்து, இந்த 25 லட்ச ரூபாய் பணத்தைச் சேலம் மாவட்டத்தில் ஒரு மருத்துவக் கல்லூரி வருவதற்குப் பயன்படுத்திக் கொள்வோம் என்று தெரிவித்து, அதுவரை இந்தப் பணம் சேலம் மத்திய கூட்டுறவு வங்கியில் பிக்சட் டெப்பாசிட்டில் இருக்க வேண்டுமென்று முடிவு செய்து அவ்வாறே டெப்பாசிட் செய்யப்பட்டது. 25 ஆண்டுகளில் அந்த 25 லட்ச ரூபாய் பணம் எத்தனை கோடியாக வளர்ந்திருக்கிறது என்பதைத் கணக்குப் பார்த்தால்தான் தெரியும். அதில் தற்போது பிரிந்துள்ள தருமபுரி மாவட்டத்திற்குப் பாதி பணம் சேர வேண்டும். ஆமாம் தானே! அந்தப் பணத்தை எங்கள் கிருஷ்ணகிரியில் ஒரு மகளிர் கலைக் கல்லூரி ஏற்படுத்துவதற்கு ஒரு தொகையாகப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்கிற என் விருப்பத்தை இந்த மன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்லுகின்ற இந்த விவரம் நம் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். அனுபவமில்லாமல் நான் பேசுவதாக, இந்த யோசனையை கருத்தில் கொள்ளாமல் விட்டுவிடக் கூடாது.

உண்டானம்ம எனத் தொடங்கும் புறப்பாடலில்,

''அவருள், மூத்தோன் வருக என்னாது
அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்''

என்ற வரிகளுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்களும், பேராசிரியர் பெருந்தகை அவர்களும் பொருள் சொல்லச் சொல்ல, அவற்றைக் கேட்டுக் கேட்டே வளர்ந்தவள் நான். என்னுடைய கருத்தினை அரசு ஏற்றுக் கொள்ளும் என்ற முழு நம்பிக்கை எனக்கிருக்கிறது.

தற்போது கிருஷ்ணகிரி அரசுக் கலைக் கல்லூரியில் பி.காம், பாடம் இல்லை. நிறையப் பாடங்களுக்கு முதுகலை வகுப்புகள் இல்லை. கல்லூரி, அடுத்த ஆண்டு வெள்ளி விழா கொண்டாடப் போகிறது. அதற்குள்ளாகவாவது இந்தப் பாட வகுப்புகள் கிருஷ்ணகிரி கல்லூரிக்கு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கல்விக்கு 900 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்திருக்கிறீர்கள். எனவே என் வேண்டுகோளுக்கு செவி சாய்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1989 மார்ச் 29] [டாக்டர் க. காஞ்சனா]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் அனுமதியோடு ஒன்றை மட்டும் சொல்லி முடித்துக் கொள்கிறேன். கிருஷ்ணகிரி தொகுதியில் கடுமையான குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. பெண்மணிகள் ஒரு குடம் தண்ணீருக்காக 3 கிலோ மீட்டர், 4 கிலோ மீட்டர் சாலை வசதியில்லாத—கரடு முரடான பாதைகளில் நடந்து சென்று வருகிற காட்சி கண்களில் இரத்தம் வரச் செய்வதாக இருக்கிறது. கிருஷ்ணகிரி ஒன்றியம், வேப்பனபள்ளி ஒன்றியம், கெளமங்களம் ஒன்றியம் என்ற மூன்று ஒன்றியங்களும் கிருஷ்ணகிரி நகராட்சியும் என் தொகுதியில் அடங்கியிருக்கின்றன. அதில் 120 கிராமங்கள் இருக்கின்றன. ஒரு கிராமத்திற்குக்கூட உருப்படியாக குடிதண்ணீர் வசதி இல்லையென்பதை மிகவும் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், எங்கள் மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட 325 ஆழ்குழாய்க் கிணறுகளில் என்னுடைய தொகுதிக்கு 26 மட்டுமே ஒதுக்கியிருக்கிறார்கள். இது, ''யானைப் பசிக்கு அவல் பொரி'' என்பார்களே, அதுபோல இருக்கிறது. இந்த நிலையை மாற்றி மிகவும் வறண்ட பகுதியாக இருக்கின்ற என் தொகுதியிலுள்ள கிராமங்களுக்கு அதிகமான அளவில் ஆழ்குழாய்க் கிணறுகள் அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-50)

அடுத்தபடியாக, நான் பிறப்பதற்கு முன்னால் என்னுடைய கிருஷ்ணகிரி தொகுதியில் மின்சார வசதி எப்படியிருந்ததோ, அப்படியேதான் இன்றைய தினமும் இருக்கிறது. ஒரு சிறு 33/11 கிலோவாட் சக்தியுள்ள துணை மின்நிலையம்தான் கிருஷ்ணகிரியில் உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, பெருகிக் கொண்டு வரும் தொழில்களுக்கும் வீடுகளுக்கும் போதுமான அளவுக்கு மின்வசதி சப்ளை செய்ய 230 கிலோ வாட் துணை மின் நிலையத்தை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்னும் எத்தனையோ பிரச்சினைகள் இருக்கின்றன. நேரமின்மையால் பேசுவதற்கு வாய்ப்பு இல்லை. இந்த அளவுக்குப் பேச வாய்ப்பளித்த அனைவருக்கும் நன்றி தெரிவித்து என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

*திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மதிப்பிற்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவை முன் வைத்துள்ள நிதிநிலை அறிக்கை பற்றி, என்னுடைய கட்சி உறுப்பினர்கள் கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக, மகளிருக்கான பல திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. அதுமட்டுமல்ல, சமுதாயத்தில் சரிபாதியாகவுள்ள பெண்களுக்குச் சம நீதியும், அவர்தம் அடிமை நிலை மாறவும் அடிப்படையான திட்டங்களையும் இந்த அரசு மேலும் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பரம்பரைச் சொத்து தொடர்பாக இந்தச் சட்டத்தின் கீழ் ஆண் வாரிசுக்கு உள்ளது போன்று பெண் வாரிசுக்கும் சம உரிமை வழங்க வேண்டுமென்று வகை செய்து, 1956 ஆம் ஆண்டு இந்து வாரிசு உரிமைச் சட்டத்தைத் திருத்த முடிவு செய்துள்ளதை வரவேற்கிறேன்.

அதேபோல, நடக்கக்கூடிய திருமணங்கள் அனைத்தும் பதிவு செய்யப்பட வேண்டும் என்பதைக் கட்டாயமாக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால், எந்த முறையில் திருமணம் நடத்தினாலும், அதை எந்த மத ஆசாரப்படி நடத்தினாலும்—அத்தனை திருமணங்களும் பதிவு செய்யப்பட வேண்டுமென்று அரசு தீர்மானித்து, அதற்கான சட்டத் திருத்தத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உண்மையிலேயே ஒரு பெண்ணை ஏமாற்றி திருமணம் செய்து கொண்டு, பிறகு, நான் திருமணமே செய்து கொள்ளவில்லையென்று கூறக்கூடிய அவல நிலை மாறுவதற்காக அவசியம் இந்தத் திருமணங்கள் பதிவு செய்யப்பட வேண்டுமென்ற ஒரு உறுதியான நிலையை எடுத்து, அதனை அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, வாரிசு உரிமை என்று சொல்லும்பொழுது இன்னொரு விஷயமும் இருக்கிறது. ஒரு வேலையில் இருக்கக்கூடியவர் இறந்துவிட்டால், அவருடைய வாரிசுக்கு வேலை தருவதாகச் சொல்கிறார்கள், ஆனால் ஆண் வாரிசுக்கு வேலை தருகிறார்கள், பெண் வாரிசுக்கு வேலை தருவதில்லை. அதுவும் பெண் வாரிசு திருமணம் செய்து கொண்டால் நிச்சயமாக வேலை இல்லையென்று சொல்கிறார்கள். ஆனால் அதே சமயத்தில் ஆண் வாரிசு திருமணம் செய்து கொண்டால் அது அனுமதிக்கப்படுகிறது என்பதை நினைவூட்டுகிறேன். ஆகவே, வேறு குழந்தையே இல்லாத நேரத்தில் ஒரு பெண் மட்டும்தான் மகளாக இருக்கிறாள் என்று சொன்னால், அவளுக்கு நிச்சயமாக அந்த வேலை உரிமை தரப்பட வேண்டுமென்பதை நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, மகளிர் வளர்ச்சிக்காக, கல்வியை ஊக்கப்படுத்துவதற்காக ஐயாயிரம் ரூபாய் திருமணத்திற்காக உதவி செய்யக்கூடிய திட்டம் வரவேற்கத்தக்கது. ஆனால் இது வருங்காலத்தில் கல்வியை ஊக்குவிக்குமே தவிர இப்போது இருக்கக்கூடியவர்கள்—எட்டாம் வகுப்புக்குக் கீழே இருக்கக்கூடிய வறுமைவாய்ப்பட்டவர்கள்— —விஷயத்தில் உண்மையிலேயே ஏமாற்றம் அளிக்கக்கூடிய நிலை இருக்கிறது....

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அம்மையார் அவர்கள் பேசுகிறபோது, திருமணத்தை ஊக்கப்படுத்துவதற்காக 5 ஆயிரம் ரூபாய் என்று சொன்னார்கள். திருமணத்தை ஊக்கப்படுத்துவதற்காக அல்ல. குறைந்த அளவு 8-ஆவதாவது படித்தவர்களாக இருந்தால் 5 ஆயிரம் ரூபாய் வழங்குவது என்பது 8-வது வரையிலாவது பெண்களைப் படிக்க வைக்க ஊக்கப்படுத்துவதற்காகவே தவிர, திருமணத்தை ஊக்கப்படுத்த அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி பாப்பா உமாநாத் : கல்வியை ஊக்கப்படுத்துவது என்பது திருமணத்தை ஊக்கப்படுத்துவது என்று தவறுதலாக வந்திருக்கிறது. ஆகவே, இது வருங்காலத்தில் உள்ளவர்களை ஊக்குவிக்குமே தவிர, இப்போது இருக்கக்கூடிய நிலையில் ஏதாவது செய்ய முடியுமா என்பதை அரசு சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, திருச்சியில் வேளாண்மைக் கல்லூரி ஒன்று துவக்குவது என்பது வரவேற்கத்தக்கது. அந்தக் கல்லூரியை முசிரியிலோ, அல்லது லால்குடி பகுதியிலோ திறப்பது உசிதமாக இருக்கும் என்பதை ஒரு யோசனையாக இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதோடு, மருத்துவக் கல்லூரி ஒன்று திறந்தால், திருச்சியிலே பல்கலைக்கழகம் இருக்கக்கூடிய சூழ்நிலையில் உண்மையிலே பொருத்தமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மருத்துவக் கல்லூரி என்று சொல்லும்போது, எனக்கு ஒன்று நினைவுக்கு வருகிறது. நமது மதிப்பிற்குரிய காலஞ்சென்ற எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுது நம்முடைய எதிர்க்கட்சித் தலைவியாக இருக்கக்கூடிய செல்வி ஜெயலலிதா அவர்களுடைய நடனக் கச்சேரி அந்த மருத்துவக் கல்லூரி நிதிக்கென்று நடத்தப்பட்டதை நான் நினைவுக்குக் கொண்டுவர விரும்புகிறேன். பிறகு அது என்ன ஆயிற்று என்று எனக்குத் தெரியாது. நம்முடைய அரசு தக்க நடவடிக்கை எடுத்து, கூடுதலாகப் பணம் போட்டு அந்த மருத்துவக் கல்லூரியைத் தொடங்க வேண்டும். அதுவும் பல்கலைக்கழகப் பகுதியிலேயே ஏராளமான நிலங்கள இருப்பதையும் கவனித்து அவசியம் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பொன்மலையில் இருக்கக்கூடிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் பற்றி நம்முடைய அமைச்சரிடம் பேசியிருக்கிறேன். கவனிப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். இரண்டு மாதத்திற்குள்ளாக அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி, ஆரம்ப வேலைகளை யாவது துவக்க வேண்டுமென்று நான் வலியுறுத்துகிறேன

[திருமதி பாப்பா உமா நாத்] [1989 மார்ச் 29

அதேமாதிரி போரிங் குழாய்கள் போடுவதற்கான வேலைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும். இப்பொழுது கோடை கடுமை யாக வந்திருக்கிற சூழ்நிலையில் இதை உடனடியாகச் செய்ய வேண்டும். நம்முடைய அமைச்சர் அவர்கள் திருச்சிக்கு வந்து சர்க்யூட் ஹவுசில் தங்குவார்கள். அந்த சர்க்யூட் ஹவுஸ்ஸில் பணி புரியும் அரசு ஊழியர்கள் குடியிருக்கக்கூடிய காலனியில் குடிப்பதற்கு 5 நாட்களுக்கு ஒரு நாள் தண்ணீர் திறந்து விடப் படுகிறது. அதோடு மட்டுமல்ல, அங்கு பயன்படுத்தப்பட்டு வந்த சப்மெர்சிபிள் மோட்டார் இரண்டு ஆண்டுகளாகப் பழுது பார்க்கப்படாமல் கிடக்கிறது என்பதோடு மட்டுமல்லாமல், ஒவ்வொரு தடவையும் பழுதுபார்க்கப்படாமல் இருப்பதால் ஒரு வாரம் பூராவும் தண்ணீர் வராமல் இருக்கிறது என்பதையும், அதனால் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன என்பதையும் தெரிவித்து, அவசர கவனத்தோடு இதன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதுவும் வீட்டின் மேலே இருக்கக்கூடிய மேல் நிலைத் தேக்கத் தொட்டிகள் திறந்தே இருப்பதன் காரணமாக பலவித பூச்சிகள் வந்து விழுந்து செத்து, அந்தத் தண்ணீரைத்தான் மக்கள் குடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் ஞாபகப்படுத்தி அவசர நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்,

அடுத்து, நான் கூற விரும்புவது, பெண்களுக்குக் கழிப்பறை இல்லை. நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்து 40 ஆண்டுகளாகியும் நம்முடைய தமிழ்நாட்டில், என்னுடைய தொகுதியில் மட்டுமல்ல, பெரும்பாலான நகரப் பகுதிகளில் பெண்களுக்கு ஒதுங்குவதற்குக் கழிப்பறைகள் இல்லை. நான் சார்ந்திருக்கிற ஜனநாயக மாதர் சங்கத்தின் சார்பாகப் பல இயக்கங்கள் நடத்தி இருக்கிறோம். பலவிதமான திட்டங்களைக் கொண்டு வருவதாக முன்பிருந்த அரசாங்கம் சொல்லி வந்தது. ஆனால், அதைக் காலப்போக்கில் தள்ளி விடாமல் உடனடியாகப் பெண்களுக்குத் தேவையான கழிப்பறை வசதியைக் கட்டினால் மட்டும் போதாது, சுத்தப்படுத்தப்படாமல் பல இடங்களில் கக்கூசை இடித்தால் போதும் என்ற நிலை இருக்கிறது. நவீன முறையில், சுத்தம் செய்யப்படக்கூடிய முறையில் கழிப்பறை வசதியைச் செய்து தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திருச்சி மாவட்டம், செந்தண்ணீர்புரத்தில் எரிசாராய தொழிற்சாலையினுடைய கழிவு நீர் உய்யக்கொண்டான் வாய்க்காலில் விடப்படுவதன் காரணமாக, 15 ஆண்டுகாலமாக அந்த நீர் கெட்டுவிட்டது. அந்த ஆலையிலிருந்து வெளியேறும் கழிவுநீரைச் சுத்தப்படுத்த ஏற்பாடு செய்ய வேண்டும். அதோடு செம்பட்டு தோல் பதனிடும் தொழிற்சாலையினுடைய கழிவு நீரில் கெமிக்கல் கலந்து இருப்பதன் காரணமாக, குண்டூர், திருவெளிச்சிப்பட்டி பகுதியில் ஏறத்தாழ 400-க்கு மேற்பட்ட

ஏக்கர் நிலங்கள் பாழ்பட்டுக் கிடக்கின்றன. அவற்றில் பயிர் செய்ய முடியவில்லை என்பது மட்டுமல்ல, அந்தத் தண்ணீரைத் தொட்டால் தோல் எல்லாம் புண்ணாகக்கூடிய அளவுக்கு நிலைமை இருக்கிறது என்பதை நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதே மாதிரி, போலீஸ்காரர்களுக்குக் குடியிருப்பு கட்டி, அதில் அரசு ஊழியர்கள் குடியிருக்க வேண்டுமென்று தெரிவித்தார்கள். ஆனால், அந்த வீடுகள் வட்ட வடிவிலே ஜப்பானிய மாடலிலே கட்டியதாக இருக்கின்றன. அந்த வீட்டின் நடுவிலே கக்கூஸ் கட்டி இருப்பதால், கழிவு நீர், கட்டிடத்தின் கீழே போகாமல் இருப்பதால், குடியிருப்பவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். தவிர, ஹட்கோ நிறுவனம் ஏராளமான வட்டியைப் போட்டிருக்கிறது. இப்போது ரூ. 300-லிருந்து, ரூ 14,000 வரையில் வட்டி கட்டமுடியாமல் அவர்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அரசு அந்த வட்டியைத் தள்ளுபடி செய்ய முயற்சிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, பாசன வசதி என்பது மிகவும் மோசமாக இருக்கிறது. குளங்களையும் ஏரிகளையும் மராமத்து செய்ய வேண்டியது மிகவும் அவசியம். துப்பாக்கி, 'கன்' பாக்டரிகளுக்காக ஏராளமான விவசாயக் குடும்பங்கள் தங்களுடைய நிலத்தைத் தந்திருக்கிறார்கள். அப்படித் தந்ததற்கு அந்தக் கிராம மக்களுக்கு, பாதிக்கப்பட்டவர்களுக்கு வேலை தருவதாக வாக்குறுதி கொடுக்கப்பட்டது. ஆனால், ஒருவருக்குக் கூட இன்னும் வேலை வாய்ப்பு தரப்படவில்லையென்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, தமிழகத்தில் தொழில் துறையின் கேந்திரமானது பாயிலர் ஆலைத் தொழிற்சாலை. மிகுமின் நிலைய இயந்திரங்கள் உற்பத்தி செய்யக்கூடிய அந்தத் தொழிற்சாலைக்கு 1991 ஆம் ஆண்டு வரைதான் உற்பத்திக்கான ஆர்டர் இருப்பதாகத் தெரிகிறது. அதில் 14,000 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். அதனுடைய துணைத் தொழிலாக, இருக்கக்கூடிய தொழில்களில் 200-க்கு மேற்பட்ட சிறு தொழில்களும், அவற்றில் பணியாற்றக்கூடிய சுமார் 6,000 தொழிலாளர்களும் ஆக ஏறத்தாழ 20,000 தொழிலாளர்கள் அதில் பணியாற்றக்கூடிய நிலையில், அவர்கள் அவதிப்படக்கூடிய நிலைமை ஏற்படும். இந்தத் தொழிற்சாலை பாதிக்கப்படும் என்பதையும், அதனால் தொழில் வளர்ச்சியில் பெரிதும் சுணக்கம் ஏற்படக்கூடும் என்பதையும் கூறி இந்த நேரத்திலே மத்திய அரசு.....

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

(பிற்பகல் 1-00)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை அலுவல் நேரம் ஐந்து நிமிடங்கள் நீட்டிப்புச் செய்யப்படுகிறது.

திருமதி பாப்பா உமாநாத் : பாய்லர் ஆலைக்கு வரும் ஆர்டர்களை தடுத்து, அந்நிய முதலாளிகள் வெளி நாட்டிலிருந்து அவர்கள் இறக்குமதி செய்துகொள்ளலாம் என்று மத்திய அரசு போட்ட உத்தரவின் காரணமாகத்தான் திருச்சி நகரத்தில் திருவெறும்பூரில் இருக்கக்கூடிய மையமான தொழில் கேந்திரம் இன்றைக்கு மூடப்படக்கூடிய ஒரு அபாயம் ஏற்பட்டிருக்கிறது என்பதை நம்முடைய அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்து, மைய அரசை வற்புறுத்தி அந்த ஆர்டர்கள் பாய்லர் ஆலைக்குக் கிடைத்திடவும் வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்ய தனிப்பட்ட அந்நிய முதலாளிகளுக்கு அனுமதி தரக்கூடாது என்றும் மைய அரசை வற்புறுத்த வேண்டுமென்றும் நான் இந்த நேரத்திலே வேண்டிக் கொள்கிறேன்.

இன்னொன்று, உச்சவரம்புச் சட்டம். மிச்ச நிலத்தை வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கக்கூடிய ஏழை எளிய மக்களுக்குத் தருவதாகச் சொல்லப்பட்டது. ஆனால் உச்ச வரம்புச் சட்டம் வந்த பிறகு மிச்ச நிலம் யார் யாருக்குக் கொடுக்கப்பட்டது என்ற தகவலை நம்முடைய அரசாங்கம் அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். உதாரணமாக, திருச்சி மாவட்டத்தில் என்னுடைய தொகுதியில் இருக்கக்கூடிய சூரியூர் பகுதியில் 800 ஏக்கருக்கு மேற்பட்ட சீலிங் நிலத்தை வி. ஜி. பன்னீர்தாஸ், தைலா முதலியார் வகையறா ஆகியோர் தங்களுடைய சொந்த சொத்தாக ஏற்றுக்கொண்டு பிளாட் போட்டு விற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆக அந்த ஊரில் இருக்கக்கூடிய ஒரு சாதாரண விவசாயிக்கு ஒரு துண்டு நிலம் கூட இன்னும் கிடைக்கவில்லை. ஆகவே ஏராளமான நிலங்களை பினாமியாக இந்தச் செட்டியார், அந்தச் செட்டியார், மூக்கன், சுந்தரராஜ் என்று சொல்லி எல்லோர் பெயரிலும் இன்றைக்கு எடுத்து, அன்றைக்கிருந்த ரெவின்யூ டிபாட்மென்ட்டை சார்ந்திருக்கக்கூடிய சிலர் போலித்தனமான சர்ட்டிபிகேட்டுகளை கொடுத்து ஒரு சதுர அடி 35 காசுக்கு வி.ஜி. பன்னீர்தாசுக்கு ஏறத்தாழ 800 ஏக்கர் நிலம், அருமையான நிலம், இன்றைக்கு அவர் பிளாட் போட்டு விற்றுக்கொண்டிருக்கிறார். அந்த ஊரில் இருக்கக்கூடிய 10 அல்லது 15 கிராமங்களில் இருக்கக்கூடிய ஏழை எளிய விவசாயிகள் போன்ற மக்களுக்கு ஒரு வீட்டு மனையோ அல்லது சாகுபடி செய்ய நிலமோ தரவில்லை. ஏற்கெனவே எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்த போது எங்களுடைய அருமைத் தலைவர் காலஞ்சென்ற

அமரர் வி.பி. சிந்தன் அவர்கள் இந்தப் பிரச்சினையை பல முறையிலும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஆனால் அவைகளுக்கு இன்றைக்கும் நடவடிக்கையில்லை. நான் இன்றைக்கும் சொல்கிறேன். அது மோசடியான பட்டாவாக வழங்கப்பட்டது. வி. ஜி. பன்னீர்தாஸ் மிகவும் பணத்தால் அடித்து பலரை விலைக்கு வாங்குவார். உண்மையிலேயே சென்றமுறை இருந்த முதலமைச்சருக்கு அவர் செல்லப் பிள்ளையாக இருந்தவர். நிச்சயமாக நான் நம்புகிறேன், அவர் நம்முடைய முதலமைச்சருக்கு செல்லப் பிள்ளையாக இருக்க முடியாது என்பதை நான் அறிவேன். ஏற்கெனவே ஏமாற்றப்பட்ட பல நிலங்களை காப்பாற்றி இருக்கக் கூடிய..............................

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவரவர்களே, நிச்சயமாக நம்முடைய முதல்வர் அவர்களும், இந்த அரசாங்கமும் அவருக்கு உறுதுணையாக இருக்காது. இன்னும் சொல்லப்போனால், சேம்பர்ஸ் ஆப் காமர்ஸ் கொடுத்த வரவேற்புக் கூட்டத்தில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சூசகமாக அவரைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். சுமார் 200 கோடி ரூபாய் திட்டத்திலே வடசென்னையிலே வர வேண்டிய அனல் மின்சாரத் திட்டத்திற்கு அவர் குந்தகம் விளைவித்துக் கொண்டிருக்கிறார். எனவே அங்கு வந்திருந்தவர்களும்கூட நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எல்லாம் சேர்ந்து இன்புளுயன்ஸ் செய்து இப்படிப்பட்ட திட்டம் வருவதற்கு ஒத்துழைக்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்திருக்கிறார். அப்படிப்பட்டவர்களை இந்த அரசாங்கம் நிச்சயமாக உற்சாகப்படுத்தாது.

திருமதி பாப்பா உமாநாத் : எனவே உண்மையிலேயே நான் வயிற்றெரிச்சலுடன் சொல்கிறேன். 7, 8 வருடங்களாக நடவடிக்கை எடுத்தும்கூட அவர்கள் இன்றைக்கும் பிளாட் போட்டு 28 ஆயிரம், 30 ஆயிரம் ரூபாய்க்கு விற்றுக் கொண்டிருக்கிறார்கள். அந்த ரெவின்யூ டிபார்ட்மெண்டில் இருக்கிற சிலர் அவர்கள் கைக்குப் போயிருக்கிறார்கள். ஆரம்பத்தில் கலெக்டர் விஸ்வநாதன் இருந்தபோது, இதற்காக ஒரு உத்தரவு போட்டு எல்லா பட்டாவும் ரத்துச் செய்யப்படுமென்று சொன்னார். ஆனால் அவர்கள் கோர்ட்டுக்குப் போய் ஸ்டே வாங்கியிருக்கிறார்கள். 145 உத்திரவு போட்டால், ஸ்டே இருக்கும்போது அவர் மட்டும் நிலத்தில் போய் நுழையலாம்; ஆனால் ஆர்.டி.ஒ. நுழையக்கூடாது என்று சொல்லி விட்டு அவர்கள் நுழைந்திருக்கிறார்கள். அப்போது விடுமுறை கோர்ட் இருந்தபோது நம்முடைய அரசாங்க வக்கீலைப் பயன்

படுத்தி அது நடத்தப்பட்டிருக்கிறது. சொன்னால் நீங்கள் கோர்ட் நடவடிக்கை என்று சொல்லலாம். ஆனால் கோர்ட் நடவடிக்கையால் இன்றைக்கு பாதிக்கப்பட்டு இரண்டு வருடமாகிறது. நான் கேட்கிறேன். அரசு வக்கீல் அங்கு என்ன பண்ணுகிறார்? ஏன் அந்த ஸ்டேவை உடைக்கக்கூடாது? என்ன நடவடிக்கை எடுக்கிறார்? ஆகவே இப்படி— அரசாங்க வக்கீல்கள் எல்லோரையும் நான் சொல்லவில்லை— இந்த மாதிரி அவர்கள் கவனிக்காமல், ஜனங்களுக்கு இன்றைக்கு பெரிய பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் கூற விரும்புகிறேன். $1\frac{1}{2}$ ஆண்டுக் காலமாக இடைக்காலத் தடை இருக்கிறது. அதை ரத்துச் செய்ய வேண்டும். நம்முடைய அரசாங்க வக்கீலை கவனித்து, நம்முடைய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு 300 ஏக்கர் பிளாட்டுகள் கவர்ச்சிகரமான விளம்பரத்தோடு வி. ஜி. பன்னீர்தாஸ் விற்பனை செய்துகொண்டிருக்கிறார். அவர் நம்முடைய மெரினா பீச்சையே விலைக்கு வாங்கத் திறமை உள்ளவர். அப்படிப்பட்ட நபரை நிச்சயமாக வைக்க வேண்டிய இடத்தில் வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். திருச்சி ஜவுளி முதலாளி தைலா முதலியார் ஏராளமான நிலத்தை வாங்குகிறார். அந்தப் பக்கம் நடக்கக்கூட முடியாது. என்னுடைய தலைமையில் ஒரு முறை மறியல் போராட்டமே நடத்தினேன். அந்த நிலத்தை எல்லாம் எடுத்து ஜனங்களுக்குக் கொடுக்க வேண்டும். கோர்ட் நடவடிக்கைகளை துரிதப் படுத்த வேண்டும். ஆக்கிரமிப்புகளை அகற்றி அனைத்து பட்டாக்களையும் ரத்துச் செய்யவேண்டும். டி.டி.பி. அனுமதிகளை ரத்துச் செய்து, ஊழலுக்கு உடந்தையாக இருந்த அனைத்து அதிகாரிகளையும் வேலை நீக்கம் செய்து நடவடிக்கை எடுத்து, சீலிங் விதிமுறைகளுக்குட்பட்ட இப்பகுதியில் இருக்கக்கூடிய மற்ற ஏழை எளியவர்களுக்கு நிலத்தை அளிக்க வேண்டும் என்று வலியுறுத்தி அமைகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, பேரவை மீண்டும் நாளை 30—3—1989 காலை, 9-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-05 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

1989 மார்ச் 29]

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

17. 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு புயல்பாதிப்பு கட்டிடங்கள் கட்டுமான தனி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 2–1–1987 ஆம் நாளிட்ட 1 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

18. 1940 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் துறையின் 2–12–1986 ஆம் நாளிட்ட 3323 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

19. முந்தைய உணவு மற்றும் வேளாண்மைத் துறையினரால் வெளியிடப்பட்ட 10–12–1963 ஆம் நாளிட்ட II-1, 62/1964 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 16–3–1987 ஆம் நாளிட்ட 331 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

20. தஞ்சையைச் சார்ந்த திருவாரூர் மற்றும் பூதலூர் அங்காடி குழுக்களின் முகவரிகளை பரிமாற்றிக் கொள்வது குறித்து வேளாண்மைத் துறையின் 29–9–1987 ஆம் நாளிட்ட 1885 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 28/1959) 29 (4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

21. திருநெல்வேலி, திருவேங்கடம் அங்காடிக்கு அங்காடிகள் பகுதியினை அறிவிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 29–9–1987 ஆம் நாளிட்ட 1886 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 28/1959) 29 (4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

22. அரூர் அங்காடிப் பகுதியிலிருந்து சில கிராமங்களை நீக்குவது மற்றும் பாப்பிரெட்டி அங்காடிப் பகுதியினை அறிவிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 21–12–1987 ஆம் நாளிட்ட 2311 ஆம் எண் அரசாணையில் வெளியிடப் பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 28/1959) 29 (4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற் றது].

23. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் 1986–87 ஆம் ஆண்டிற்கான ஐந் தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.

43. 1988–89 ஆம் ஆண்டு கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளும், விரிவான துணை மதிப்பீடுகளும். (தமிழ், ஆங்கிலம்).

44. 1988–89 ஆம் ஆண்டு கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்).

45. 1988-89 ஆம் ஆண்டு இறுதித் துணை மதிப்பீடுகள் பற்றிய மாண்புமிகு முதல் அமைச்சர் டாக்டர் மு. கருணாநிதி அவர்களின் உரை. (தமிழ், ஆங்கிலம்).

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS